# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12,

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12,



தரம் தெரிந்தவர்கள் பாவிப்பது

மில்க்  வைற்


நீல சோப்



புத்தகம்19 | திருவள்ளுவர் ஆண்டு 1997 மாசி திங்கள் 23-ம் நாள் (6—3—1966) ஞாயிற்றுக்கிழமை துல்க 12 | இதழ் 41


# தனி அரசியற் திட்டம் தீட்ட எதிர்க்கட்சிகள் செய்யும் ஏற்பாடு

புதிய அரசியற் திட்டம் ஒன்று இலங்கைக்கு வேண்டுமென்ற பிரச்சினையைப் பெரிதுபடுத்தி அரசாங்கக் கட்சியின் செல்வாக்கைக் குறைக்க எதிர்க்கட்சிகள் பரவலான தங்கள் ஏற்பாடுகளையிட்டு ஒரு முடிவுக்கு வந்துள்ளார்கள் என்று அறியப்படுகிறது. உத்தியோக பூர்வமற்ற முறையில் முற்றிலும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தெரிவுக்குழுவை நியமித்து, அக்குழு தயாரிக்கும் புதிய அரசியற் திட்டத்தை மக்கள் முன் வைத்துப் பிரச்சாரம் செய்வதே எதிர்க்கட்சிகளின் இன்றைய திட்டம் என்றும் நம்ப முடிகிறது. அந்த ஏற்பாட்டுடனேயே எதிர்கட்சிகள் புதிய அரசியற் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டுமென்ற பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்கள் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இன்றைய அரசியலமைப்பு முறை இலங்கையின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது என்றும், பூரண சுதந்திரம் கொண்ட முழு இறைமையுடைய ஒரு அரசை நிறுவக்கூடியதாக நாட்டின் அரசியல் அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற பிரச்சாரத்தை முழு அளவில் முடுக்கி விடுவதற்கான சகல ஏற்பாடுகளையும் எதிர்க்கட்சிகள் பரவலாகத் தயார் படுத்தி விட்டார்கள் என்று தெரிகிறது.

இத்திங்கள் எட்டாம் நாளன்று புதிய அரசியற் சட்ட தெரிவுக் குழு பற்றிய அரசாங்கக் கட்சியின் தீர்மானத்தை எதிர்ப்பதுடன், அக்குழுவில் கடமையாற்றுவதற்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களான திருவாளர்கள் பீற்றர் கெனமன், லெஸ்லி குணவர்த்தனு, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, மைத்திரிபால சேனநாயக்கா, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோர் தமது நியமனத்தைத் துறந்து, அக்குழுவைப் பகிஷ்கரிப்பர் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. இந்த நோக்கத்துடனேயே எதிர்க்கட்சியினர் தனியாக அரசியற் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை முன் வைத்திருக்கிறார்கள் என்றும் நம்பப்படுகிறது.

எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட உத்தியோகப்பற்றற்ற ஒரு தெரிவுக்குழுவின் மூலம்புதிய அரசியற் திட்டத்தை உருவாக்கி அதை மக்கள் முன் வைத்துப் பிரச்சாரம் மேற்கொள்வதே எதிர்க்கட்சியினரின் முடிவான திட்டம் என்றும் தெரிகிறது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் கொண்ட தெரிவு குழு தயாரிக்கும் புதிய அரசியற் திட்டத்தில் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் இன்றைய அரசியல் அமைப்பு முறையில் உள்ள 29வது பிரிவு இருக்க மாட்டாது என்றும், மூதவை, சனப்பிரதிநிதிகள் சபைக்கு நியமன உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் முறைகளுக்கு இடமிருக்கமாட்டாது என்றும், ஒற்றையாட்சி முறைக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவிப்பது தேசத் துரோகம் என்று கருதக் கூடியதான பிரிவுகளும், கோமறைச் சபைக்கு முறையீடு செய்யும் உரிமையைத் தடைப்படுத்தும் முறையிலும், அரசாங்க சேவை ஆணைக் குழுவைக் கலைக்கக் கூடியதாகவும் இருக்கும் என்று தெரிகிறது.

அடுத்த பொதுத் தேர்தலின்போது தாங்கள் தயாரித்துள்ள அரசியற் திட்டம் நடைமுறைக்கு வந்தால் இலங்கை முழுச் சுதந்திரமுடைய நாடாகத் திகழும் என்றும், காலனி ஆட்சியின் சிறு நிழல்தானும் இருக்க முடியாது என்றும் கூறி தம்மை அதிகாரத்திற்கு அனுப்பும் வண்ணம் எதிர்க்கட்சிகள் மக்களிடம் சென்று பிரச்சாரம் மேற்கொள்ளலாம். அதே நேரத்தில் ஐக்கிய தேசியக்கட்சி இன்றைய அரசியற் திட்டத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு நாட்டை அன்னியருக்கும், சிங்கள மக்களைத் தமிழ் மக்களுக்கும் காட்டிக் கொடுப்பதுடன், பிரிவினை முயற்சிக்கு ஊக்கமளிக்கிறது எனப் பிரச்சாரம் செய்யும் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.


'சர்வர் சுந்தரம்'

போட்டி விபரம்

12 பக்கம்


## 'சுதந்திரன்' செய்தி தப்பவில்லை

யாழ். நகரசபை முதல்வர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு திரைமறைவில் முக்கூட்டு முயற்சி ஒன்று உருவாகி வருவதாக கடந்தவாரம் நாம் வெளியிட்ட செய்தி இப்பொழுது உண்மையாகிவிட்டது.

பொ. கட்சியினரும், துரையப்பா குழுவினரும், சமசமாசக் கட்சியினருமே இம் முயற்சியின் காரண கர்த்தாக்களாவர்.

யாழ். நகரசபை முதல்வர்கள் மீது தொடர்ச்சியாக நம்பிக்கையில்லாத் தீர்மானம்கொண்டுவரும் முயற்சியில் பொ. கட்சியினரும், துரையப்பா குழுவினரும்ஈடுபட்டிருப்பதையிட்டு யாழ்ப்பாண வரியிறுப்பாளர்கள் பெரிதும்வெறுப்படைந்திருக்கிறார்கள். அடுத்த மாநகர சபைத் தேர்தலை யாழ். வாக்காளர்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானக் 'காதலர்' களான எம். எம். சிக்களுக்கு அடுத்த தேர்தலில் நல்ல பாடம் படிப்பிக்க வேண்டுமென்பதே யாழ். வாக்காளர்களின் ஒரே அவாவாகும்.

யாழ். மாநகரசபையை உடனடியாகக் கலைத்து ஒரு புதிய தேர்தலை நடாத்தும் வண்ணம் உள்ளூராட்சி அமைச்சரை கேட்பதற்கு ஒரு குழு வெகு விரைவில் கொழும்பு வரலாம் என்றும் அக் குழு அமைச்சரை யாழ்ப்பாணத்திற்கு வருமாறுகேட்கும் என்றும் நமது யாழ்.நிருபர் அறிவித்துள்ளார்.

## 4 தமிழரசு பா. உ. கள் மலாயா செல்கிறார்கள்


ஏப்ரல் திங்கள் 22 ம் நாளன்று கோலாலம்பூரில் ஆரம்பமாகவிருக்கும் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு இலங்கையிலிருந்து முப்பதிற்கும் மேற்பட்ட அறிஞர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்நத நாலு பாராளுமன்ற உறுப்பினர்களும் இம் மாநாட்டுக்குச் செல்வார்கள் என்று தெரிகிறது.

மலேசியாவிலுள்ள கோலாலம்பூரில் ஏப்ரல் திங்களில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்கு உலக நாடுகளிலிருந்து 200 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். இந்தியாவிலிருந்து தி. மு. கழகத்தலைவரும் சென்னைச் சட்ட சபை எதிர்க்கட்சித் தலைவருமான நாவலர், இரா. நெடுஞ்செழியன், ம. பொ. சி., பேராசிரியர் தெ. பொ. மீ., பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை உட்பட 55 க்கும் மேற்பட்ட தமிழறிஞர்கள் செல்வார்கள்.

இலங்கையிலிருந்து திரு. அ. அமிர்தலிங்கம் பா.உ., சி.மூ. இராசமாணிக்கம் பா. உ., செந்தமிழ்க்கலைமணி கா. பொ. இரத்தினம் பா. உ., சி. கதிரவேற்பிள்ளை பா. உ., பேராசிரியர்கள் கா. குலரத்தினம், வி. செல்வநாயகம், ஆ. சதாசிவம், நீதியரசர்கள் பொ. சிறீஸ்கந்தராசா, எச். டபிள்யூ. தம்பையா உட்பட முப்பதுக்கும் மேற்பட்ட அறிஞர்கள் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாநாட்டில் பார்வையாளராகக் கலந்து கொள்வதற்கு இலங்கையிலிருந்து நூற்றுக்கு மேற்பட்டவர்கள் செல்வார்கள் என்று தெரிகிறது.

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுடன் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் செல்வார்கள்.



எஸ்·பொன்னுத்துரை

செந்தில்நாதன் ஈச்சேரில் சரிந்தார். அன்னலட்சுமி சுவரில் சாய்ந்தபடி இருக்கிறாள். செல்லப்பாக்கிய ஆச்சி அடுக்களையில் காலையிலே சுற்றியெடுத்து, கொல்லைக்குப் போகத் துணையாக வரித்துக் கொண்ட 'சுத்து' இப்பொழுதுதான் தன்னுடைய இறுதி யாத்திரையை இயற்றிக் கொண்டிருக்கின்றது. 'குற'ளை நாள் முழுவதும் பக்குவப்படுத்துவதில அவ்வளவு கெட்டித்தனம் இருக்கவில்லை. ஆனால், இந்நேரத்தில் வாயில் வைத்து நெருப்பு மூட்ட இயலாத அந்தச் சின்னஞ் சிறு துண்டை, பழுத்த பூவரசம் இலைச் சுருளுக்குள் வைத்துப் புகையிழுத்துச் சுகிப்பதற்கு நிச்சயமாகக் கலைத்தேர்ச்சி தேவை. செல்லப்பாக்கிய ஆச்சியின் புகைபிடிக்கும் இந்தப்பழக்கத்தை எல்லோரும் அறிவார்கள். இருப்பினும், மருமகனுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையை உத்தேசித்துத்தான் அடுக்களையில் ஒளிவு மறைவாகக் கருமம் பார்க்கிறாள்.

ஸ்ரீகாந்தன் புதிதாகக் கிடைத்த 'விசி'லைப் பலங்கொண்டு ஊதுகின்றான்.

'உதார், ரா இருட்டிலை ஊதுற? பூரான் பொட்டுகளெல்லாம் வீட்டுக்கை வரப்போகுது...புள்ளை, அதைப் பறிச்சுவை. நாளைக்கு ஊதி விளையாடலாம்...' என்று செல்லப்பாக்கிய ஆச்சி குரல் கொடுக்கிறாள்.

இதற்கிடையில், ரோகினி தன் அண்ணனுடைய 'விசி'லைத் தன்னுடையதாக்குவதற்காக அழுகைக் 'கச்சேரி'யை நடத்தி முடிக்கின்றாள். கைமாறிய 'விசி'லுக்குள் துப்பல் நிறைத்துத் தும்பி ஊதியும், ஓசை வராததைக் கண்டு சலிப்புக் கொள்ளும் பொழுது, சாந்தினி தன்னுடைய கெட்டித்தனத்தால் நிலைமையைச் சீராக்குகின்றாள். அவள் கைகளை மடித்து, விரல்களின் அபிநயங்களினால் சுவரிலே பல நிழல் உருவங்கள் தோன்றுபடி செய்து ரோகினிக்கு மகிழ்வூட்டுகிறாள்.

மேசையிலே அமர்ந்து படித்துக் கொண்டிருந்த மாலினி நித்திரை 'நிறு'க்கிறாள். ரோகினியும் வெறும் நிலத்தில் உடல் நீட்டி விடுகிறாள்.

அடுக்களையிலிருந்து வெளியே வந்த செல்லப்பாக்கிய ஆச்சி, 'உங்கைபாரன் புள்ளையள் நித்திரை கொள்ளுதுகள்... சாப்பாட்டைக் குடுத்துப் படுக்க வையன்...' என்று விஷயத்தை ஞாபகப் படுத்துகின்றாள்.

ஒரு சருவச் சட்டியில் இடியப்பமும், சொதியும் போட்டுக் குழைத்துப் பிள்ளைகள் எல்லோருக்கும் ஊட்டுகிறாள் அன்னலட்சுமி. தூண் சமைக்கும் நிழல் மறைப்பில், மருமகனுக்கு மரியாதை கொடுத்து ஒதுங்கியிருக்கிறாள் செல்லப்பாக்கிய ஆச்சி.

பிள்ளைகளுக்குச் சாப்பாடு ஊட்டும் பராக்கில், அன்னலட்சுமி பல நாள் நடைபெற்ற ஊர்க்கதைகள் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் செந்தில்நாதனிடம் சொல்லிவிட வேண்டுமென்று ஆசை கொண்டவளைப்போல சொல்லிக் கொண்டிருக்கின்றாள். ஊரிலே நிகழ்ந்த கல்யாணங்கள்-சாமத்தியச் சடங்குகள்- மரணங்கள்- பிணக்குகள் ஆகியன பற்றிய அறிவிப்புகளே பெரும்பாலும் இடம்பெற்றன. பல அறிவிப்புகள் காலந்தாழ்த்திக் கிடைத்தாலும் அவை செந்தில்நாதனுக்கு முதல் தரம் கேட்பவையாகவே படுகின்றன. தூணின் நிழல் மறைவிலே அமர்ந்திருந்த செல்லப்பாக்கிய ஆச்சி செந்தில்நாதன் தம்பதிகளின் அதி சுவாரஸ்யமான பேச்சிலே அதிகம் குறுக்கிடவில்லை. ஆனால், செந்தில் நாதனுக்குத் தேவையான விளக்கவுரைகளை 'அருள'வும் அவள் பின் நிற்பதில்லை. அன்னலட்சுமி மொட்டையாகச் 'சுப்பிரமணியம் செத்துப் போனார்' என்று சொல்லுவாள். கொழும்புச் சீவியத்தினால் அவர் பலருடைய முகங்களை மறந்து போனார். 'யார் இந்தச் சுப்பிரமணியம்' என்பது அவருடைய மனத்திரையிலே தெளிவாக விழுவதற்கு செல்லப்பாக்கிய ஆச்சி மேற்படி சுப்பிரமணியத்தின் மூன்று தலைமுறைகளை ஆதியோடு அந்தமாக விளக்கிச் சொல்லிவிடுவாள்.

அவருடைய செவிகளிலே பல செய்திக் கணுக்கள் விழுந்தன.

லொறியிலே புகையிலைச் சிப்பம் ஏற்றச் சென்ற பக்கத்து வீட்டுக் கந்தசாமியைப் பின்னேரம் வெறும் கட்டையாகக் கொண்டு வந்தார்களாம். 'பாவம், நாலு பெம்பிளைப் பிள்ளையளையும் தாயையும் ஒரு கையாலை உழைச்சுக்காப்பாத்தின மனுஷன்' என்று அன்னலட்சுமி அனுதாபப் படுகின்றாள்.

'இவனுக்கு இதுக்கு முந்தியும் 'ஹாட் ஃபெயிலியர்' வந்திருக்க வேணும். அதை இந்த மோடன்கள் களைப்பு எண்டு நினைச்சிருக்க வேணும். அண்டைக்குத தீராத களைப்பாக முடிஞ்சு போச்சாக்கும்' என்று செந்தில்நாதன் அனுதாப பூர்வமாக நினைத்துக் கொள்ளுகின்றார்.

நல்ல வெயிலிலே வீடு வேயச் சென்ற கணபதிப் பிள்ளைக்குத் திடீரென்று முடக்கு வாதம் போல வந்து நாக்கு விழுந்து விட்டதாம். நாலு நாள் மனுஷன் கதைக்கமுடியாமலே இருந்து கண்களை மூடினாராம். 'இப்ப கண்டறியாத புதுப்புது நோயெல்லாம் வருகுது புதிசு புதிசா மருந்துகளைக் கண்டு பிடிக்கப் புதிசு புதிசா நோயளும் வருகுது' என்று செந்தில்நாதன் நினைத்துக் கொள்ளுகின்றார்.

'சுத்துமதில்' வீட்டுச் சுப்பையாபிள்ளை மூளாய் ஆசுப்பத்திரியிலே படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். ஒரு மாதத்திற்கு மேலாகின்றது; இன்னும் ஒரு நயத்தையுங் காணவில்லையாம்.

'அவன் இஞ்சை இருக்கிறவங்கள் எல்லாரையும் அள்ளி வறுகித்தானே சம்பாரிச்சவன்? பழி சும்மா விடுமே? கிடந்து அழுந்துறான்' என்று செந்தில்நாதன் வாய்விட்டே கூறுகின்றார்.

மங்கலமான செய்திகளும் வந்தன.

வெகுகாலமாக வைரப் பகை பாராட்டிய இரண்டு குடும்பங்கள் கல்யாணம் ஒன்றினால் இணைந்துவிட்டன. 'என்னதான் வெட்டுக் குத்துப்பகையாக இருந்தாலும் இனசனமெண்டால் ஒரு நாளைக்கு ஒண்டுசேரத்தானே வேணும்? இவ்வளவு காலமும் விரோதமாக இருந்த சாம்பசிவத்தார் பொம்புளை கேட்கப்போக, சின்னவர் ஒரு மறுப்பும் சொல்லாமல் ஒப்புக்கொண்டிட்டார். ரெண்டு நாளுக்குள்ளை அவசர அவசரமாக் கல்யாணமும் ஒப்பேறிப் போச்சுது...' அன்னலட்சுமி தன்னுடைய விளக்கக் குறிப்பையுஞ் சேர்த்தே கூறுகின்றாள்.

இந்த நேரமாகப் பார்த்துச் செல்லப்பாக்கிய ஆச்சி 'அசுக்கிடாமல்' அடுக்களைப் பக்கம் மீளுகின்றாள்.

'எணேய், சின்னவரின்ரை குணம் உனக்குத் தெரியாதே? ஒரு விஷயத்தைச் சல்லிசாக முடிக்கலாமெண்டால் அவர் ஆயிரம் கோவத்தையும் ஒரு நிமிஷத்திலை மறந்துபோவார். ஆள் உதுகளிலை வலு சுழியனல்லோ?'- செந்தில்நாதன் தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிடுகின்றார்.

இவ்வாறு அவர்களுடைய பேச்சுப் பல கிளைகளைத் தாவி வளர்கின்றது. சாப்பிட்டு முடித்த பிள்ளைகள் நித்திரையிற் சுருளுகிறார்கள். செல்லப்பாக்கிய ஆச்சி படுக்கிற பாயிலே சாந்தினியும் ஸ்ரீகாந்தனும் வளர்த்தப்படுகிறார்கள். அவர்கள் அவளுடன் படுப்பதுதான் வழக்கம். மாலினி மூத்தவள். அவள் இப்பொழுதெல்லாம் தனிப் பாயில் படுக்கப் பழகிக் கொண்டாள். வேறொரு பாயை விரித்து, அதன் குறுக்குப்பாட்டிலே ரோகினியும் 'கடைக்குட்டி' ஜெயகாந்தனும் படுக்க வைக்கப் படுகிறார்கள்.

பிள்ளைகள் தூங்குகிறார்கள்; செல்லப்பாக்கிய ஆச்சி அடுக்களையில் வேலையாக இருக்கிறாள்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அன்னலட்சுமி ஊரிலே நடந்தேறிய அதி விசேட செய்திகளை மிக இரகசியமான குரலிலே சொல்லத் தொடங்கினாள்.

கல்யாணம் முடிக்க ஒரு மாதத்திலே புருஷனை விட்டுப் பிரிந்து வீட்டுடன் வந்திருந்தபுஷ்பம், பிள்ளை ஒன்று கரைத்திருக்கிறாளாம்.

கொழும்பிலேயே இவள் நடத்தை சரியில்லையென்று கண்டுதானும் புஷ்பத்தை அவள் புருஷன் வீட்டுக் கொண்டுவந்து விட்டிட்டுப் போனவராம். ஆனால், தன்னை முடிப்பதற்கு முந்தியே தன் புருஷனுக்கும் வேறொரு சிங்களத்திக்கும் தொடுப்பாம்; இதைஅறிஞ்சதால்தான் கோவித்துக் கொண்டு வந்திருப்பதாக இவள் சொல்லுகிறாளாம்.

விரகத்தியரின் மூத்தமகள் பவானி, காசிநாதனுக்குக் காதற்கடிதம் எழுதிப் பிடிபட்டுப்போனாளாம். அவளுக்கு இவன் தாரத்து அண்ணன் முறையாம்.

இத்தகைய சுவாரஸ்யமான பேச்சுகளிலேஇவர்கள் மூழ்கிக்கிடக்க அடுக்களையிலிருந்து குரல் கேட்கின்றது.

'புள்ளை நேரமாகுது... எழும்பிச் சாப்பிடச்சொல்லன்...'

முட்டைப் பொரியலைச் செல்லப்பாக்கிய ஆச்சி தயாரித்துவிட்டாள் என்பதை அன்னலட்சுமி இத்தால் உணருகின்றாள். 'பிள்ளைகள் கண்டால் வாயூறுங்கள், அதுகளின்ரை விரதத்தைக் குழப்பப்படாது' என்ற எண்ணத்திலேதான், இப்பொழுது முட்டைப் பொரியல் சுடச்சுடத் தயாராகியிருக்கின்றது.

'நீங்களும் சாப்பிடுங்கோவன்' என்று கைகழுவத் தண்ணீர்ச் செம்பை அன்னலட்சுமிக் கொடுத்ததிலிருந்து, வெற்றிலை மடித்துப் பரிமாறியதுவரை செந்தில்நாதனின் இரவுச் சாப்பாடு உரிய கிருத்தியங்களுடன் நிறைவேறுகின்றது.

செந்தில்நாதன் வெற்றிலையைச் சுவைத்துக் குதப்புகின்றார். அவர் நித்தமும் வெற்றிலைபோட்டுக் கொள்பவரல்லர். ஆசை அருமையாக இப்படி மனைவி மடித்துக்கொடுத்தாற் போட்டுக்கொள்வார். சாவீடு-கல்யாணவீடு முதலியவற்றிற்கும் போனால் ஆசாரத்திற்காக தாம்பூலந் தரித்தலுமுண்டு.

அன்னலட்சுமி இரண்டு பாக்குப் புளைவைத் தன் வாயிலே போட்டு, வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவிக் கொண்டிருக்கும் பொழுதுதான், பீடா வாங்கிவநதது அவருக்கு ஞாபகத்திற்குவருகின்றது.

'வாயிலை போட்டிருக்கிற பாக்கைத் துப்புமப்பா. உமக்கு நான் பீடா வாங்கியந்தனான்...' என்று சொல்லி 'பீடா'வுக்குக் குறிப்புப் பொருளேற்றிக் கொடுத்து அவளைப் பார்க்கின்றார்.

அர்த்த புஷ்டி நெளியும் குறுநகை ஒன்றை அவளுஞ் சிந்துகின்றாள். சாம்பல் குளித்து நிஷ்டை இயற்றிய கங்குப்பொறி தன் தோலை உரித்துவிட்டதைப் போன்ற உணர்வு.

செந்தில்நாதன் சீதனமாகப் பெற்ற அந்தவீட்டில் தனியறைகள் இரண்டு இருக்கின்றன. காற்றோட்டமில்லாத அந்த அறைகளில், வழக்கமாக ஒருவரும் தூங்குவதில்லை. அந்த அறைகளுள் ஒன்றினையே தன்னுடைய சயனமண்டபமாக்கி வாழ்க்கையைத்தொடங்கிய அன்னலட்சுமி, குழந்தைகள் பெருகப் பெருக, அறைக்குள்ளே கிடந்து புழுங்கி அவிவதிலும் பார்க்க, பெரிய 'மாலு'க்குள் படுப்பது வசதியென வரித்துக்கொண்டாள். மாலுக்குள் வசதியான காற்றோட்டமுண்டு.

பகலிலே முதுகு சரித்து ஓய்வெடுத்துக் கொள்ளும் வழக்கம் செல்லப்பாக்கிய ஆச்சியின் இரத்தத்தில் ஊறாத ஒரு சங்கதி. மாலின் ஒரு கோடியிலே அவள் படுத்திருக்கிறாள். அவளுக்கு அணைதலையணைச் சுகத்தை ஊட்டியவாறே சாந்தினியும் ஸ்ரீகாந்தனும் சயனிக்கிறார்கள். ரோகினி நித்திரையிலும் அன்னலட்சுமியின் சேலைத் தலைப்பைவிடவில்லை. சீலைத் தொங்கலில் இடப்பட்டிருந்த முடிச்சைச் சுகித்தவாறே அவள் நித்திரை கொள்ளுகிறாள். 'குஞ்சுப் பயல்' தாயின் முலைமெத்தையின் கணப்பினைச் சுகித்தபடி தூங்குகின்றான். 'அக்கமும் ரோஜாவாம், நடுவிலே ஒரு மல்லிகையாம்' என்ற விதத்தில் அன்னலட்சுமி படுத்துக் கிடக்கிறாள்.

அரசியின் ஒயில் சிந்திப் படுத்திருக்கும் அன்னலட்சுமியின் தலைமாட்டைச் செந்தில்நாதனின் கண்கள் மேய்கின்றன. அங்கு செம்பிலே தண்ணீரும், அதனுடன் தாம்பத்திய உறவு இயற்றும் தூரத்தில் சுடுதண்ணிப் போத்தலில் வெந்நீரும் இருக்கின்றன. மாத்தகரம், கிளாஸ், கரண்டி ஆகியன மிகப் பத்திரமாகச் சுவரோரம் வைக்கப்பட்டிருக்கின்றன.

செந்தில்நாதனுக்குக் காற்றோட்டமான இடத்திலே படுப்பதுதான் விருப்பம். ஆனால், அவர் இரவிலே மாலுக்குள்ளே தூங்குவதில் எல்லோருக்கும் கூச்சம். 'சாமி'யைத் தனியறையிலே வைத்துப் பூஜிக்கும் ஒரு போக்கு நிலைத்து விட்டது. இவருக்கென இருக்கும் அறையில், இவரில்லாத சமயங்களிலும் மற்றவர்கள் அதிகம் நடமாடுவதில்லை. அந்த அறைக்கே 'ஐயாவின் அறை' என்பதுதான் பெயர். அந்த அறைக்குள்ளே தான் செந்தில் நாதனுக்கான

(14-ம் பக்கம் பார்க்க)

'மாய ஜோதி' ஊது பத்திகள்
"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!
ஏன்?
★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.
நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.

ஆடவர்களுக்கு மட்டும்....
கல்யாணம் கட்டப் போகும் ஆடவர்களே! ஆண்மைக் குறைவை நிவர்த்தி செய்து நீடிய இன்பம் அனுபவிக்க இதோ ஓர் 'இரகசிய மருந்து'. விபரங்கட்கு எழுதுங்கள்.
வைத்தியாச்சாரி
பி. எம். திசாநாயக்க,
தபால் பெட்டி : 1281,
கொழும்பு.




அவஸிஸ், மட்டுநகர்.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலித்துத் தோல்வி கண்டேன். பின் மீண்டும் அப் பெண் என்னைக் காதலிப்பதாகத் தெரிகிறது. எனவே இதற்கொரு வழி கூறுங்கள்?

ப: தோல்வி ஒருமுறை தானே. இன்னும் நான்கு தடவை அவளைக் காதலிக்கலாம். 5-தடவைகளிலும் தோல்வியென்றால் 6-வது தடவை ஒரு பெண்ணைக் காதலிக்காமலே கலியாணம் செய்துகொள்ளுங்கள்.

ஃ

ம. சிவலிங்கம்,
தெல்தொட்ட.

கே: 1967ம் ஆண்டு தமிழ் நாட்டுப் பொதுத் தேர்தலில் தி. மு. க. வெற்றிபெறுமா?

ப: வெற்றி பெறுமென்றே பலரும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் திருமதி இந்திரா பிரதமர் பதவியை ஏற்றிருப்பது தி. மு. க. வெற்றிக்கு ஒரு முட்டுக்கட்டை.

ஃ

த. அ. கமலநாதன்,
நுகேகொடை

கே: நாம் ஒரு பொருளை விரும்ப, விரும்ப, அப்பொருள் எமமை விட்டு விலகிச் செல்வதேன்?

ப: விருப்பம் என்பது ஆசை! அளவோடு ஆசைப்பட்டால் ஒரு பொருளை அடைவது கஷ்டமன்று ஆனால் பேராசை கொண்டால் பெருநஷ்டம் ஏற்படும். ஆசைப்படும் பொருள மட்டுமின்றி கைவசமுள்ள பொருளும் போய்விடும். காரணம் ஆசை அதிகரிக்க, அதிகரிக்க அதனை அடைய முடியாத படி முட்டுக்கட்டைகளும் அதிகரிப்பதுதான்.

ஃ

ஆர். கோபால்,
ஒப்டன்

கே: இலங்கையில் உள்ள மலையக தொழிற் சங்கங்கள் அனைத்தும் தமிழரசுத் தொழிற் சங்கமான,இலங்கைத் தொழிலாளர் கழகத்துடன் ஒத்துழைத்து சேவை செய்தால் என்ன?

ப: அத் தொழிற்சங்கங்கள் தோட்டத் தொழிலாளரின் நலனில் அக்கறை கொண்டதைப் போல வெளிப்படையாகக் காட்டிக்கொண்டாலும், அந்தச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உள் நோக்கம் உண்டு. ஒத்துழைத்தால் அந்த உள் நோக்கத்தை அடைய முடியாமல் போய்விடுமல்லவா?

ஃ

ஏ. எம். எஸ். தர்கா,
செங்கலடி

கே: நான் உடற்பயிற்சி செய்கிறேன். பயிற்சியுடன் சிரசாசனமும் தண்டாப் பயிற்சியும் செய்கின்றேன். இதனால் என் உயரம் வளர்ச்சி தடைப்படுமா?

ப: ஆம்! உங்களின் தவறான பயிற்சியால் உடல் நலன் பாதிக்கப் படலாம். வேறு பயிற்சிகளுடன் ஆசனங்களைச் செய்யக் கூடாது. ஆசனங்கள் செய்வதாயிருந்தால், வேறு பயிற்சிகளைச் செய்யக்கூடாது.

ஃ

ஓ கே. கண்ணையா,
வரக்காப்பொலை

கே: ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: ஆண்கள் ஆரம்பகாலம் முதல் பெண்களைத் திருப்திபடுத்துவதற்காக பெரு முயற்சி செய்து வந்துள்ளனர். அவர்கள் இன்னும் அந்த முயற்சியைக் கைவிடவில்லை. ஆண்களைத் திருப்திபடுத்துவதற்காக பெண்கள் இம்மாதிரியான முயற்சிகளைச் செய்வதில்லை. இது தான் முக்கிய வித்தியாசம்!

ஃ

வி. சண்முகலிங்கம்,
நாரந்தனை தெற்கு

கே: கேள்விகள் எல்லாம் சந்தேகத்தின் அடிப்படையிற்தான் எழுகின்றனவா?

ப: இல்லை! கேள்வி கேட்பவரின் பெயர் பேப்பரிலே அவுட்டாகணும் என்பதற்காகவும் சில கேள்விகள் எழுகின்றன.

ஃ

வே. சுப்பிரமணியம்,
நோர்வூட்

கே: தமிழரசுக் கட்சியார் மலைநாட்டில் தமது கட்சியைப் பிரசாரப்படுத்துவது போல திரு.

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1188
> கொழும்பு-12.
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

பொன்னம்பலமும் வந்து தமது கட்சியைத் திரு. தொண்டமானுடன் சேர்ந்து பிரசாரப்படுத்தினால் என்னவாகும்.

ப: ஒன்றுமாகாது. ஆனால் அந்த பிரஜாவுரிமைச் சட்டத்தை நினைக்கும் போது அவர் மலைநாட்டுக்கு வந்து பிரசாரம் செய்ய முடியுமா? என்பதுதான் கேள்வி!

ஃ

பா. யேசுதாசராசன்,
யாழ்ப்பாணம்

கே: இலங்கை அரசாங்கம் பௌத்த மதத்துக்கு முதல் ஸ்தானம் கொடுப்பது, அரசியற் சட்டத்தின் 29-ம் சரத்தைப் பாதிக்கிறதா?

ப: ஆம்! இச் சரத்தின் கீழ் ஒரு மதம் மற்றொரு மதத்திற்கில்லாத விசேட சலுகைகளைப் பெற முடியாது.

ஃ

எம். ரட்ணம்,
சின்ன நாகவந்தை

கே: குயுக்தி அண்ணை, துன்பத்தின் எல்லை எது?

ப: இன்பம்! இன்பத்தின் எல்லை துன்பம்.

கே: அதிகமாக பிடி குடிப்பதால் கட்டி உண்டாகும் என்று சிலர் சொல்லுகிறார்களே உண்மையில் கட்டி வருமா?

ப: பயப்படாதீர்! பீடி புகைப்பதால் கட்டி உண்டாகாது. ஆனால் காசநோயோ புற்று நோயோ உண்டாகலாம்.

ஃ

கருப்பையா,
அக்கரைப்பத்தனை

கே: நான் திருமணம் செய்து மூன்று வருடங்களாகிவிட்டன. இன்னும் குழந்தைகளே கிடையா. குழந்தை பெற ஒரு உபாயம் சொல்லுங்களேன்?

ப: நீங்களும், உங்களின் மனைவியும் தனித்தனியாக வைத்திய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். ஆண் மலடாயின் குழந்தை ஆசையைக் கைவிட வேண்டியதுதான். பெண் மலடாயின் அவசியமானால் பாரசீக ஷா மன்னனின் வழியைப் பின் பற்றலாம்.

பி. ரகுபதி,
மானிப்பாய்

கே: இ. தொ. கா. வின் தனிப் பெரும் தலைவர் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: திணறிக்கொண்டிருக்கிறாராம், தேர்தல் சமயத்தில் தான் தோட்ட மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாததால்—அதில் மிக முக்கியமானது தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பது.

ஃ

உடைந்த உள்ளம்,
முரசுமொட்டை

கே: எனது வாழ்க்கையில் எடுக்கும் முயற்சிகளெல்லாம் சித்தியடையாமல் போகின்ற படியால் நான் மிகவும் கலக்கமடைந்துள்ளேன். என்ன செய்யலாம்?

ப: தொடர்ந்து முயற்சி செய்யுங்கள், தொடர்ச்சியான முயற்சியும், அத்துடன் துணிவும் இருந்தால் அப்புறம் வெற்றிக்குக் கேட்கவா வேண்டும்!

ஃ

க. குழந்தைவேலு,
கண்டாவளை

கே: தற்காலத்தில் பெண்கள் நெற்றியில் இரு பொட்டுப் போடுவதின் காரணம் என்ன?

ப: மைனர்களின் கவனத்தை நெற்றியின் மீது நிலை நிறுத்துவதற்காக! அதனால் அவர்களின் கவனத்திலிருந்து பெண்களின் இதர உறுப்புகள் தப்பிவிடுமல்லவா?

கைலைநாதன்,
அளவையூர்

கே: இன்னும் நம் ஊரில் ஒரு நபர் என். எம்.மை ஆதரித்து தமிழரசாருடன் வாதம் புரிகிறார்!

ப: அப்படியா? விரைவில் அவரை அங்கொடப் பகுதிக்கு அனுப்பி வைக்க முயற்சி செய்யுங்கள்.

ஃ

எஸ். எஸ். மங்கையர்க்கரசி,
கன்ரடி

கே: கண்கள் ரசிக்காத பொருள் என்ன?

ப: மனம் விரும்பாத பொருள்! மனம் விரும்பாத பொருளைக் கண்களால் ரசிக்க முடியாது.

ஃ

கமலநாதன், சிலாபம்

கே: பெண்களில் யார் யார் வாயாடிகள்?

ப: ஊமைகளாகப் பிறக்காத பெண்கள் அனைவரும் வாயாடிகளே.

ஃ

டி. ஆர். கோதைநாயகி,
திருமலை

கே: நம் நாட்டில் நடைபெறும் விவாகரத்துகளுக்கெல்லாம் மூலகாரணம் யார்?

ப: மனைவி அல்லது கணவன்.

ஃ

செல்வி மனோன்மணி,
அனுராதபுரம்

கே: உலகில் அதிர்ஷ்டசாலிகள் என்று யாரைக் கூறலாம்?

ப: இறந்தவர்கள் எல்லோரும் அதிர்ஷ்டசாலிகளே! இன்னும் இவ்வுலகில் பிறக்காதவர்களையும் அதிர்ஷ்டசாலிகள் என்று கூறலாம்.

ஃ

டி. கிருஷ்ணன்,
கொழும்பு-13

கே: என் மனைவிக்குக் கடுமையான காய்ச்சல். செய்யாத வைத்தியமெல்லாம் செய்து பார்த்து விட்டேன். இப்பொழுதும் அவளுக்கு 120 டிகிரி காய்ச்சல்! என்ன செய்யலாம்?

ப: ஆபத்து! உடனே தீயணைக்கும் படைக்கு டெலிபோன் செய்யுங்கள்.

## அன்புள்ள பாட்டிக்கு!

—கலையரசன்—

கொப்பளிக்கும் தாழியதன் எண்ணைபோன்று
  கொதிக்கும் உனதுணர்ச்சி தனை அடக்கி
செப்பமுறப் படித்திருவாய் செல்வாஎன்று
  சென்னீரால் வரைந்திட்ட மடலை நெஞ்ச
வெப்பமெலாம் தீர்த்திடவே அணைத்தபோது
  விளைந்துவரும் நெஞ்சுறுதி தகர்ந்து போக
தப்பிவிட்டாய் கள்ளநீ நில் நில் என்று
  தாவிவரும் கண்விழியை என்னசெய்வேன்?

சுண்ணும்புக் கூடையினைத் தலையிற் தாங்கி
  துவண்டுவிழும் முதுஉடலை உணர்வில் தாங்கி
கண்ணான பேரனுக்கு கடமை செய்து
  காப்பதொன்றே கடைசிவரை கண்டதென்று
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி
  ஏங்கிவரும் என்பாட்டி, என்னைப் பெற்ற
புண்ணான வயிறு கண்டால் புண்ணாய் போக
  புகுந்துவிட்ட காதலினை என்ன செய்வேன்?

சூலிருந்து இருதிங்கள் கழியுமுன்பு
  சுகதுக்கம் மறந்துவிட்ட தந்தைக்குப்பின்
நாலிரண்டு திங்களிலே என்னைப்பெற்று
  நர்ஸ்கையில் கொடுத்துவிட்டு போனதன்பின்
பாலில்லை பசித்தழுத பச்சைமேனி
  பசிதீர்க்கப் பணமில்லை என்று ஏங்கி
காலில்லா பறவைபோல் அலைந்தாய் என்ற
  கதைகேட்டேன், அதனால் என்கடமை
            கொண்டேன்.

சேரன்கை வில் போன்று வளைந்த தேகம்
  சுடுபட்ட கத்தரிக்காய் போன்ற கன்னம்
பேரனவன் படிக்கின்றான் நாளை காப்பான்
  பெருமூச்சில் உயிர்மூச்சு ஏந்தி வாழும்
வீரத்தாய் உன் மீது ஆணை, இங்கு
  விளைந்து விட்ட உணர்வெல்லாம் காய்ந்து
ஓரத்தில் ஒதுங்கிவிடும் ஆதலால் நான்
  வெற்றியுடன் திரும்பிடுவேன் கவலை
            தீர்ப்பாய்!


## அவசியமுள்ளவர்கள் யார்?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?
★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?
★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எங்களுக்கு கடிதமெழுதுங்கள்.

விலாசம்:-

**பண்டார மந்திராச்சாரியார்**
அன் கம்பெனி,
தலாவ (வழி) அநுராதபுரம்.

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

# "கழுதைக்குப் போட்டாலும் காங்கிரசுக்குப் போடாதீர்"

## தமிழ் நாட்டு வாக்காளருக்கு ஜி. டி. நாயுடு வேண்டுகோள்

**"இந்தியத் துணைக் கண்டம் பல துண்டுகளாக சிதறிப் போகாது ஒன்று பட்டிருக்க வேண்டும் என்றால் இந்தியை ஆட்சி மொழியாக்கி அதை மற்றவர்களின் தொண்டைக்குள் திணிப்பதைக் காங்கிரஸ் அரசாங்கம் உடனடியாகக் கைவிட வேண்டும். இந்தி ஆட்சி மொழியாவதைத் தமிழ் நாட்டுக் காங்கிரசினர் தடுக்கத் தவறிவிட்டது மட்டுமல்ல இந்தியை தென்னாட்டில் பலவந்தமாகத் திணிப்பதற்கும் உடந்தையாக இருக்கின்றனர். இந்தி எதிர்ப்பு போரில் தென்னாடு வெற்றி பெற எதிர்வரும் 1967 பொதுத்தேர்தலில் தமிழகத்தில் தற்போது ஆட்சிப்பொறுப்பிலிருக்கும் மொழியுணர்வு அற்ற காங்கிரஸ் ஆட்சியினரை முறியடிக்க வேண்டும். மொழிப் பற்றும் இனப் பற்றும் உள்ள தமிழ் நாட்டு வாக்காளர்கள் அடுத்த தேர்தலில் தங்கள் வாக்கை கழுதைக்கு போட்டாலும் போடலாம் ஆனாலும் காங்கிரசுக்கு போடக் கூடாது." என்று பிரபல தொழில் மேதையும், 'அதிசய மனிதர்' எனப் பெயர் பெற்றவருமான திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நினைவு நாள் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.**

சென்ற ஆண்டு சனவரி 26-ம் திகதி தமிழகமெங்கும் மாபெரும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடைபெற்றதும், அந்தக் கிளர்ச்சியில், பலர் தீக்குளித்து உயிர்த் தியாகம் செய்ததும் வாசகர்கள் அறிந்ததே. தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு உணர்ச்சி இன்னும் அணைந்து விடவில்லையென்பதை டெல்லி அரசினருக்கு எடுத்துக் காட்டவும், இந்தி எதிர்ப்புப் போரில் உயிர் நீத்த செம்மல்களுக்கு அஞ்சலி செலுத்தும்முகமாகவும், பெப்ரவரி 20-ந் திகதி சென்னை ஒற்றை வாடை தியேட்டரில், இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடொன்றை, 'தமிழக மாணவர் இந்தி எதிர்ப்புக் குழு' நடாத்தியது. இம்மாநாட்டில், பெருந்திரளான மாணவர்கள் கலந்து கொண்டனர். மேற்கு வங்காளம், மைசூர், ஆந்திரா, ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களும் மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

இந்த மாநாட்டில், சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. சி. ராஜகோபாலாச்சாரி, திரு. இரா, நெடுஞ்செழியன், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், பேராசிரியர் இலக்குவனார், திரு. ஜி. டி. நாயுடு ஆகியோர் பங்கு கொண்டு சொற்பொழிவாற்றினர். மாநாட்டின் முடிவில் பத்துக்கு மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



ராஜாஜி

மாநாட்டில் பேசிய ஒவ்வொருவரும், 1967 தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டால்தான், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் வெற்றி பெறுவது சித்தியாகும் எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மாநாட்டில் திரு. இராசகோபாலாச்சாரி பேசும் பொழுது கூறியதாவது:—

'இந்தி எதிர்ப்புப் போரில் நீங்கள் காட்டும் தீவிரம் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

இந்தி எதிர்ப்புப்போராட்டம் என்று நீங்கள் பெயர் வைத்திருக்கிறீர்கள் போராட்டம் என்று கூறாமல், 'இந்தி எதிர்ப்புப்போர், என்று கூறுவதுதான் சரியாகும். பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் போராட்டமா நடைபெற்றது? போர்தான் நடைபெற்றது. இந்திக்கும் தென்னாட்டுக்கும் நடைபெறும் போரும் அது போலத்தான்.

'நமக்கு அமைச்சர்கள் மேல் கோபம் எதுவும் இல்லை. இந்திப் பிரச்னையில் அவர்கள் நமக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யத் தவறிவிட்டார்கள் என்பதுதான் எமக்கு



இரா. நெடுஞ்செழியன்

வருத்தத்தை அளிக்கிறது. மற்ற நாடுகளில் அமைச்சர்கள் இப்படி நடந்துகொண்டால், மக்கள் குமுறி எழுந்திருப்பர். நாம்தான் பொறுத்துக் கொண்டிருக்கிறோம்.

'நம் மேல் இந்தியைத் திணிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் அவர்களை இந்தி வெறியர்கள் என்பதிலும் 'சூழ்ச்சிக் காரர்கள்' என்று கூறுவதுதான் பொருத்தமானது. டெல்லி நம் மீது சூழ்ச்சியாக இந்தியைத் திணிக்கும் போது, நமது பிரதிநிதிகளான அமைச்சர்கள் தங்கள் கடமையை செய்யவில்லை; நமது எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை.

இந்தியாவில் 14 மாநிலங்கள் இருக்கின்றன. சகலருக்கும் ஆட்சியில் சம அந்தஸ்து கொடுக்க வேண்டும். உத்தர பிரதேசத்திலிருந்துதான் முதல் பிரதமர் வந்தார்; இரண்டாவது பிரதமரும் வந்தார். மூன்றாவது பிரதமரும் அங்கிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதற்குக் காரணம், அங்கு மக்கள் தொகை அதிகம், அவர்களுக்கு பிரதிநிதிகள் அதிகம்; செல்வாக்கு அதிகம். அதைக் கூட நாம் பொறுத்துக்கொள்ள முடியும்.

ஆனால் மொழி விஷயத்தில் இதைப் பொறுக்க முடியாது. இந்தியை எந்த உருவத்திலும் நாம் அனுமதிக்க முடியாது. அதை உணர்த்தவே இந்தப் போரை நடத்துகிறோம்.

அடுத்த தேர்தலில், அமைச்சர்கள் மட்டுமல்ல அவர்கள் கும்பலே மீண்டும் வரவிடக்கூடாது. காங்கிரஸ் கட்சி எத்தனை லட்சம் செலவு செய்தாலும், எந்த மாநிலத்தில் வெற்றி பெறினும், தமிழ் நாட்டில் வெற்றியீட்ட முடியாதபடிக்கு நீங்கள் பணியாற்ற வேண்டும். 1967 தேர்தலில் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டால், அது இந்தி எதிர்ப்பு போருக்கு ஒரு மகத்தான வெற்றியாகும்.

'இங்கு பேசிய மாணவர்கள், எங்களை யாரும் தூண்டவில்லை என்று கூறினார்கள். நெருப்பைத் தூண்டிவிட்டால்தான் எரியும். இல்லாவிட்டால் சாம்பலாகிவிடும். தீயைத் தள்ளும் உரிமை சனநாயகத்தில் எனக்கு உண்டு. அது எனது கடமை எனக் கருதுகிறேன். என்னை யாராவது நேரடியாகக்கேட்டால் 'இந்தி எதிர்ப்பை நானே தூண்டிவிட்டேன்' என்று கூறக் காத்திருக்கிறேன்.'

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் பேசுகையில் கூறியதாவது—

இந்தி மீது நமக்குத் துரோகம் எதுவும் கிடையாது. அது ஆட்சி மொழியாவதைத் தான் எதிர்க்கிறோம்.

இந்திய ஒருமைப்பாட்டுக்கு இந்தி அவசியம் என்று கூறுகிறார்கள். சீனாவும், பாகிஸ்தானும் படைஎடுத்த நேரத்தில், இந்தியா முழுவதும் ஒன்றுபட்டதே, அந்த ஒற்றுமையை இந்தி மொழியா ஏற்படுத்தியது? இந்தியினால் ஒருமைப்பாடு சிதையுமே தவிர வளராது.

மொழியே நமது விழி. மொழியை இழந்தால் விழியை இழந்தவர்களாவோம். 1967 தேர்தல் வரும் போது-தமிழைக் காக்கும்—இந்தியை எதிர்க்கும் கட்சியை நீங்கள் ஆட்சி பீடத்தில் அமர்த்துவீர்களானால், இந்தி எதிர்ப்புப் போரில் வெற்றி பெறுவது சுலபமாகிவிடும்.'



கி. ஆ. பெ. விசுவநாதம்

திரு. ஜி டி. நாயுடு பேசும் போது கூறியதாவது:—

'நாடு பிரியாமல் இருக்க வேண்டும் என்றால் இந்தியை திரும்பப் பெற வேண்டும். 1967 தேர்தலில் உங்கள் வாக்குகளை, கழுதைக்கு போட்டாலும், காங்கிரசுக்குப் போடக் கூடாது. தமிழகத்திலுள்ள இந்திப்படத் தயாரிப்பாளர்கள் இந்திப் படம் தயாரிப்பதைக் கைவிட வேண்டும்.'

திரு. இரா. நெடுஞ்செழியன் பேசுகையில் எந்தக் காலத்திலும், எந்த உருவத்தில் வந்தாலும், இந்தியைத் தென்னாடு ஏற்காது' என்று கூறினார்.


இன்று.......நேற்றல்ல
25 வருடங்களாக
எனது
யந்திர-மந்திரத்தால்
கல்யாணம்—காதல்—கிரகதோஷம்—கீர்த்தி
குடும்பத் தகராறு—கூடுதல் லாபம்—கெடுதல்
கேடுகள்—கைராசி—கொடிய நோய்கள்
கோபதாபங்கள்—கௌரவ வாழ்வு
சம்பந்தமான
பயனடைந்தோர் தொகை
பல்லாயிரம்!
குறிப்பு:
நாலைந்து பேர் கம்பெனியாக சேர்ந்து செய்யும் மந்திரத்தை விட தனி ஒருவர் செய்யும் மந்திரமே பலிக்கும் என்பது குருவானவரின் வாக்கு.
ஆகவே
இலவச ஆலோசனைக்கு
இன்றே எனக்கொரு கடிதம் எழுதுங்கள்
சந்திக்கும் நாட்கள்:
கொழும்பில்: செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி
முகவரி: 103, ஸ்ரீ சங்கராஜ மாவத்த, மருதானை.
கம்பளையில்: ஞாயிறு, திங்கள்.
முகவரி:
பி. எம். திசாநாயக்க,
—மகா மாந்திரீக கலாநிதி—
நான்கு கோயில்களில் தர்மகர்த்தா
கம்பளை. போன்: 454.

## இவ்வாரச் செய்தி தெரியுமா?

**பெப்புரவரி-23-புதன்கிழமை**

அரசியற் சட்டத்தின் 29ம் பிரிவைஅகற்றக்கோரும் எதிர்க்கட்சியின் போக்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனப். ஏ. அசீஸ் வன்மையாகக்கண்டித்திருக்கிறார்.

அமைச்சர்திரு. வீ. ஏ. சுகததாசாவைக் கைக்குண்டு வீசிக் கொல்ல முயன்றதாகச் சந்தேகப்படும் நபர்கள் மீது வழக்குப்போட பொலிசார் தீர்மானித்துள்ளனர்.

இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் தலைவரான திரு. நியோமோவுக்கு இராணுவ நீதிமன்றம் மரணதண்டனையளித்தது.

இந்திய முன்னாள் நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரிமீதுள்ள புகார்பற்றி நீதி விசாரணை ஒன்று நடத்தவேண்டிய அவசியமில்லையென பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ராச்சியசபையில் அறிவித்தார்.

**பெப்புரவரி-24-வியாழக்கிழமை**

அரசியற் சட்டத்திலிருந்து 29வது பிரிவை அகற்றும் முயற்சியை சிறுபான்மை மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாதென்று, முஸ்லிம் லீக் அளித்த விருந்தொன்றில் பேசிய உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் குறிப்பிட்டிருக்கிறார்-

பல்கலைக்கழக மாணவர்கள் கட்சி அரசியலில் நேரடியாக ஈடுபடுவதைத் தடை செய்ய அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் தலைமையின் கீழ் இயங்கி வரும் சகல தொழிற் சங்கங்களையும் ஒரு முனைப்படுத்தி இணைப்பதற்கு டாக்டர் இ. மு. வி நாகநாதன் முயற்சியெடுத்து வருவதாக அறிவித்தார்.

புதிய அரசியலமைப்பை வகுப்பதற்கு தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கக் கோரும் நகல் மசோதாவை அரசாங்க பாராளுமன்றக்குழு அங்கிகரித்தது.

**பெப்புரவரி 25 வெள்ளிக்கிழமை**

நாசவேலைகளினால் நாட்டில் குழப்பத்தை உண்டு பண்ணி அரசாங்கத்தையும் எதிர்க் கட்சியையும் சேர்ந்த தலைவர்களினதுஉயிருக்கு அபாயம் ஏற்படுத்தும் முயற்சிகள் ஆயுதப் படைகளிடையே மேற் கொள்ளப்பட்டதென்று அரசாங்கத்துக்குத் தகவல் கிடைத்திருப்பதாகப் பாராளுமன்றத்தில் பேசிய இராசாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்தன கூறியிருக்கிறார்.

கூட்டரசாங்கக் கட்சிகள் எழுப்பிவரும் வகுப்புத் துவேஷப் பிரச்சாரத்தின் மூலம், அவை மார்க்ஸியத்துக்குப் பெருந்துரோகம் புரிந்துவிட்டன என்று கம்யூனிஸ்ட் கட்சியின் (பீக்கிங்) அறிக்கை குற்றஞ்சாட்டியது

மொழிச் சட்டங்களை அமுல் நடாத்தும் பொழுது ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள நிதியமைச்சர் தலைமையில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம் உட்பட 5 பேர் கொண்ட அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

கானாவில் சனாதிபதி என்குருமாவின் ஆட்சியை புரட்சி மூலம் இராணுவம் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டது. இராணுவப் புரட்சி நடை பெற்ற சமயம், திரு என்குருமா பீக்கிங் நகரில் இருந்தார், இது கடந்த 9 மாதங்களில் உலகில் நடைபெற்ற 8வது புரட்சியாகும்.

**பெப்புரவரி 26 சனிக்கிழமை**

வடக்கு, கிழக்கு மாநிலங்களில் தமிழை நிர்வாக மொழியாக்குவதற்கு முதல் நடவடிக்கையாக இப்பகுதிகளில் உள்ள அரசாங்க இலாகாக்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் விண்ணப்பத்திரங்கள் முழுவதையும் தமிழில் அச்சிடும்படி அரசாங்கம் பணித்திருக்கிறது. நீதியமைச்சர் திரு. ஏ. எப். விஜயமானேயும், தமிழரசுக்கட்சி பா. உ.க்களும் கலந்து கொண்ட ஒரு மாநாட்டில் இம்முடிவு எடுக்கப்பட்டது. இம்மாநாட்டில் தமிழ் மொழிச் சட்டத்தை மேலும் தாமதமின்றி அமுலுக்குக் கொண்டு வர வேண்டும் என்று திரு. அ. அமிர்தலிங்கம் பா உ. வும் திரு. வீ. ஏ. அழகக்கோன் பா. உ. வும் வற்புறுத்தினர்.

அரசாங்க சேவையிலுள்ள சிங்கள ஊழியர்களுக்குரிய தமிழ்ப் பரீட்சையை இலகுவானதாகக வேண்டும் என்று அக்குரணை பா. உ. திரு. ஏ. சி. எஸ். ஹமீது, அமைச்சரவை துணைக்குழுவிடம் கேட்க இருக்கிறார்.

மட்டக்களப்பு, திருகோணமலை நகர சபைகளை மாநகர சபைக்கு உயர்த்துவது சாத்தியமா என்பதை ஆராயும்படி உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் உத்தரவிட்டுள்ளார்.

**பெப்புரவரி 27 ஞாயிற்றுக்கிழமை**

இலங்கையில் ஏற்பட இருந்த புரட்சிச் சதி பற்றிய வாக்கு மூலங்களை எதிர்க்கட்சியினர் பார்க்க விரும்புவதாக ஒரு செய்தி கூறியது.

சனவரி 8ம் திகதி சம்பவங்களை யொட்டி சில இடதுசாரித் தலைவர்கள் மேல் வழக்குத் தொடர இருப்பதாக ஒரு உயர்தர பொலீஸ் அதிகாரி கூறியிருக்கிறார்.

இந்திய-பாகிஸ்தான் படைகள் பூரணமாக தங்கள் பழைய நிலைக்கு வாபஸ் பெறப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது.

மாணவர்கள் கலவரத்தை அடுத்து இந்தோனேஷியாவில் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

**பெப்புரவரி 28 திங்கட்கிழமை**

ஜனப். ஏ. சி. எம். அமீர் புதிய அட்டோர்னி ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார்

தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்துக்கு ரூபா ஒரு லட்சம் நன்கொடை வழங்க யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கொழும்பைச் சேர்ந்த ஒரு பெண் முன்வந்திருக்கிறார்.

**மார்ச்சு 1 செவ்வாய்க்கிழமை**

அரசியலமைப்புச் சட்டத்தை புதிதாகத் தயாரிக்கக்கோரும் ஒரு பிரேரணையை கொண்டு வர அரசாங்கம் முடிவு செய்தது.

பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமனம் செய்யும் போது, இலங்கைப் பட்டதாரி, வெளி நாட்டுப் பட்டதாரி என்று பாரபட்சம் காட்டக் கூடாதென்றும், கிழக்கு மாகாணம் பின் தங்கிய நிலையில் உள்ளதால் அங்கு அதிகபட்டதாரிகளை நியமிக்க வேண்டுமெனவும் மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# "வியட்னும்"

பொறுமையும் சந்தேகமும் கொண்ட பல சாதி, இன, மத மக்களைக்கொண்ட நெல்லிக்காய் மூட்டைதான் வியட்னும். சீனர், கம்போடியர், பூர்வீக மலைசாதியினர், ஒற்றுமையற்ற பௌத்தர்கள், கத்தோலிக்கர்கள் இன்னும் எண்ணற்ற மதவாரி உட்பிரிவு மக்களைத்தன்னகத்தே கொண்டுளது வியட்னும் நாடு. சென்னை மாநில சனத்தொகைக்கு ஏறத்தாழ ஈடாக இருக்கும் 310 இலட்

உலக யுத்தத்தின் விளிம்பிற்குப் பல தடவைகள் சென்ற வியட்னும் யுத்தம் இன்று ஒரு நிரந்தர தீர்வை எதிர்நோக்கி நிற்கிறது. இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர முடிவைக் காணவேண்டுமென்ற தவிப்பு உலக நாடுகளின் தலைவர்களிடையே இன்று ஏற்பட்டுவிட்டது. ஆங்காங்கே கூடும் உலகத் தலைவர்கள் இப்பிரச்சினைபற்றியே பேசுகிறார்கள். இன்னும் சில தலைவர்கள் இப்பிரச்சினையையிட்டு உலக வலம் வருகிறார்கள். உலகத் தலைவர்கள் அனைவரதும் கவனத்தை ஒருங்கே ஈர்த்துள்ள இப்பிரச்சினை என்ன என்பதை இத் தொடர் ஆராய்கிறது.

## பூர்வீகமும் பிரச்சினையும்

சம் மக்களுள் சுமார் 50 இலட்சத்தினர் பலதரப்பட்ட சிறுபான்மைக் கூட்டத்தினராவர்!

பிரெஞ்சு ஏகாதிபத்திய இராணுவக் குடையின் கீழ் ஒன்றுபட்டிருந்த வியட்னுமில் நிலையான ஆட்சிக்கு வழிகோலும் பின்னணியா இது? சனநாயக ஆட்சிமுறையில் இம்மியும் அனுபவம் அற்ற தலைவர்கள்; சனநாயக பாரம்பரியத்தை அறியாத மக்கள்! நிலையான ஆட்சி தோன்ற வழி ஏது இங்கே?

### ஊரும் பெயரும்

கடந்த மூன்றுவருடகாலத்தில் மாத்திரம் ஐந்து அரசாங்கங்கள் தோன்றிமறைந்திருக்கின்றன; 14 தடவைகளில் புனரமைக்கப்பட்டிருக்கின்றது அமைச்சரவை. சிவில் ஆட்சி மறைந்து பழங்கதையாகிவிட்டது. 'நான் தலைவன்' என்று நாட்டை வழிகாட்ட ஒரு தலைவனில்லை. பத்து இராணுவத் தளபதிகளின் கூட்டுத் தலைமையின் கீழிருக்கும் அரசாங்கம் கடந்தவாரம் மீண்டும் புனரமைக்கப்பட்டது ஆச்சரியமல்ல. எட்டுமாதம் நீடித்ததே, அதுதான் ஆச்சரியம்! உலகயுத்தத்தின்கூட்டாகக் கிடைத்த 12 வருட சுதந்திரமும் உள்ளூர் யுத்தத்திற் சிக்கித் தவிக்கிறது. ஏன் இந்த யுத்தம்? அங்கே என்ன சங்கதி?

தென்கிழக்காசியாவிலே சீனாவின் அடிவயிற்றில் இருக்கிறதுவியட்னும். 1954 வரை இருந்த பிரெஞ்சு-இந்தோசீனு-வியட்னும், லாவோஸ், கம்போடியா என்ற மூன்று நாடுகளைக்கொண்டிருந்தது. பிரெஞ்சு-இந்தோசீனுவின் கிழக்கு எல்லையில் இருக்கின்றது தென்சீனக்கடல். மேற்கே தாய்லாந்தும் பர்மாவும்; வடக்கே சீனு தெற்கிலிருந்து கிழக்கு (தென் சீனக்)கடலெல்லையோரமாக வடக்கே சீனுவரைக்கும் வளைந்து நீண்டிருக்கும் பகுதியே வியட்னும். வடக்கே சீனுவிலிருந்து வந்து பல நூருண்டுகளுக்கு முன்பு குடியேறிய மக்களே வியட்னுமியர். (வியட்னும் என்ருல் தூரதெற்கு என்பதே பொருள்).

### பூர்வீகம்

ஐரோப்பிய வல்லரசுகள் ஆசியாவில் நாடு பிடிக்கத் தொடங்கி தம் ஏகாதிபத்தியங்களைக் கட்டியெழுப்பிய காலம் அது. இலங்கையைப் பிரித்தானியர் கைப்பற்றியதுபோல பிரெஞ்சு—இந்தோசீனுவைப் பிரெஞ்சுக்காரர் 1883ம் ஆண்டளவிற் கைப்பற்றினர்கள். உறங்கிக் கிடந்த ஆசிய மக்கள் முதலாவது உலக யுத்தத்தின் பின் சுதந்திர உணர்ச்சிபெற்றனர். அதிலிருந்து 2 வது உலக யுத்தம்வரை இந்தோசீனுவில் நிகழ்ந்த சுதந்திரப் போராட்டங்களிற் பங்குபற்றிய கம்யூனிஸ்ட் கட்சி தனக்கென ஓர் அந்தஸ்தைச் சம்பாதித்துக்கொண்டது.

மலாயா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா போன்ற

### "சூப் பி"

நாடுகளில் தேசிய இயக்கங்களோடு ஒன்றிணைந்திருந்தன கம்யூனிஸ்ட்கட்சிகள். ஜப்பான் தென்கிழக்காசியா மீது படையெடுத்து ஐரோப்பிய வல்லரசுகளை இந்தநாடுகளிலிருந்து துரத்தியடித்தது. மலாயாவைக் கைவிட்டுப் பிரித்தானியர் ஓட்டம் பிடித்தனர். இந்தோனேசியாவை விட்டுப் பறந்தனர் ஒல்லாந்தர். பிரெஞ்சு-இந்தோசீனுவைவிட்டுக் கழன்றனர் பிரெஞ்சுக்காரர். நேசநாடுகள் 1945ந் தளவில் ஜப்பானைத் தோற்கடித்தன.


### கோ-சி-மின் முந்தினர்

ஆசை யாரை விட்டது? சொகுசான காலத்தில்சுரண்டிப் பிழைத்து வந்த ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் இந்நாட்டு மக்களை நட்டாற்றில் கைவிட்டுப் புறமுதுகிட்டோடிய பின்னர் நேச நாடுகளின் வெற்றியைப் பயன்படுத்தி அவற்றின்இராணுவ பலத்துடன் மீண்டும் இந்நாடுகளில் தமது கொடிகளைப் பறக்கவிடமுனைந்தன. ஆசிய தேசியம் கொழுந்துவிட்டெரிந்தது. மீண்டும் ஐரோப்பிய எசமானர்தமது நாடுகளிற் காலடிவைக்கவிடாது தேசியவாதிகள் ஆயுதபாணிகள் ஆயினர். ஜப்பான் நேசநாடுகளிடம் சரணுகதியடைந்ததும் பிரெஞ்சுத் துருப்புக்கள் மீண்டும் இந்தோசீனுவில் வந்திறங்குமுன் வியட்னுமில் கோ-சி-மின் தலைமையிலிருந்த வியட்னுமின் இயக்கத்தினர் தமது அதிகாரத்தை நிலைநிறுத்தினர்.

ஜப்பானிய இராணுவ ஆட்சியை எதிர்த்துச் சுதந்திரத்திற்காகப் போராடிய வியட்னும் இயக்கத்திற்குப் பெருமளவு உதவியளித்தது இராணுவ தளவாடங்களும்வழங்கப்பட்டன நேசநாடுகளால். இரண்டாவது உலகயுத்தத்திற் தோல்வியடைந்த ஜப்பானிய ஆதிக்கத்தின் இடத்தில் மீண்டும் தம்மை நிலைநாட்டிக்கொள்ள முனைந்த பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கெதிராக வியட்மின் இயக்கத்தினர் அதே ஆயுதங்களை வெற்றிகரமாகப்பாவித்தனர். பிரெஞ்சுத் துருப்புக்கள் வியட்னும் துறைமுகங்களில் இறங்குவதற்குக் கடும் எதிர்ப்புக் கிடைத்தது.

(9-ம் பக்கம் பார்க்க)

## வார சாரம்



"கதாப்பிரசங்கமெல்லாம் நடந்துதாம் சிவராத்திரிக்கு. எப்பிடி கதாப்பிரசங்கம்?"

"ஒமெடா மேனே...பக்கத்திலை இருந்தவரொருதர் தன்ரை காணி வழக்கைப் பற்றி விடிய விடியச் சொன்னர். கண்ணுறை கண் மூடாமல் நானும் கேட்டுக் கொண்டிருந்தன்."

# தமிழ் அதிகாரி நியமனத்தில் தகிடுதத்தம்

## மத்திய வங்கி ஊழல் அம்பலம்

**இலங்கை மத்திய வங்கியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மொழி பெயர்ப்புப் பிரிவிற்கு ஒரு அதிகாரியை நியமிப்பதில் நடைபெற்ற சில ஒழுங்கீனங்கள் இப்பொழுது அம்பலத்திற்கு வந்துள்ளன. அதிகாரியென்ற அந்தஸ்துடன் பதவியேற்ற சிறப்புப் பட்டதாரியான பெண் இப்பொழுது சாதாரண எழுது வினைஞர் என்ற நிலைக்கு கிழிறக்கப்பட்டுள்ளார்.**

இலங்கை மத்திய வங்கியில் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மொழி பெயர்ப்புப் பிரிவிற்கு ஒரு அதிகாரியை நியமிப்பதில் நடைபெற்ற சில ஒழுங்கீனங்கள் இப்பொழுது வெளியாகியுள்ளன. முறைப்படி பகிரங்க விண்ணப்பம் கோரி ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய இப்பதவிக்கு பிற்கதவு வழியால் ஒரு பெண்ணைத் தெரிவு செய்த அதிகாரிகள் தங்கள் பிழையை உணர்ந்ததும் நிமிடத்திற்கு நிமிடம் அப்பெண்ணின் பதவியில் மாற்றஞ் செய்தார்கள் என்றும் தெரிகிறது.

'மொழி பெயர்ப்பு அதிகாரி—தரம் இரண்டு' என்று பதவி நியமனக் கடிதம் கொடுத்த வங்கி அதிகாரிகள் அப்பெண் பதவியேற்ற சில நிமிடங்களுள் அவரின் பதவி 'எழுது வினைஞர்—தரம் இரண்டு' என்று ஒரு சுற்று நிருபம் மூலம் மாற்றியமைத்தார்கள் என்று அறியப்படுகிறது. இரண்டாம் தரமுடைய எழுது வினைஞர் ஒருவர் இப்போதைய தமிழ் மொழி பெயர்ப்பு வேலைகளைச் செய்து வரும் பட்டதாரி ஊழியர்களையும் ஏனைய எழுதுவினைஞர்களையும் மேற்பார்வை செய்ய முடியாது என சம்பந்தப்பட்ட ஊழியர்களின் தொழிற் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்ததும் வங்கி நிர்வாகிகள் மீண்டும் புதிய ஒரு தந்திரத்தை மேற்கொள்ள முனைந்தனர்.

தமிழ் மொழி பெயர்ப்புப் பகுதியை சிங்கள மொழி பெயர்ப்புப் பகுதியுடன் இணைக்க முற்பட்டதை 'மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கம்' எதிர்த்ததைத் தொடர்ந்து ஒரு தமிழ் மொழி பெயர்ப்பு அதிகாரியை நியமிக்க வங்கி நிர்வாகிகள் முடிவு செய்தனர் என்றும் இப்பதவிக்கு முறையாக விளம்பரம் கோராது பிற்கதவு வழியால் ஒரு சுயமொழிப் பொருளியல் பட்டதாரியான பெண்ணைத் தெரிவு செய்தார்கள் என்றும் தெரிகிறது. முறையாக விண்ணப்பம் கோராது நியமனம் செய்யம் எந்த ஊழியருக்கும் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் மாதாந்த சம்பளம் வழங்க முடியாது என்ற திறைசேரி சுற்று நிருபம் இருப்பதை ஊழியர் சங்கம் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்தே இத்தனை மாற்றங்களும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சம்பந்தப்பட்ட பெண்ணுக்குப் பதவி வழங்கிய பின்னரே புதிதாக விண்ணப்பப் படிவம் நிரப்பப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

வங்கி நிர்வாகிகளின் பொறுப்பற்ற தன்மையையும், தமிழ் பகுதியை சக்தியற்றதாக்கும் முயற்சியையும் உடனுக்குடன் தமிழ் ஊழியர் சங்கம் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. இப்புதிய நியமனத்திலும் தமிழ் ஊழியர் சங்கத்தின் முயற்சி ஓரளவு வெற்றியடைந்துள்ளதென்றே கூற வேண்டும்.

## 'தமிழை மறக்க யாரால் முடியும்'

### புத்தளத்தில் ஈழவேந்தன்

**'முற்றும் துறந்த முனிபுங்கவராக மணி வாசகப் பெருமான் விளங்கினர். இறை உணர்ச்சியில் திளைத்து ஊறியிருந்த மணிவாசகரால் கூட தமிழை, தமிழ்நாட்டை மறக்க முடியவில்லை. தனது உள்ளத்தை உருக்கும் திருவாசகத்தில் தமிழ் மொழியைச் சிறப்பித்துக்கூறியுள்ளார்.'**

**இவ்வாறு புத்தளம் முத்துமாரியம்மன் கோவிலில் நடைபெற்ற சிவராத்திரி விழாவில் பேசும் போது திரு. ஈழவேந்தன் குறிப்பிட்டார்.**

இவ்விழா, கடந்த பதினைந்தாண்டு இடைவெளிக்குப் பின் முதன் முறையாக, இந்து வாலிபர் சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. விழாவுக்கு புத்தளம் மாவட்ட அதிகாரி திரு. கே. கோபாலரத்தினம் தலைமைவகித்தார்.

'மணி வாசகர் மாண்பு' என்ற பொருள் பற்றித் திரு.

(12-ம் பக்கம் பார்க்க)

ஈழத்தில் தனிப்பெரும் சாதனையை ஏற்படுத்தி ஈடு இணையற்று விளங்குவது

கல்கி பீடி



சிறந்தது, சிக்கனமானது, சிந்தனையூட்டுவது

சோர்வு நீக்கி உற்சாகத்தை அளிப்பது
புகைக்க புகைக்க இன்பம் பயப்பது

786 கல்கி பீடிகளே

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்
சி. சின்னத்துரை அன் பிரதர்,
44, 3ம் குறுக்குத் தெரு, கொழும்பு.
தொழிற்சாலை: 79,79/1, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12.

## சங்கப் பலகை

### யாழ்ப்பாணக் கதைகள்

ஆசிரியர்: கே. வி. நடராஜன்
விலை: ரூ 2-50
வெளியீடு: யாழ். இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.

'யாழ்ப்பாணக் கதைகள்'—என்ற இத்தலைப்புப் பெயரும், அதிலடங்கியுள்ள கதைகளும்.—

இலக்கிய வட்டாரத்திலே பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் என்பது மிகத்திண்ணம். ஏனெனில், 'யாழ்ப்பாணக் கதைகள்'—என்ற தலைப்பில் நூலொன்று வெளியிட கே. வி. நடராஜனுக்கு என்ன தகுதி உண்டு?—என்ற ஆவேசக்குரல்களும்,

இத்தொகுப்பிலுள்ளகதைகள தான் யாழ்ப்பாணக் கலாச்சாரத்தின் 'பிளாஷ் லைட்' டா? இதுதான் யாழ்ப்பாணத்துப் பண்பாடா?—என்று மானம் காக்கும் மரபினர் கூக்குரலும்,

வெறும் தசை உணர்வினடிப் படையில்தான் யாழ்ப்பாணத்துப் பாரம்பரியமே இயங்குகின்றதா?—என்ற சமூக இயலாளரின் வியப்புக் குரலும்,

இது எப்படி தேசிய இலக்கியமாகும்? தலைப்பே இலக்கியத்தின் நோக்கை விளம்பரப்படுத்துகிறதே? இது அப்பட்டமான பிற்போக்கு இலக்கியத்தனமல்லவா? பிரதேச இலக்கியம்-வளர்ந்து வரும் இலக்கியப் பாதையின் நச்சரவமல்லவா?—என்ற எழுத்தாளர்களின் கண்டனக் குரலும்—இத்தொகுப்பினது விளைவால் எழுந்திருப்பதே இதற்குச் சான்றாகும்.

—இதனால் போலும்—நூலின் 'முன்னீட்டிலே எழுதியுள்ள எஸ். பொன்னுத்துரை 'இக்கதைகள் யாவும் யாழ்ப்பாணத்து கலாசாரத்தை பிரதிபலிக்கும்தேசிய இலக்கியம்'—என்று விளக்கம். தருகிறார். விந்தையான விளக்கம்! தேவையான விளக்கம்.

'யாழ்ப்பாணத் தேசிய இலக்கியம்!'

—விந்தையான, சொற்றொடர்—வேடிக்கையாகவுமிருந்தாலும், அந்த விளக்கமில்லா விட்டாலும் நம்மால் கே. வி. நடராஜனைப் புரிந்து கொள்ள முடியாது போயிருக்கும்.

'வாழ்க்கையின் சாளரங்கள் சிறுகதைகள் என புதுமைப்பித்தன் கூறியது போன்று, இங்கு வேலிப் பொட்டுக்களே யாழ்ப்பாணத்துச் சிறுகதைகளாகியுள்ளன. ஆனால்—

இந்நூல் வெறும் சிறுகதைத் தொகுப்பு மட்டுமல்ல. அதன் சேவை சிறுகதை என்ற நிலையிலிருந்து விரிந்து—ஒரு குறிப்பிட்ட பாக மக்களின் வாழ்க்கை நடைமுறைகளை, அனுபவங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு எழுத்துச் சாசனமாகும். அந்நிலையில் ஒரு வேலிப் பெட்டினூடாக, கண்ணெளிபாயுமிடம்தான் யாழ்ப்பாணம் என வாதிடுவது விந்தையானதொன்றாகும்.

தலைப்பு இன்னொன்றாக இருந்திருந்தால்-இதனது தரம் எவ்வளவோ உயர்ந்திருக்கும் பிரச்சினைகளும் குறைந்திருக்கும்.

ஆயினும், ஆசிரியர்சாதித்ததென்ன?

யாழ்ப்பாணத்து வேலி மறைவிலே நடைபெறுகின்ற ஆஷாடபூதித்தன மிகுந்த சில மனிதர்களின் சின்னத்தனங்களை.

மூடநம்பிக்கையின் மூச்சுத் திணறலிலே உயிர் வாழும் சில அப்பாவிகளை—

வளர்ந்தும், பருவத்தே பயிர் செய்ய மறந்துவிடும் சில கடமையாளர்களை—

மனித குலவரலாற்றிலேயே நடந்துவரும் ஒரு 'இயற்கை ஒவ்வா சேர்க்கை முறைகளை—

யாழ்ப்பாண மண்ணிலே உற்பவித்து, இயக்குவிக்கின்றார்.

ஆகவே—

அவர் காட்ட முற்படும் மனிதர்களும், அவர்கள் செயற் பாடுகளும் சமூகக் கோட்பாட்டின் தத்துவங்களை கேலி செய்வனவாக அமைந்து, அவற்றை நம் கண் முன்னால் ஆசிரியர் கொணர்ந்து நிறுத்தும் போது—

நாமும்அவரைப்போலவே வேதனைப்படுகிறோம், ஆத்திரப்படுகிறோம். அதே வேளையில் இவற்றையெல்லாம் நம்மைப் பார்க்கும் படிசெய்த ஆசிரியர்தான் ஏதோ தகாதகாரியத்தை செய்து விட்டார் என்று அவர் மேல் சீற்றம் கொள்கிறோம் என்றால் நாம் மூலவியாதிக்காரரா?

இதிலுள்ள கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவகையில் பிரச்சினையானவை. அவற்றின் சுருக்கங்களைக் கூட இதில் எழுதி விமர்சிப்பதே பல விளைவுகளை ஏற்படுத்திவிடும். ஆனால்—, இப்பிரச்சினைக்குரிய கருப்பொருள் ஒவ்வொன்றையும் -ஆசிரியர் தனக்கு கைவந்த நடையில்- மண் வாசனைத் தமிழில்-அழகாகச் சொல்கிறார். ஆசிரியருக்கு அழகாக கதை சொல்ல வருகிறது. ஆனால்—, சமூகத்தின் போக்கில், நடைமுறையில் ஆழ்ந்த பார்வையில்லை-என்றே ஒவ்வொரு கதையும் நமக்கு உணர்த்துகிறது.

பல வகைப்பட்ட நூல்கள் வெளியாகும் இக்கால சூழலில்-இதுபோன்ற நூலை யாழ். இலக்கிய வட்டம் வெளியிட்டமைக்குக் காரணம்-தற்கால இலக்கியப் போக்கினை ஆராய்வதற்காக இருக்கலாம். அல்லது கதம்ப மாலையில் 'பச்சைஇலை'களும் அவசியம் என்ற நோக்கால் இருக்கலாம். எப்படியிருந்த போதிலும் குழந்தைகள் பெண்கள், மாணவ மாணவிகள் கையில் இது அகப்படாமல் பாதுகாக்க வேண்டும்.

—சித்தார்த்தன்

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் கார்ல் மார்க்ஸ் தொழிற்சாலையில் 3 நாட்களுக்கு ஒரு என்ஜின் வீதம் 2000 குதிரை வேகமுள்ள டீசல் புகையிரத என்ஜின்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த என்ஜின்களுக்கு 1965-ல் லைப் சிக்கில் நடைபெற்ற சர்வதேச வர்த்தகச் சந்தையில் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டது.

## அரசியலமைப்பு மாற்றமும் அரசியற் கட்சிகளும்

# 29-வது பிரிவு இதுவரை சாதித்தது என்ன?

இலங்கை அரசியலமைப்பு முறையின் 29-வது பிரிவை மாற்றும் அதிகாரம் எவருக்கும் கிடையாது என்பதை அண்மையில் இரணசிங்கா வழக்கில் கோம்மறைச் சபை வழங்கிய தீர்ப்பில் இருந்து தெரியவந்துள்ளது. பொதுவாக இலங்கை அரசியலமைப்பு முறையின் எந்தப் பிரிவைமாற்றவேண்டுமென்ருலும் அதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினர் ஆதரவாக வாக்களிக்க வேண்டு மென்றும் 29-வது பிரிவின் பகுதி கூறுகிறது. ஆனல் அச்சட்டம் எப்படி மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதை அமைப்பு முறை தெளிவுபடுத்தவில்லை. இந்த 29-வது பிரிவை மாற்ற வேண்டுமென்று பாராளுமன்றத்தில் உள்ள அத்தனை உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தாலும் மாற்ற முடியாது என்பது கோமறைச் சபைத் தீர்ப்பு. எனவே தான் பாராளுமன்றம் இறைமையுடையதல்ல என்று டாக்டர் என். எம். பெரேரா கூறுகிருர். சதி வழக்கின் தீர்ப்பிலும் 29-வது பிரிவைஆதாரமாகக் கொண்டே திருத்தப்பட்ட புதியசட்டம்செல்லுபடியாகாது என்று கோமறைச் சபை தீர்ப்பு வழங்கியுள்ளது.

### இந்தியாவில்......

புதிய அரசியல் அமைப்பில் அடிப்படை உரிமைச் சாசனம் மட்டுமே சேர்க்கப்பட வேண்டும் என்பது எதிர்க்கட்சிகளின் வாதம். ஒரு சிலர் 29-வது பிரிவுடன் அடிப்படை உரிமைச் சாசனமும் சேர்க்கப்பட வேண்டுமென்கிருர்கள். இன்னும் சிலர் 29-வது பிரிவே போதும் என்கிருர்கள். அடிப்படை உரிமைச் சாசனம் எந்த வகையிலும் 29-வது பிரிவிலும் பார்க்க வலுவுடையது என்று கருதமுடியாது. இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைச் சாசனமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. தனி மனித உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டுமென்பதையும், ஒரு இனத்திற்கு அல்லது மதத்திற்கு எத்தகைய பாரபட்சமும் காட்டப்படக் கூடாது என்பதையும் இந்திய அரசியல் அமைப்பில் அடிப்படை உரிமைச் சாசனம் வலியுறுத்துகின்றது. இந்திய அரசியலமைப்பு முறையின் 16, 25, 26, 27, 28ம் தொகுதிகள் இதைத் தெளிவாக வலியுறுத்துகின்றன. அதே நேரத்தில் இந்திய அரசியல் அமைப்பில் இந்தியே இந்தியாவின் ஆட்சி மொழி என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அடிப்படை உரிமைச்சாசனம் இந்திய சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு சிறந்த பாதுகாப்பு என்று கூற முடியுமா? இந்த வகையில் நமது அரசியல் அமைப்பின் 29-வதுபிரிவு வலிமையுள்ளதாக இருக்கிறது. சிறுபான்மையினருக்கு பாரபட்சம் விளைவிக்கக் கூடியவகையில் பெரும்பான்மையினர்சலுகைகள் பெறுவதையும் 29-வது பிரிவு கட்டுப்படுத்துகிறது. கூட்டரசாங்கம் 1964 டிசம்பரில் சமர்ப்பித்த அரியணை உரையில் பௌத்த சமயத்தை அரசாங்க மதமாகப் பிரகடனப்படுத்தக் கூடிய முறையில் அரசியல் அமைப்பு முறை மாற்றியமைக்கப்பட வேண்டும்என்று குறிப்பிட்டிருந்ததுஇதற்கு நல்ல எடுத்துக் காட்டாகும்.

### 29-வது பிரிவு சாதித்தது என்ன?

சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காகவே சேர்க்கப்பட்ட 29-வது பிரிவு உண்மையில் எத்தனை தூரம் நமக்குப் பாதுகாப்பு வழங்கியிருக்கிறது என்பதும் ஆராய்வுக்குரியதாகும். சிறுபான்மையினருக்கு பாரபட்சம் ஏற்படுத்தக் கூடிய அல்லது இடர்ப்பாட்டை விளைவிக்கக் கூடிய எந்தவொரு சட்டமும் அதிகாரம் அற்றது என்பதே 29-வது பிரிவின் கருத்தாகும். ஆனல் 1949ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்திய-பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம் சிறுபான்மையினருக்கு பாரதூரமான இடர்ப்பாட்டை விளைவித்திருந்த போதிலும் 29-வது பிரிவின் பிரகாரம் அது சிறுபான்மையினருக்கு பாரபட்சமானது அல்ல என்பது கோமறைச் சபையின் தீர்ப்பாகும். இந்திய-பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டத்தையொட்டிய'நாயர் வழக்கில்' மாவட்ட நீதிமன்றம் சாதகமாக தீர்ப்பு வழங்கியது. ஆனல் உயர் நீதி மன்றமும், கோமறைச் சபையும இச்சட்டம் 29-வது பிரிவில்கூறப்படும் பாதுகாப்பிற்குள் அடங்கவில்லையென்றும், எனவே அச்சட்டம் சிறுபான்மையினருக்கு பாரபட்சமானது அல்ல என்றும் கருத்துப்படவே தீர்ப்பு வழங்கின.

### பாதுகாப்பு உண்டா?

இப்பொழுது உயர் நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கி நிற்கும் 'கோடீசுவரன் வழக்கில்' மாவட்ட நீதி மன்றம் சிங்களம் மட்டும் சட்டம் 29 வது பிரிவுக்கு முரணுனது என்ற கருத்திலேயே தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

இந்த இரு சம்பவங்களையும் ஒப்ப நோக்குகையில் 29-வது பிரிவும் எமக்கு ஏதோ பாதுகாப்பு வழங்கியிருப்பதாகக் கூறிவிட முடியாது. குடியுரிமைச் சட்டம், மொழிச் சட்டம்இது போன்ற வேறு சில சட்டங்கள் 29-வது பிரிவு இருக்கக் கூடியதாகவே நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே 29-வதுபிரிவு, விளம்பரப்படுத்துகின்ற அளவு எமக்கு பாதுகாப்பு அளிக்க வல்லனவல்ல.

### நிர்வாக ரீதியில்......

29-வதுபிரிவுஓரளவுசட்டமூலமான பாதுகாப்பை சிறுபான்மையினருக்கு வழங்குவதாக ஏற்றுக்கொண்டாலும், நிர்வாக ரீதியிலான பாதுகாப்பை எமக்கு எச்சந்தர்ப்பத்திலும் கொடுக்கவில்லை. குடியேற்றத் திட்டங்களினுல் சிறுபான்மையினரின் பாரம்பரிய பிரதேசம் பறிபோகிறது என்பதை சிறுபான்மையினர் ஏகோபித்த முறையில் பாராளுமன்றத்திலும் வெளியிலும் எடுத்துக் கூறியிருக்கிருர்கள். இதே போன்று நிர்வாக ரீதியில் பல இன்னல்கள் இழைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தடைப்படுத்துகின்ற அதிகாரம் 29-வது பிரிவுக்கு கிடையாது. நிர்வாக ரீதியாக சிறுபான்மையினருக்கு எத்தனை இன்னல்கள் இழைக்கப்பட்டாலும் அவற்றைத் தட்டிக் கேட்கும் அதிகாரம் அரசியல் அமைப்பின் 29-வது பிரிவுக்குக் கிடையாது. இலங்கை அரசியல் அமைப்பின் 29-வது பிரிவு சிறுபான்மையினருக்கு ஒருவகையிலான சட்ட ரீதியான பாதுகாப்பேயன்றி நிர்வாக ரீதியான பாதுகாப்பல்ல. 29-வது பிரிவு சிறுபான்மையினருக்கு சட்ட ரீதியான ஒருபொருளாதார அரண் என்ற எதிர்க்கட்சியினரின் வாதம் அர்த்தமற்றதாகிறது.

### முடிவு என்ன?

தமிழ் பேசும் மக்கள் அதிகார ரீதியாகவும், நிர்வாகரீதியாகவும்இலங்கை அரசியலில் பங்கு கொள்ளாதவரையில் நிரந்தர பாதுகாப்பு இல்லை என்ற திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களின் கருத்து தீர்க்கதரிசனம் நிறைந்த ஒன்று என்பது இப்பொழுது உண்மையாகி விட்டது. நிர்வாக ரீதியாகவும், அதிகார ரீதியாகவும் தமிழ் பேசும் மக்கள் இலங்கை அரசியலில் இடம் பெற வேண்டுமென்ருல் அது இன்றைய அரசியல் முறையில் சாத்தியமானதல்ல. இன்றைய அரசியல் அமைப்பின் அடிப்படையே மாற்றியமைக்கப்பட வேண்டும். அரசியல் அமைப்பின் அடிப்படை மாற்றியமைக்கப்படாத வரையில் தமிழ் பேசும் மக்கள் அதிகாரத்தில் இருப்பவர்களினதும் நீதிமன்றங்களினதும் தயவிலேயே தங்கி இருக்க வேண்டியவர்களாகிருர்கள்.

'இலங்கை அரசியலமைப்பின் மாற்றத்திற்கான சூழ்நிலையையும், சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புக் கொடுப்பதாகக் கூறப்படும் 29-வதுபிரிவு இன்றைய அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்ட முறையையும் கடந்தவாரக் கட்டுரையில் ஆராய்ந்த கட்டுரையாசிரியர், இவ்வாரம் 29-வது பிரிவு சிறுபான்மையினருக்கு எந்தளவு தூரம் பாதுகாப்பு வழங்கியிருக்கிறது என்பதையிட்டு ஆராய்ந்துள்ளார். 29-வது பிரிவு சிறுபான்மையினருக்கு நிர்வாக ரீதியிலான பாதுகாப்பு அல்ல. சட்ட ரீதியான பாதுகாப்பாக இருந்த போதிலும் இற்றைவரை எத்தகைய உருப்படியான பாதுகாப்பையும் அப்பிரிவு சிறுபான்மையினருக்குக் கொடுத்துவிடவில்லை. எனவே சிறுபான்மையினர் ஆட்சி அதிகாரத்திலும், நிர்வாகத்திலும் பங்கு கொள்ளத்தக்கதாக அரசியலமைப்பு மாற்றப்படாத வரையில் அதிகாரத்தில் இருப்பவர்களினதும், நீதிமன்றங்களினதும் தயவிலேயே சிறுபான்மையினர் தங்கியிருக்க வேண்டும் என்கிறர் கட்டுரையாசிரியர்.

## 29-வது பிரிவு

29. (1) இலங்கைத் தீவின் அமைதி, ஒழுங்கு, நல்லரசு ஆகியவற்றிற்காக சட்டங்களை இயற்றும் அதிகாரம் பார்லிமெண்டுக்கு இருக்கும்.

(2) அப்பேர்ப்பட்ட எந்த சட்டமாவது:—

(ஏ) எந்த ஒரு மதம் சுதந்திரமாகப் பின்பற்றப்படுதலை தடுக்கவோ கட்டுப்படுத்தவோ படாது; அல்லது.

(பி) ஒரு சமூகத்தினரையோ அல்லது மதத்தினரையோ பாதிக்காத தடைகளும் கட்டுப்பாடுகளும் வேறெரு சமூகத்தினரையோ, அல்லது மதத்தினரையோ பாதிக்கும் வண்ணம் இருக்கலாகாது; அல்லது.

(சி) ஒரு சமூகத்தினரோ அல்லது மதத்தினரோ அனுபவிக்காத சலுகைகளையோ அல்லது வசதிகளையோ மற்றெரு மதத்தினர் அல்லது சமூகத்தினர் அனுபவிக்கும் வண்ணம் இருக்கலாகாது; அல்லது.

(டி) ஒரு மதஸ்தாபனத்தின் அமைப்பை அந்த ஸ்தாபனத்தின் நிர்வாக சபையின் சம்மதமின்றி மாற்றலாகாத.

(3) இந்த சரத்தின் 2-வது உபபிரிவுக்கு மாருக இயற்றப்படும் ஒரு சட்டம். அந்த மாற்றத்தைப் பொறுத்தளவில், செல்லுபடியாகாது.

(4) இந்த சரத்தின் கீழ் தனது அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போது, பார்லிமெண்ட் இக் கட்டளையின் எந்தப் பிரிவையும் மாற்றியமைக்கவோ தள்ளுபடி செய்யவோ முடியும்.

## தமிழ் தொழிலாளர்களுக்கு டாக்டர் இ. மு. வி. அழைப்பு

'தமிழ் பேசும் தொழிலாளர்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்து வந்த இடதுசாரிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தொழிற் சங்கங்களின் உண்மை நிலைமை இப்போது நன்ருக விளங்கி விட்டது. உள்ளத்தில் நஞ்சும் உதட்டில் தேனும உள்ள இடதுசாரித் தலைவர்களின் தொழிற் சங்கங்களில் தமிழ் பேசும் தொழிலாளர்கள் இனியும்அங்கம் வகிப்பது தன்மானமற்ற செயலாகும். தமிழ் பேசும் தொழிலாளர்கள் அனைவரும் மொழி வழித் தொழிற் சங்கங்களில் சேர்ந்து பணியாற்ற வேண்டிய காலம் வந்து விட்டது.' இவ்வாறு டாக்டர் இ மு. வி. நாகநாதன் அவர்கள் இலங்கை பஸ் தொழிலாளர் கழகத்தின் கிளையொன்றை இம்மாதம் 17ம் திகதியன்று மட்டுநகரில் தொடங்கி வைத்து உரை நிகழ்த்துகையில் கூறினுர்.

இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவிலுள்ள பஸ் தொழிலாளர் யூனியனை விட்டு விலகிய பெருந்தொகையான தொழிலாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

மட்டக்களப்பு அரசடிப்பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் டாக்டர் இ.மு வி. நாகநாதன் மேலும் பேசுகையில் கூறியதாவது.

'தொழிற் சங்கம் எதற்கு இயங்க வேண்டும்? தொழில் வளர்ச்சியடையவும், தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவுமே. ஆனல் இன்றைக்கு சில அரசியல் வாதிகள், தொழிற் சங்கங்களை தங்கள் சொந்த நன்மைக்கு உருவாக்கி, தொழிலாளர்களைக் கொண்டு தங்கள் சொந்த வளர்ச்சிக்காக வேலை நிறுத்தங்களை நடத்தினுர்கள். தொழிலாளர் தலைவர் என்று சொல்லிக் கொண்டு, தொழிலாளர்களின் முதுகில் ஏறிச்

(14-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரன்
SUTANTIRAN

1966 மார்ச் மாதம் 6-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

# பொறுப்பற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம் மாநகர சபையில் மீண்டும் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணை வருகிறது. தற்போதைய மேயர் திரு. நாகராசா கடந்த சனவரியிற்தான் பதவிக்கு வந்தார். அதற்குள் அவரை விழ்த்த ஒரு பிரேரணையா? அடிக்கடி மேயர்களை பதவி ஏற்றம் செய்வதும் இறக்குவதும் தானா இந்த மாநகர சபையின் வேலை? அதற்காகவா நகர பிதாக்களை வரியிறுப்பாளர்கள் தேர்ந்தெடுத்தார்கள்?

மாநகர சபை கவனிக்க வேண்டிய உடனடிப் பிரச்சினைகள் எத்தனையோ உண்டு. பஸ் நிலையம், புதிய சந்தை, நகரச் சுகாதாரம் முதலிய பல பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியிருக்க, அவற்றைப் பற்றி இந்த நகரப் பிதாக்கள் கவலைப்படுவதாகவோ, அக்கறை செலுத்துவதாகவோ தெரியவில்லை. அவர்களின் முயற்சியெல்லாம் பதவிக்குவரும் மேயர்களை வீழ்த்துவதிலேயே விரைவிக்கப்படுகிறது.

வரியிறுப்பாளர்களுக்கும் நகரத்துக்கும் பணியாற்ற போதிய அவகாசம் மேயருக்கு அளிக்கப்பட வேண்டாமா? பதவிக்கு வந்து ஒரு சில வாரங்களில் அவரை வீழ்த்தி விட்டால், அவர் என்ன சேவையைத்தான் செய்ய முடியும்? இதனால் முழுக்க முழுக்கப் பாதிக்கப்படுபவர்கள் நகரமக்களே. நகர மக்களுக்குப் பாதகமான இச்செயலில் ஈடுபடுவதில் மாநகர சபை உறுப்பினர்களுக்கு என்ன திருப்தியோ!

இதனால் நகர மக்கள் பாதிக்கப்படுவது ஒரு புறமிருக்க, தொடர்ச்சியான நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் யாழ். மாநகர சபைக்கு நாட்டிலே ஒரு கெட்ட பெயரையும் தேடிக் கொடுத்துள்ளன. இச்சபையில் சில உறுப்பினர்கள் சபையை ஒரு கேலிக் கூத்தாக்கும் நிலைக்குக் கொண்டுவந்து விட்டனர். இவர்களின் நடவடிக்கையால் யாழ் நகரசபை இலங்கையிலுள்ள மாநகரசபைகளில் ஒரு விநோதமான சபையாகக் கருதப்படுகிறது.

இலங்கையிலுள்ள வேறு எந்த நகரசபையிலாவது மேயரை இம் மாதிரி திடீர் திடீரென ஏற்றி, இறக்குகிறார்களா என்பதை யாழ் நகரப் பிதாக்கள் சற்று கண் திறந்து பார்க்கட்டும்.

யாழ். மாநகர சபையில் அரம்பமான இத் தொற்று நோய் வடபகுதியில் இதர உள்ளூராட்சி மன்றங்களிலும் பரவி வருகிறது. காங்கேசன்துறை நகர சபைத் தலைவரைத் தெரிவு செய்து 15 நாட்களில் வீழ்த்தி விட்டனர். இவை வெட்கமும் வேதனையும் படக் கூடிய வெறுக்கத்தக்க நடவடிக்கைகளாகும்.

யாழ்ப்பாண நகரின் உயிர் நாடியான பிரச்சினைகளைப் புறக்கணித்துவிட்டு, மேயரை ஏற்றி, இறக்குவதில் உறுப்பினர்கள் ஈடுபடக் காரணம் அவர்களிடையே மலிந்துள்ள பதவி மோகமும், சுயநல நோக்கமும், கோஷ்டிப் பூசல்களுமேயாகும்.

இம்மாதிரியான ஒழுங்கீனங்களும், வேற்றுமைகளும் மலிந்த மாநகர சபையால் வரியிறுப்பாளர்களுக்குச் சேவை செய்ய முடியாது என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதென்பதில் ஐயமில்லை. இந் நிலையை நீடிக்க விடாமல் நகர நிர்வாகத்தை நடத்த ஒரு விசேட கொமிசனரை நியமிக்கும் நிலையே உருவாகி வருகிறது. இது பற்றி வரியிறுப்பாளர் அநேகர் அரசாங்கத்துக்கு மகஜர்கள் அனுப்பியுள்ளதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. நகரப் பிதாக்கள் இதனை உணர்ந்து தங்களின் சிறுபிள்ளைத்தனத்தைக் கைவிடுவார்களென்று நம்புகிறோம்.

---:---

# இராணுவச் சதி

இராணுவம் சதிசெய்து ஆட்சியைக் கைப்பற்றுவது இப்போதெல்லாம் சாதாரண ஓர் அரசியல் நடவடிக்கையாக மாறிவருகிறது. இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர் தென் அமெரிக்க நாடுகளில் இராணுவச் சதிகள் அடிக்கடி நடைபெற்றன. ஆபிரிக்க நாடுகள் ஏகாதிபத்திய காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற்ற பின்னர், அந்த நாடுகளுக்கும் இது பரவியுள்ளது அண்மையில் சுதந்திரப்பெற்ற. பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நாடுகளிலே—குறிப்பாகச் சிறிய நாடுகளிலேயே இராணுவச் சதிகள் பெரும்பாலும் நடைபெறுகின்றன.

மேற்கு ஆபிரிக்காவில் சின்னஞ் சிறிய சாம்ராஜ்ய நாடான கானாவிலே சென்ற வாரம் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டது. இந்த இராணுவச் சதிக்கு நான்கு தினங்களுக்கு முன்புதான் சிரியாவில் ஆளும் கட்சியின் இடதுசாரிகள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

இராணுவத்தின் இச்சதி நடவடிக்கைகளில் நாட்டுமக்கள் பங்குவற்றுவதில்லை. அவர்களுக்குத் தெரியாமலே இச்சதி நடைபெறுகிறது. ஆகவே அந்த இராணுவ நடவடிக்கைகளுக்குப் 'புரட்சி' என்று கூறுதல் தவறாகும். அது இராணுவச் சதியேயன்றி இராணுவப் புரட்சியன்று. சதிவேறு—புரட்சி வேறு.

இராணுவச் சதிகளெல்லாம் ஒரே அடிப்படையைக் கொண்டவையல்ல. பர்மாவில் இராணுவ ஆட்சியின் தன்மையும், கானாவில் இராணுவ ஆட்சியின் தன்மையும் முற்றிலும் மாறுபட்டவை. பர்மாவிலே இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் அங்கே மக்களின் வாழ்விலும், சமுதாய அமைப்பிலும் ஓர் 'அமைதிப் புரட்சி' நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த அடிப்படை கானா இராணுவச் சதிக்குக் கிடையாது.

ஏகாதிபத்திய அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்ற நாடுகள்—குறிப்பாகச் சிறிய நாடுகள்—ஜனநாயகத்தை விரும்புவதில்லை—காரணம் பல நூற்றாண்டுகளாக ஜனநாயகத்தின் பெயரால் அந்நாடுகள் நசுக்கப் பட்டிருந்ததுதான். எனவே அவை விரைவில் சர்வாதிகாரப் பாதையில் செல்லத் தொடங்கிவிடுகின்றன. தங்களின் சர்வாதிகாரப் போக்கை 'சோஷலிஸம்' என்ற சொல்லால் மறைத்துக்கொள்கின்றன. சரியாகவோ, தவறாகவோ சில உலக நாடுகளில் சோஷலிஸ சமுதாய அமைப்பை நிர்மாணிப்பதற்கு சர்வாதிகாரம் தேவை என்ற நிலை உருவாகியுள்ளது. மக்கள் சர்வாதிகாரத்தைப்போலவே சோஷலிஸத்தையும் வெறுப்பதற்கு இதுதான் காரணம்.

மக்கள் ஜனநாயகத்தையே விரும்புகின்றனர்—சோஷலிஸத்தை விரும்புவதில்லை. புதிதாக விடுதலை பெற்ற சில நாடுகளில் சர்வாதிகாரிகளின் சோஷலிஸமும், மக்களின் ஜனநாயகமும் மோதுகின்றன. இது இறுதியில் இராணுவச் சதியிற் போய் முடிகிறது. சதி வெற்றி பெற்று, சர்வாதிகாரமும் சோஷலிஸமும் நசுக்கப்பட்டாலும், மீண்டும் மக்களுக்கு ஜனநாயக வாழ்வு கிடைக்குமா என்று திண்ணமாகக் கூறுவதற்கில்லை. இராணுவம் ஆட்சி அதிகாரத்தை மக்களுக்கு வழங்கினால் ஜனநாயகம் தழைத் தோங்க வழி பிறக்கும். இல்லையேல். மற்றொரு வகையான சர்வாதிகாரம் (இராணுவச் சர்வதிகாரம்) தோன்றி, தலைவலி போய் திருகுவலி வந்த கதையாக முடியலாம்.

சிறியநாடுகளில் நடைபெறும் இராணுவச் சதிகளுக்குப் பின்னால் சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட வல்லரசின் கையிருப்பதை நாம் கண்டுள்ளோம். தங்களுக்குப் பிடிக்காத ஓர் ஆட்சிமுறை ஒரு நாட்டில் தலை தூக்குகிறதென்றால், வல்லரசுகள் உடனே அந்த நாட்டு இராணுவத் தலைவர்களைத் தூண்டி ஆட்சியைக் கைப்பற்ற வழி வகுத்துக் கொடுக்கின்றன இதற்காகப் பலம் பொருந்திய இரகசிய நிறுவனங்களை அமைத்திருப்பதுடன், கோடிக் கணக்கான பணத்தையும் அந்த முயற்சிக்காகச் செலவிடுகின்றன. கானா இராணுவச் சதிக்கு ஓர் வல்லரசு எவ்வளவு தூரம் உதவியது என்பதைச் சதித்தலைவர்களில் ஒருவர் லண்டனில் அண்மையில் வெளியிட்டார்.

இன்று இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றுவது பெரும்பாலும் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்த நாடுகளில்தான். எனவே அந்த நாடுகளில் இராணுவச் சதி ஜனநாயகம் புத்துயிர் பெற வழி வகுக்குமென்பது ஓரளவு உண்மையே. எனினும் இதனால் மக்களின் மீது தமது அதிகாரத்தைத் திணிக்க இராணுவத்துக்கு வழி ஏற்படுகிறது. எனவே எந்த நோக்கத்துக்காக நடைபெற்றாலும் இராணுவச் சதிகளை ஜனநாயகவாதிகள் ஆதரிக்க முடியாது.

# அமைச்சரவை முடிவு மாற்றியமைக்கப்பட வேண்டும்

---o---

## தமிழ் பேசும் மக்களுக்கு தனிப் பல்கலைக் கழகம் அவசியம்

நாட்டின் உயர்தரக் கல்வி சம்பந்தமான புதிய மசோதா ஒன்றைக் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை வெகு விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கிறார். இம் மசோதா பல்கலைக் கழக அமைப்புமுறையில் குறிப்பிடக் கூடிய பெரும் மாற்றங்களை ஏற்படுத்தவிருக்கிறது.

இன்றிருக்கும் பல்கலைக் கழகங்களையும் சேர்த்து புதிதாக ஆறு பல்கலைக் கழகங்களை நிறுவுவதற்கும், பதினைந்து பல்கலைக் கழக கல்லூரிகளை நாட்டில் ஏற்படுத்துவதற்கும் மசோதா இடமளிக்கிறது.

பல்கலைக் கழகங்களில் ஏற்படவிருக்கும் ஏனைய மாற்றங்களின் பிரகாரம் புதிய அமைப்பு. முறையில் துணை-வேந்தர் பதவி, ஒன்றுக்கு மேற்பட்ட பல்கலைக் கழகத் தலைவர்கள் மூலம் மாற்றியமைக்கப்படவிருக்கிறது. தலைவர்கள் நியமனம் மூலம் பல்கலைக் கழக அதிகாரத்தில் கல்வி அமைச்சரின் அதிகாரம் வலுவடையப்போகிறது. இதனால் மீண்டும் ஒரு புதிய முறையில் அரசியற் செல்வாக்கு பல்கலைக்கழகத்தில் தலை காட்டவே செய்யும்.

எந்த நோக்கத்திற்காக இன்றைய பல்கலைக் கழக அமைப்பு முறை மாற்றியமைக்கப்பட்டதோ, அந்த நோக்கம் மீண்டும் பூரணப் படுத்தப்படவில்லையென்றே கூற வேண்டும்.

### நீண்ட கிளர்ச்சி

புதிய ஆறு பல்கலைக் கழகங்களில் எதுவுமே சிறுபான்மை மக்களின் தேவையைப் பூரணப்படுத்தப் போவதில்லை. மத ரீதியிலாயினும் சரி, மொழி ரீதியிலாயினும் சரி இந்த ஆறு பல்கலைக் கழகங்களில் ஒன்றுதானும் சிறுபான்மையினருக்காக ஒதுக்கப்படவில்லை.

வித்தியோதய, வித்தியாலங்கார என்னும் இப்போதைய இரு பல்கலைக் கழகங்கள் புத்த மதக் கோட்பாட்டின் அடிப்படையி

சுதந்திரன் அரசியல் நிருபர்

லேயே அமைக்கப் பட்டுள்ளன. இவை இரண்டும் பௌத்த-சிங்கள கலாச்சாரத்தின் அடிப்படையில் செயற்படுகின்றன. புதிதாக அனுராதபுரத்தில் பிக்குகளுக்கென்று தனியாக ஒரு சர்வ கலாசாலை நிறுவப்பட விருக்கிறது. மொத்தமாக புதிய திட்டத்தின் கீழ் மூன்று சர்வ கலாசாலைகள் பௌத்த-சிங்களக் கலாசாரத்தின் அடிப்படையில் அமைகின்றன. எஞ்சியிருக்கக் கூடியன மூன்று பலகலைக்கழகங்கள்.

இம் மூன்று பல்கலைக் கழகங்களும் சகலருக்கும்பொதுவான நிறுவனங்களாகும். தமிழ்-சிங்கள மாணவர்கள் அனைவரும் பௌத்த-இந்து-இஸ்லாமிய-கிறிஸ்தவர்கள் என்ற வேறுபாடற்ற முறையில் இம் மூன்று பல்கலைக் கழகங்களிலும் அனுமதிக்கப் படுவார்கள். இந்த நிலையில் பௌத்த-சிங்கள மாணவர்களுக்கு நாட்டில் உள்ள அத்தனை (பிக்குகளுக்கான பல்கலைக் கழகம் தவிர)பல்கலைக் கழகங்களின் கதவுகளும் திறந்து விடப்பட்டிருக்கும் என்றே தெரிகிறது. மத அடிப்படையில் மூன்று பல்கலைக் கழகங்களை நிறுவ ஒப்புதல் அளித்த தேசிய அரசின் அமைச்சரவை சிறுபான்மை மக்கள் அனுஷ்டிக்கும் மதங்களான இந்து-இஸ்லாமிய-கிறிஸ்துவ மதங்களுக்கும் முறையே ஒவ்வொரு பல்கலைக்கழகங்களை ஒதுக்கியிருக்க வேண்டும். இதற்கான கிளர்ச்சி நீண்ட காலமாக நாட்டில் இருந்து வருவதை அமைச்சரவை எளிதில் மறந்திருக்க முடியாது.

### பல்கலைக்கழக கல்லூரிகள்

இந்துப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கென்று கடந்த அரசாங்கம் அடையாள மானியமும் ஒதுக்கியிருந்தது. இஸ்லாமியர்களும் தமக்கென்று தனிப் பல்கலைக் கழகம் வேண்டுமென்பதைவலியுறுத்திவந்திருப்பதுடன் கொழும்புசாகிராக் கல்லூரியைப் பல்கலைக் கழக அந்தஸ்துக்கு உயர்த்தும் வண்ணம் கடந்த அரசாங்கத்தைக் கேட்டிருந்தார்கள் என்பதையும் அமைச்சரவை மறந்திருக்க முடியாது.

மத அடிப்படையில் பல்கலைக்கழகங்களை நிறுவுவது தவறு என்ற வாதமும் இருக்கலாம். இந்துப் பல்கலைக் கழகத்திற்கு கடந்த அரசாங்கம் அடையாள மானியம் ஒதுக்கியதற்கு அந்தரங்க நோக்கம் வேறாகவும் இருக்கலாம், என்றாலும் மூன்று பல்கலைக் கழகங்களை பௌத்த மத அடிப்படையில் நிறுவ முற்பட்ட பொழுது இவற்றைப் பிட்டும் அமைச்சரவை ஆராய்ந்திருக்கவேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.

மொழி அடிப்படையிற் பாத்தாலும் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு இன்றைய பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் உட்பட நாட்டில் உள்ள மிகச் சிறந்த கல்விமான்கள் முயற்சி எடுத்து வருவது ஒவ்வொருவர் கவனத்தையும் கவர்ந்துள்ள விடயமாகும்; இன்றைய உள்ளூராட்சி அமைச்சர் அவர்களும் தமிழ்ப் பல்கலைக்கழக நிறுவனத்தின் ஆரம்ப உறுப்பினர்களின் முன்னணியில் உள்ளவராவர்.

மொழி அடிப்படையிலாயினும்சரி மத அடிப்படையிலாயினும் சரி புதிய பல்கலைக்கழகங்களை நிறுவும்விடயத்தில் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டிருப்பது மிகப் பாரதூரமான தவறாகும். பதினைந்து பல்கலைக் கழகக் கல்லூரிகளில் மூன்று வட—கீழ் மாகாணங்களில் நிறுவப்படும் என்று தெரிகிறது. மூன்று பல்கலைக்கழகக் கல்லூரிகள் வட—கீழ் மாகாணங்களுக்குப் போதுமானது என்று கூறிவிடமுடியாது.

(9-ம் பக்கம் பார்க்க)

# கல்வி அமைச்சர் மீது பலரும் அதிருப்தி

கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலை அவர்களின் நடவடிக்கைகள் சில, பலருக்கு ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. பொறுப்பற்ற முறையில் சில வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு அவற்றைச் செயற்படுத்தாது விடுவதாகவும், சில சந்தர்ப்பங்களில் பொறுப்பற்ற முறையில் கருத்துக்களைத் தெரிவிப்பதுமே அவரின் மீது பலரும் ஆத்திரப்படுவதற்குக் காரணம் என்று நம்ப முடிகிறது.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் சென்றிருந்த கல்வி அமைச்சர் அங்கு அவரைச் சந்தித்த தமிழாசிரியர்களிடம் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தார் என்பதும் அவற்றில் ஒன்றையாவது இதுவரை நிறைவேற்றவில்லை என்பதுமே தமிழாசிரியர்களின் அதிருப்திக்குக் காரணமாகும்.

வேலையற்றிருக்கும் 22 ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்ற தமிழாசிரியர்களுக்கு இந்த ஆண்டின் ஆரம்பத்தில் வேலை கொடுப்பதாக கிளிநொச்சிப் பிரதிநிதிக்கு கல்வி அமைச்சர் வாக்குறுதி கொடுத்திருந்தாராம். இப்பொழுது தராதரம் பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை கொடுப்பதில் அவர் பின்னிற்பதாக அறியப்படுகிறது.

வெளிமாகாணங்களில் உள்ள தமிழாசிரியர்களை சொந்த ஊருக்கு இடமாற்றம் செய்வதாக கல்வி அமைச்சர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை [illegible] இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்கம் அமைச்சருக்குக் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறது.

மேலும் பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்திருந்த பல வாக்குறுதிகளை நிறைவேற்ற அவர் இப்பொழுது பின்னிற்கிறார் என்று தெரிகிறது.

## அமைச்சரவை...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வட—கிழ்மாகாணங்களிலும் ஏனைய மாகாணங்களிலும் உள்ள கல்லூரிகள், மாவித்தியாலயங்களின் தொகையினடிப்படையில் பல்கலைக் கழகக் கல்லூரிகளை மாகாணம் தோறும் நிறுவ முற்பட்டாலும், நிச்சயம் எட்டு பல்கலைக் கழகக் கல்லூரிகளை வட—கிழ் மாகாணங்களில் நிறுவவேண்டியது தவிர்க்க முடியாததாகிறது. மக்கள் தொகையினடிப்படையிலாயினும்சரி, பிரதேச அடிப்படையிலாயினும் சரி இக்கல்லூரிகளை நிறுவ முற்பட்டாலும் நிச்சயம்மூன்றுக்கு மேற்பட்ட கல்லூரிகளைப்பெறும் சகல தேவைகளும் வட—கிழ் மாகாணங்களுக்கு இருக்கிறது.

### தமிழ் பிரதிநிதிகள் கடமை

பல்கலைக்கழகங்களையும், பல்கலைக்கழகக் கல்லூரிகளையும் நிறுவும் விடயத்தில் அமைச்சரவை முடிவு நிச்சயம் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும். இதுபற்றி தமிழ்ப் பிரதிநிதிகளின் கருத்தை அறிய அமைச்சரவை முயற்சிசெய்யவேண்டும். அதன் பின்னரே புதிய கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் நிறுவுவது பற்றி அமைச்சரவை ஒரு முடிவுக்கு வரலாம்.

சிறுபான்மையினருக்கு பல்கலைக்கழகம் வேண்டும் என்ற பிரச்சினையில் தமிழ்ப் பிரதிநிதிகள் மத்தியில் நிச்சயம் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. கல்விமான்களின் முயற்சியுடன், மத வேறுபாடற்ற முறையில் தமிழ் பேசும் மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள தமிழ்ப்பல்கலைக் கழக இயக்கம் முதலில் அங்கிகரிக்கப்படவேண்டும். அதன் பின்னரே மத அடிப்படையிலான பல்கலைக்கழகங்கள்பற்றி ஆராயவேண்டுமென்பதை முற்கூட்டியே நமது தமிழ்ப் பிரதிநிதிகளுக்குக் கூறிவைக்க விரும்புகிறோம். முதலில் பல்கலைக் கழகங்களை நிறுவுவதுபற்றிய அமைச்சரவைமுடிவைவிட்டு புனராலோசனை செய்ய வேண்டுமென்பதை தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் அவசரமும் அவசியமுமாக அமைச்சரவையிடம் தெரிவிக்கவேண்டும். இதில் காலதாமதம் செய்வது பின்னர் பெரிய ஆபத்தை உருவாக்கும் என்பதைத் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு பலமாக வலியுறுத்திக் கூறி வைக்க விரும்புகிறோம்.

## வியட்னும்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

1945 செப்டம்பர் மாதம் வியட்னும் சனநாயக குடியரசை நிறுவினுர் கோ-சி-மின்.

கோ-சி-மின்னிற்கும் பிரான்சுக்குமிடையே பேச்சுவார்த்தை நிகழ்ந்தது. சுதந்திரம் வழங்கப்படும் என்ற வாக்குறுதியின் பேரில் பிரெஞ்சுத் துருப்புக்கள் வியட்னுமில் இருக்க அனுமதிக்கப்பட்டனர். தமது அதிகாரம் வியட்னுமில் வழி செல்லவில்லையே என்று பிரெஞ்சுக்காரர் ஆத்திரமடைந்தனர் வியட்னுமினது பலம்குறைந்த தென்பகுதியில் பிரெஞ்சு தூதர் கொச்சின்-சீனு என்றொரு இராச்சியத்தைப் பிரகடனப்படுத்தி வம்பு செய்தார். வடக்கே கைபொங் துறைமுகத்தில் குண்டுமாரி பொழிந்து பிரெஞ்சுக் கடற்படை ஆயிரக்கணக்கிற் பொதுமக்களைக் கொன்று குவித்தது. டிசம்பர் 1945ல் வியட்னும் இயக்கத்தினர் நாடெங்கிலும் பிரெஞ்சு இராணுவத்திற்கெதிராகத் தாக்குதல்களை ஆரம்பித்தனர். இவ்வாறு ஆரம்பித்த தாக்குதல் யுத்தமாக மாறி ஒன்பது வருடகாலம்நீடித்து, 1954ல் கைச்சாத்தான ஒரு சர்வதேச ஒப்பந்தம்மூலம் ஒரு முடிவிற்கு வந்தது. வியட்னும் இரண்டாகப் பிளந்தது.

(வளரும்)


# ஜீ. ஸீ. ஈ. பாட புத்தகங்கள்

கல்விப் பொதுத் தராதர (உயர்தர)ப் பரீட்சைக்கான பாட நூல்

## 'கந்த புராணம்'

(உற்பத்தி காண்டம்)

- காமதகனப் படலம்
- தவங்காண் படலம்
- வரைபுனை படலம்
- மோன நீங்கு படலம்
- கணங்கள்செல் படலம்
- மணம் பேசு படலம்

ஆகிய படலங்களில் உள்ள செய்யுட்களுக்கான பதவுரை—பொழிப்புரை முதலியவற்றைக் கொண்ட நூல்

உரையாசிரியர்:-

பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள்

விலை ரூ. 3-75. தபாற் செலவு சதம் 75 தனி.

வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும்

★ மார்க்கண்டேயப் படலம் விலை 4-00

## நவலட்சுமி புத்தகசாலை,

136 (S) செட்டியார் தெரு, கொழும்பு-11.





# டிஸ்பிரின்

## வலியிலிருந்தும் காய்ச்சற் குணத்திலிருந்தும் நம்பிக்கையான துரித நிவாரணமளிக்கிறது.

டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உட்கொள்ளுங்கள். அது உங்களுக்கு உடனடி நிவாரணம் தரும்.




விரிவான ஆராய்ச்சிகள் செய்து விசேஷ சேர்வம்சங்கள் கொண்டதாக தனி முறையில் தயாரிக்கப்பட்டது - டிஸ்பிரின். இதனுல் தான் டிஸ்பிரின் விரைவாய் இரத்தோட்டத்தில் சேர்ந்து உடன் நிவாரணமளிக்கிறது.

தலைவலி, காய்ச்சற் குணம், உடல் வலி, பல்வலி, மாதவிடாய் முதலியன தரும் வேதனையிலிருந்து விடுபட, டிஸ்பிரின் உட்கொள்ளுங்கள்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் நம்பிக்கையுடன் சிபார்சு செய்வது டிஸ்பிரின்.

டிஸ்பிரினை உட்கொள்ளுதல் சுலபம். அதைத் தண்ணீரிற் கரைத்துக் குடிக்கலாம்; அல்லது வில்லையாகவே விழுங்கி விடலாம்.

றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு.

J.W.T.R.C.9

# உரிமை

## முனியப்பதாசன்

ஆலடியின் இடிந்த மதிலோரத்தில் சாய்ந்தபடியே பக்கத்தில் உள்ள இடுகாட்டையும் சுற்றுப் புறத்தையும் பார்க்கிறபோது இயற்கையின் நுட்பமான பேசாச் சங்கதிகளே தேவனைப் பற்றிய பேரறிவு என்பதாக எண்ணம் எழுகிறது. மேற்கோடியின் நிதான உயரத்தில் சந்திரவட்டம் ஒளி பீய்ச்சுகிறது. பிசிறற்ற மங்காத பொற் தகட்டை உலகெங்கும் பரப்பிவிட்டாற்போல அழகியதோற்றம் அது. ஆலயின் மதிலடியின்கீழ், நீரோடை கால் வகுக்க மாரிக்கால அடை மழையில் அள்ளுண்டு வந்த 'யப்பான் குஞ்சுகளும்,' பனை உரஞ்சி மீன்களும் துள்ளி நெளிகின்றன. மழை நீரின் பசுமைத் துடிப்போடு உழவனின் திருக்கரத்தில் முறுகி நெற்றிப் பொட்டில் சிந்திய வியர்வைத் துளியில் வளர்ந்த நெற் கதிர்கள் கதிர் கக்காத கன்னிமையின் தாப அழகோடு நடனமிடுகின்றன. அழகுகளை, எல்லையற்ற நீலப் பரப்பில் கலம் மிதக்கும் அழகிலும் பெண்ணின் தாய்மைக் கோலத்திலும் பிறவற்றிலும் தேக்கிப் பிடிக்க முயன்ற ஆங்கிலக் கவி டேவிட்டின் பேதமையை அறிவுறுத்துகிறாற் போல ஆயிரவித அழகுகள் எல்லா இடத்திலும் பிறக்கின்றன. அழகு சார்ந்து நிற்கிறபோது பிறக்கும் அழகும், அழகு பிறிதொன்றையும் சாராமல் நிற்கிறபோது பிறக்கும் அழகின் தனித்துவமும் போட்டி போட்டுத் தெரிகின்றன.

தூரத்தே சலனமற்ற அமைதியை இலேசாய்க் கிழித்தபடி மாட்டின் சதங்கை ஒலி பிறந்து வளர்ந்து கொண்டிருந்தது. சுற்றுப்புறமே கால் பெயர்த்து நடனமிட முயலும் பெயர்ப்பில் பிறக்கிற ஒலியின் பிரமை உணர்வு. என் கடமை என்னை உந்திற்று. வரும்வழி பார்த்து நின்றேன். மானிப்பாயிலோ அதனை அடுத்துப் பரந்திருக்கும் கிராமப் புறங்களிலிருந்தோ வருகிற மாட்டு வண்டிலாகத் தான் இருக்கும் என்று மனம் முடிபு செய்தது. சந்தேகமென்ன? மாட்டின் சதங்கை ஒலிதான் பேசாச் சங்கதிகளைப் பேசுகிறதே? நகர்ப் புறத்தில் மாடுகளின் உணர்வுகளை மதிக்கவும் செல்லமாய் அதன் அருமையை உணர்ந்து பேணவும் மூட்டை முடிச்சுக்களையும் விறகு கட்டைகளையும் ஏற்றும் வண்டி ஓட்டிக்கு மனமேது? குழந்தையின் அரை ஞாணிலோ, காற்பாகத்திலோ சதங்கை கட்டி அது சிறு அடி பெயர்க்கிறபோது பிறக்கும் ஒலியில் மகிழும் தாய் போல மாட்டின் சதங்கை ஒலியில் மகிழக் கிராமப் புறத்து உழவனைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்? மாடும் வண்டியும் கண்ணிற்குப் புலனாகவில்லை. நான் இராக் காவலாளன். உள்ளிலிருந்தும் பிற இடத்தில் இருந்தும் கால்நடைகள் போய்வராமல் காக்கும் வேலைதான்.

ங்...ங்...ங்...என்று சதங்கை ஒலி மட்டும் தூவானமாய் பரவிக் கொண்டிருந்தது.

புலன் சகலதையும் செவிப்புலனில் லயப்படுத்திக் கேட்டேன். விடாமல் தொடர்ந்து கோவில் மணி நாக்குப் பெய்யும் ஒலி சடுதியாய் நிற்கவும் முன்னதன் நாத அலைகள் கிழிறங்க, அலைகளின் ஒலி புதிதாய் முதல் குரலெடுக்கும் சிள் வண்டின் ஒலிபோலக் கேட்குமே அது போலச் சலங்கை ஒலியும் தேயத் தொடங்கி மறைந்தது. இராக் காவலிற்காய் நிற்கும் நான் பலரும் உதறிவிட்ட இந்த மிருகக் காவற் பகுதியின் நோய்த் தடுப்புத்' தற்காலிக வேலையை என் ஆத்ம பலத்தினை மட்டுமே நம்பி எடுத்திருந்தேன். அதற்கு இது சவாலோ?

ஆலடியில் இராக் காவல் உத்தியோகம் பார்க்கப் போகிறேன் என்று நான் வீட்டில் வார்த்தை பிறப்பித்தபோது அம்மா சொன்ன வார்த்தைகள் நினைவில் உந்தின. 'கெட்ட இடம். பிசாசுகள் உலாவிற இடம். பருவம் பருவமில்லாமல், அடங்கியும் அடங்காமலும் ஆன பிடிப்புக்களோடு உருசிகள் போயிருக்கும்......அதுவும்...அதுவும் இரவிலே... என்னவோ விரும்பினுப் போ?......ஆண் என்டா நாலு இடமும் அடிபடத் தான் வேணும்...'

என்னவோ பயம் இலேசாய் ஏறிக்கொள்ள ஆரம்பித்தது. இடு காட்டின் காவலாளி இராப்போதில் சுடலை, வயிரவர் வெள்ளை வேட்டியோடு உலாவுவதைத் தான் கண்டதாகக் கூடச் சொன்னரே...சடுதியாய்ச் சுற்றுப் புறத்தின் அழகிய காட்சி மங்கிற்று. பயம் எழுந்தது. பிசாசுகளின் நடனம், பிசாசுகளின் ஒப்பாரி, மரண ஓலம், உயிர் அவஸ்தை, ஜீவனின் சுருதி தப்பிய ஒலிகள்......

'...ஆத்மா என்பது அழிவில்லாதது. என் உள் வழிமுறையாய் வந்த ஆத்மாவின் பலம் இருக்கிறது. மனிதனும் அவனால் தோற்றுவிக்கப் பட்டனவும் எதுவும் தொட முடியாத ஆத்மா? நான் அதன் பிரதிநிதி. நான் ஆத்மா. ஆத்மாவேதான் நான். தூரத்தூர ஒடு பயமே. நான் அழிவில்லாதவன். நான் ஆத்மா...'

வேத காலத்தில் வேள்விப் புகைபரவ உச்சாடனம் செய்யும் ஆத்மிகிகளைப் போல நான் உரக்கவே நான் பயிற்றி வளர்த்த மந்திரத்தைச் சொல்லிக் கொண்டேன்.

பயம் அகன்று விட்டது. பயமெனும் உணர்வு அழிய அறிவு எழுந்தது. அறிவின் கூர்மையில் என்னுள் கண நேரத்தில் எழுந்த விசித்திர மனோ உணர்வுகளை நான் எடைபோட முயன்றேன். இந்து சமயத்தைப் பின் பற்றிய சந்ததிகள் மனோ உணர்வோடும் பிறவற்றோடும் ஆழமாய்க் கண்ட உண்மைகளை நாமே பரிகசித்துக் காறி உமிழ முயன்றபோது ஐரோப்பியர்கள் விரும்பிக் கற்றும் போற்றியும் தம்விஞ்ஞான அறிவோடு அதன் துணையோடு நமது உணர்வுகளையும் தத்தவங்களையும் உளநூற் பாங்கில் நிரூபணமாக்கி விட்டார்கள். நாம் இன்னும் கூட...? பிரார்த்தனையும், உள்ளமும் உடலும் சம்பந்தமாய் ஐரோப்பியர்கள் எழுதிய ஆழம் மிக்க கட்டுரைகள் நினைவில் மோதின.

மதகடியின் நீரோடைக் கரையில் இறங்கிக் கோரைப், புல்லின் சணல் துண்டை ஒரு சேரப் பிடித்தாற்போல இருக்கும் பூவைத் திரட்டி அவற்றின் காம்பைக் கோர்த்துப் பிடித்து அழகு பார்த்தபடி நின்றேன். காம்பும் பூவும் ஒரே நிறத்தில் இருந்ததால் அதன் அழகு மனதைக் கொள்ளவில்லை. தூர அவற்றை வீசிவிட்டு மேலேறினேன்.

நிமிருகிறபோது இடுகாட்டின் உள் சரசரப்புச் சத்தம் எழுந்தது. மனதின் சங்கதிகளை மனதோடு போராடுபவன் மட்டும்ம தான் உணர்ந்து கொள்ள முடியும். பயம் பிரார்த்தனையையும் விஞ்சி மீண்டும் எழ முயன்றது. பயத்தை ஒட்டிவிட முயன்றேன். சரசரப்புச் சத்தம் காரணமாய் மனம் எது எது பற்றியோ அலை பாய்ந்து இழுத்து வலிய முடிய முனைந்தது. பக்குவப்படாத் தன்மையில அலைப்புறும் ஆவியின் ஒலியோ? நாகப்பாம்பு தன் இமை நோக்கிப் பாயும் வேக ஒலியோ?... ஒரு சமயம் ....காவலாளியின் வார்த்தைகளே நினைவில் இறுகிற்று. சுடுகாட்டு வயிரவர்...? அந்த நினைவு இனித்தது. அந்தத் தேவனின் உருவைக் காணக் கூடுமானல் மனிதனின் விசித்திரமான ஆசைகளை யாரால் புரிய முடிகிறது. சடுதியாய்ச் சுடுகாட்டின் கம்பிக் கதவைத் தாண்டி உள் இறங்கி விட்டேன்.

சந்திர வட்டத்தில் இருந்தும் ஒளியின் கற்றைகள் இலையும் கிளையும் விழுதுகளுமாய் மூடியிருந்த ஆலப் பரப்பில் நுழைய முயன்று சிதறி வயது தளர்ந்த மனிதனின் முக ஒளிபோல மங்கிற்று.

அந்த மங்கிய ஒளியில் நெற்றிக்கு நேரே தெரிந்த காட்சி என்னை உலுப்பிற்று. ஆலமரத்திற்குப் பக்கத்தே உள்ள சுடலை வயிரவ கோவிலின் உண்டியலைத் திறந்தபடி இருந்தார் அவர்.

அவரை வெகு நாட்களாகவே எனக்குத் தெரியும்.

மெலிய உருவம் சிற்றின்ப உலகத்தில் புலன் சுழிப்பில் ஆட்பட்டு, ஆட்பட்டு மோதி, மோதி உயிரின் ஜீவனை இழந்துவிட்ட மெலிவு இல்லை. மேற் காற்றில் மிதந்து, மிதந்து செல்லும் சருகு கிழிறங்கி மண்ணில் படிந்து மண்ணுகி மீண்டும் அதன் ஆரம்பத்தோற்றத்திற்காய் ஏங்கி நிற்கும் துடிப்பை உணர்ந்து, அந்தத் துடிப்பினைச் சருகின் அலைப்பில் உணர்ந்து கசிந்து மெலிந்த உடம்பு. இறைச்சிக் கடைகளிலேயும் பிறவற்றிலும்உயிரினை இழந்து தொங்கும் பரிணமவளர்ச்சியில் தேங்கி விட்ட சிற்றுயிர்களின் உயிர் ஓலத்தைக் கேட்டுக் கேட்டு மெலிந்த மெலிவு அது. இருதயத்தின் நாளங்களில் இருந்தும் நாடி நரம்புகளில் கருணை வெள்ளமே பாய்கிறாற்போல அவரது இயக்கம். கண்களில் தொலைநோக்கு. மலரின் இதழ்களில் சிறுகச் சிறுக நிறம் தீட்டும் நளினமென் விரல்களின் பொலிவையும் அது அழிவைத் தொடும் அவலத்தையும்பாக்குமாப் போன்ற பார்வை. உலகின் இரண்டுவிதமான வேறுபாடுகளையும், அந்த முரண்பாடுகளின் பிறப்பிடமாய் நிற்கும் தோற்றங்களின் இயக்கத்தைப் புரியாமல் நிற்கிறேமே என்கிற ஆதங்கம், எதற்கோ முயன்று முயன்று தோற்றுப்போய் அந்தத் தோல்வியே நம்பிக்கையின் அனுபவங்களாய் மின்ன அந்த அனுபவங்களின் துணையோடு நிற்கும் ஆண்மை.

சிலைப்பேனும் அழுக்கும் ஈறெலாம் புகுந்து நிற்கும் நான்கு முழத் துண்டை அரையில் தொடுத்தபடி யாழ்ப்பாணத்து வீதிகளில் உலவுவார். நடந்துகொள்கிறபோது, துணிபிரிகிற பேர்து துடையெங்கும் அடர்ந்திருக்கும் மயிர்கள் பனம் சிராம்புகள்போலத் தெரியும். கையில் ஒருபழங் குடை அதன் முனை வீதியோரத்துப் பழம்பேப்பர் சருகுகள் என்னுமிவற்றில் பட்டுப் பட்டுமுன்னேறும்.

அவர் பார்வை கிடுகு வேலி ஒன்றில் பதிகிறது. கதிகால்களில் அதன் முடியில் படர்ந்திருக்கும் தழைகளில் மேவிப் படிந்து நிலைகுத்திற்று. முள் முருக்கங் கொம்பர் ஒன்றிலிருந்தும் நூலிழை பெருகிப் பெருகி முற்றுத் தரிப்பற்று நீண்டது. அதன் முனையில் இளம் சிலந்தி ஒன்று நடுங்கிற்று. விழுங்கியும் ககியும் ஏறி இறங்கித் தொங்கிற்று. அவர் கண்களில் காவிய அழகின் நயங்கள் சொட்டிற்று. சின்னம் சிறிய அதன்உடலும்விரல்களும் அசையும் அசைவு அவர் மனதில் எதனையோ முகிழ்ப்பித்தது. கைகளைக் கொட்டியபடியே ஒலி எழாதவாறு சிரித்தார். இதழ் வழியே அமுதம் சிந்தினாற்போல இருந்தது.

வெகுநேரமாய் அதனையே பார்த்தபடி நின்றார். சடுதியாய் நூலிழை அறுந்து சிலந்தி நிலத்தில் விழுந்து அதிர்ந்தது. அவர் இதழ்கள் கோணிச் சுருங்கிற்று. குனிந்து விழுந்து கிடந்த சிலந்தியை எடுத்து கதிகாலின் கொம்பரில்எப்படியோ விட்டார். மாறி மாறிப் பெரிதாய் சில நிமிடங்களின் இடையே நேர்ந்த அதிர்ச்சிகளில் ஸ்தம்பித்து இசையில் அசையாது நின்றது சிலந்தி. சந்தேகத்தோடு அதனையே பார்த்தபடி நின்றார். நேரம் கருகி உதிர்ந்துகொண்டிருந்தது. சிலந்தி சற்றே பெயர்ந்தது. அவர் நடை ஒலியும் பிறந்து வளர்ந்தது.

அவரியாருக்கும்புரியாத மனிதர். அவர் நிற்கிறபோது நின்று, நடக்கிறபோது நடந்து அவரை நான் புரிந்துகொள்ள முயன்றிருக்கிறேன். அவருள் புகுந்து அவரை 'இன்னர்' என்கிற புதிரை அவிழ்த்துவிட்டு, சிருஷ்டியின் நிர்வாணமாய்ப் பார்த்துவிட வெறும்இலக்கிய உணர்வு போதுமா? மாலை பிறந்துவிட்டால் அவருக்குப் புதிய உலகம் முகைஅவிழும்.

அரசடி ஒழுங்கையில் இருக்கும் நெடிதோங்கிய அரசமரம் சலனமற்றிருந்தது. வெளுத்த மேற்தோலின் வெண்மை படிந்துவரும் சுற்றுப்புற இருளில் பளிச்சென்று துலங்க முயன்று தோற்றுப் பகைப்புலத்தில் சமைந்தது. அரசமரத்தின் அடியில் சிமெண்டால் செய்யப்பட்ட வயிரவ கோவிலின் உள் திரிசூலத்தில் நானுவித மலர்கள் சிதறுண்டு கிடக்கின்றன. 'குப்பி' விளக்கில் சுடர் ஒளி பரவிற்று.

அவர் அந்த வயிரவ சூலத்தின் முன்னுல் நிற்கிறார்.

மெலிதாய்ச் சுடர்விட்ட தீபம் படபடவென்று ஆட்டம் ஆடி அச் சிமெண்ட் அறையின் உள்பெரிதாய்ப் படர்ந்து ஒளிவெள்ளமாய் மின்னும் பிரமை. அந்த ஒளித்துகள் ஒன்றிப் புகை நீங்கிய பொற்தகட்டின் முனைபோல் அலகுகள் இறங்கிற்று. தீப்பொன், அரசமரம் மறைந்தது. திரிசூலம் மறைந்தது. பரவிக் கிடந்த நறுமலர்கள் அகன்றன. தீயின் நாக்குகள் சுருண்டு சுருண்டு வேகத்தோடு புரண்டு புரண்டு தழுவின. அவற்றின் தழுவலில் தித் துணுக்குகள் பொறி கக்கிப் படீரென்று வெடித்துத் தீப் பொட்டாய்ப் பொலபொல வென்றுஉதிர்ந்தன. தீயின் மலர்கள். பொன் மலர்கள். திரிசூல நுனி பெயர்ந்து அங்கும் இங்கும் எங்குமாய் ஆடிக் கிறங்கிற்று.

அது அவரது உலகம். அந்த உலகத்து உணர்ச்சிகள் அவர் வரையில் நித்தியமானது. நெற்றிக்கு நேரே காணுகிறாற் போன்ற தரிசனம். இந்து சமயத்தைப் பின்பற்றுகிறவன் தமிழன் என்கிற உற்சாகத்தோடு தன்னைப் பற்றிப் படர்ந்திருக்கும் காவிய அழகின் நயங்களோடு அனைத்துலகமான பிரபஞ்சத்தின் ஒன்றல்தத்துவத்தை உணர முயன்ற

(14-ம் பக்கம் பார்க்க)

**வேத காலத்தில் வேள்விப் புகை பரவ உச்சாடனம் செய்யும் ஆத்மிகவாதிகளைப் போல......**

**மதகடியின் நீரோடைக் கரையில் இறங்கிக் கோரைப் புல்லின் சணல் துண்டை ஒரு சேரப் பிடித்தாற் போல்......**

**—தத்துவ விசாரணைகள் கதையை மீறியும், கதை அம்சம் தத்துவ விசாரணைகளை மீறியும் அமைய ஆத்மிகம் பேசுகிருர் 'முனியப்பதாசன்'.**

# உடலுடன் மறைவதை சமயவாதிகளே உறுதிப்படுத்துகின்றனர்

விரோதிகிருது வருஷ செந்தமிழ் வெளியீட்டில் சங்கராச்சாரிய சுவாமிகள் அருளிச் செய்த மநீஷா பஞ்சகத்திலுள்ள கிரந்தங்களில்:-

யத்ஸௌக்யாம் புதிலேச
லேசத
இமே சக்ராதயோ நிர்
விருதா
யச்சித்தே நிதராம் ப்ரசாந்த
கலனே
லப்த்வா முனிர் நிர்வ்ருதா
யஸ்மின் நித்திய ஸு காம்பு
தௌ
களிததத் ர்ப்ரஹ்மைவ
நப்ரஹ் மவித்
ய: கச்சித் ஸ ஸு ரேந்திர
வந்திபதோ நுனம் மநீஷா
மம'

என்ற சுலோகத்தில் 'இந்திரன் முதலான தேவதைகள் பரப்பிரமத்தினுடைய அகண்டாகாரமான ஆனந்தக் கடலினின்று ஒரணு அளவு சுகத்தைப் பெற்றுத் திருப்தியடைகிறார்கள். முனியோவெனின் நிரந்தரமான பரப்பிரம்மத்தையே எப்பொழுதும் மனனம செய்து கொண்டிருக்கிறான். ஆதலின் அவன் மனத்தில் சங்கற்பங்களே கிடையா; அப்படிப்பட்ட மனத்தில் அவன் பரப்பிரம்ம சுகத்தை அடைந்து திருப்தியுறுகிறான் அவ்வாறு நித்திய சுகமென்னும் சமுத்திரத்தில் மூழ்கின மனமுள்ள முனியானவன்

## கருத்துமேடை —[6]—

பரப்பிரம்மமே யாகிறான். அவன் பரப்பிரம்மமேயாகின்றதனால் அவனைப் பிரம்மத்தையறிந்தவனென்பது ஏற்காது (பிரம்மத்தையறிந்தவனென்னும்போது அவன் பரப்பிரமமத்தினின்று வேருக இருக்கிறானென்று பொருள்படும்). அப்படிப் பரப்பிரம்மமே தானாக விளங்குகின்றவன் எவனாக இருந்தாலும் அவன் தேவதைகளினால் நமஸ்கரிக்கப் பெறத்தக்கவன்—என்பது எனது நிச்சயமான அபிப்பிராயம்'—என்றும்

ஏதஸ்யை வானந்தஸ்ய
மாந்ராமுப ஜவந்தி

அந்தப் பிரம்மானந்த லேசத்தை யடுத்து எல்லாப் பூதங்களும் பிழைக்கின்றன என்றும்,

'ப்ரஸ்மவித் ப்ரஹ்மைவ
பவதி'

பிரம்மத்தைத் தெரிந்தவன் பிரம்மமே யாகிறான் என்றும்,

'தர்சுஞ தர்சனோ ஹத்ய
ஸ்வயம் கேவல ரூபத்:
யஸ்திஷ்டதி ஸதுப்ரஹ்மன்
ப்ரஹ்மவித்ஸ்வயம்'

'இவ்வுலகத்து ஆசைகளையும், பரலோகத்து ஆசைகளையும் (ஐஹிகாமுஷ்மிகங்களை) விட்டொழித்து எதனிலும் ஒட்டாதவனாகில் பிரம்ம ரூபியாக இருப்பவன் பிரம்மமே யாவன்' (தமிழாக்கம்— திருவையாறு ஸ்வாமிநாத ஐயர்) என்றும் அருணகிரிநாதரும்:-

'ஐந்து பூதமும் ஆறு
சமயமும்
மந்த்ர வேத புராண
கலைகளும்
ஐம்பதோர் விதமான
லிபிகளும—வெகுருப
அண்டராதிச ராசர முமுயர்
புண்டரீகனு மேக நிறவனும்
அந்தி யொடு வானு
நிலவொடு—வெயில்காலும்
சந்திர சூரியர் தாமும் –
அசபையும்
விந்து நாதமும் ஏக வடிவம
தன் சொரூபம நாக
உறைவது-சிவயோகம்.'

இதனை 'விழிக்குத் துணை' என்னும் நூலில், ஐந்து பூதமும், ஆறு சமயமும், மந்த்ர வேத புராண கலைகளும், ஐம்பத்தொரு லிபிகளும், அண்ட சராசரமும்' பிரம்மா முதலிய திரிமூர்த்திகளும், ஆகாசம், சந்திரன், சூரியனும் ஆகிய எல்லாமே, ஆண்டவனாகிய பெரிய கடலின் அலைகள் என்பதை உணர்ந்து நாமும் அந்தப் பெரிய தத்துவத்திலே கரைந்து நிற்கிற நிலைதான் சிவயோகம் என்பது அருணகிரியார் கருத்து. (திரு. கி. வ. ஜகந்நாதன் எழுதிய விழிக்குத்துணை பக்கம் 51.)

தாயுமானவரும்:-
'யாதினும் வல்ல தொரு
சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெது?
மேல்
கங்குல் பகல் அற நின்ற
எல்லை உளதெதுவது
கருத்திற் கிசைந்தது அதுவே
கண்டன எலாம்; மோன
உருவெளியதாகவும்

**சக்தீ அ. பாலையா**

கருதி அஞ்சலி செய்குவாம்' என்றும்,

'எத்தனை பிறப்போ!
எத்தனை இறப்போ!
எளியனேன்
இதுவரையமைத்த
தத்தனையெல்லாம் அறிந்த நீ
அறிவை
அறிவிலி அறிகிலேன்;
அந்தோ!

### வள்ளலார் மறைவு

சித்தமும் வாக்குந் தேகமு
நினவே
சென்மமு மினி யெனு லாற்று
வைத்திடிங் கென்னை
நின்னடிக் குடியா
மறைமுடியிருந்த வான்
பொருளே!
என்ற பாடலிலும்
'பொய்யுலகும், பொய்யுறவும்,
பொய்யுடலும்
பொய்யெனவே
மெய்ய நினை மெய்யெனவே
மெய்யுடனே காண்பேனே?'

என்று மொழிவதிலும், இறவா நிலை எது என்பதனையும், மெய்யுடனே பரனை அடையலாம் என்பதனையும் அறிகிறோம். எனவே இறப்பு என்பது ஞானிகளுக்கு இறையுடன் ஒன்று கலப்பதாம்; சாதாரண மனிதர்களைப் போல சாதலன்று.

### மறைந்தது உண்மையா?

வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்ற நூலில் (3ம் பதிப்பு 431ம் மக்கம்) 'மறைந்தது உண்மையா?' என்னும் தலைப்பில் கூறப்படுவதாவது:-

'இராமலிங்க சுவாமிகள் பூத உடம்புடன் மறைந்ததாக அவர் முதன் மாணுக்கர் தொழுவூர் முதலியார் அவர்களே கூறியுள்ளார். அதனைமுன்பே பார்த்தோம். இன்னுமொருமுறை பார்ப்போம்.

அவர் தமது சீடர்களுக்கு அன்பு நிறைந்த ஆசிகளைக் கூறி தாம் இருந்த அக் குடிசைக்குள் விரித்திருந்த படுக்கையில் சாய்ந்து கொண்டார். அவருடைய உத்தரவின்படி அவன் கதவு பூட்டப்பட்டது. பின்னர் ஒரு வருடத்தின் பிறகு அரசாங்கத்தார் கதவைத் திறந்து பரிசோதித்ததில் அவ்வறை வெறும் அறையாயிருந்தது.

'அவர், மறையுங்கால், மறுபடியும் தாம் வருவதாகச் சொன்னரே தவிர, வரும் காலம் சந்தர்ப்பம் என்பவைகளைக் குறித்து ஒன்றும் தெரிவிக்கவில்லை.

'அதுவரையில், தாம் இந்தியாவில் மாத்திர மல்லாமல் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளிலும், உலக முன்னேற்றத்தைக் குறித்து வேலைசெய்யப் போவதாய்த் தெரிவித்தார்.

'இது ஆயிரக் கணக்கான ஜனங்களுக்கும் தெரிந்ததேயாகும். இதன்படி, அடிகளார் பருவுடலோடு மறைந்தார். அவர் இப்போதும் உலகில் வாழ்கிறார்; மறுபடியும் வருவார்-என்ற செய்திகளைத் தொழுவூர் முதலியாரே, நம்பிக் கூறுகின்றார்.' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதனை நாம் வெறும் போட்டி மனப்பான்மையில் வைத்து வாதம் புரியாது உடலுடன் மறைவது சாத்தியமே என்ற ஞானிகளினதும், அறிஞர்களினதும் கருத்துக்களை ஆராய்ந்து உண்மை காணுதல் வேண்டும்.

மாணிக்கவாசகரும்:-
சோதியாய்த் தோன்றும்
உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே
பந்தம்
அறுக்கும் ஆனந்த மா
கடலே
தீதிலா நன்மைத் திருவருட்
குன்றே
திருப்பெருந் துறையுறை
சிவனே
யாது நீ போவதோர் வகை
யெனக் கருளாய்
வந்து நின் இணையடி
தந்தே'

என்று கூறுகிறார். ஆகவே, சமயங்களைச் சார்ந்தவர்களே உடலுடன் மறைவதை உறுதிப்படுத்தும்போது வள்ளலாற் பெருமான் உடலுடன் மறையவில்லை. சாதாரண மனிதர்களைப் போலவே இறந்தார் என்பது ஆய்வில்லாத் தன்மையால் எழுந்த ஐய முடிபே யன்றி வேறன்று.

(அடுத்த இதழில் முடியும்)

# முகம் முழுமதியாக என்ன செய்ய வேண்டும்?

செ. வைத்தியநாதன்,
மீசாலை.

கே: சொட்டுபோய் விட்டது. ஆனால் முடி உதிர்கின்றது. தகுந்த ஆலோசனை தரவும்.

ப: நீர் நான் கூறிய முறைகளைக் கைக்கொண்டமைக்கு நன்றி. இதோ! கீழ்க்கண்ட முறைப்படி செய்து பாவிக்கவும்.

ரசகிந்த (சீந்தில்) இடித்துப் பிழிந்த சாறு-நல்லெண்ணெ சமபாகம். ஆல் விழுது-காய வைத்து இடித்து தூள் செய்யவும். இதைக் கலந்து அடுப்பேற்றி எண்ணெய்ப் பதமானதும் இறக்கி ஆறவைத்து போத்தலில் பக்குவப்படுத்தி பாவித்துவரின் சிறந்த குணம் கிடைக்கும்.

க. இரவிந்திரன்,
பெரியகல்லாறு.

கே: எனது அம்மாவுக்கு மலம் போவது மிகவும் கஷ்டம். மாதத்துக்கு 2, 3 தடவைதான் போவதாகக் கூறுகின்றார். வயிற்றுக்குள் கட்டி போல் இருக்கிறதாம். நோவுமுண்டு. ஆலோசனை கூறுங்கள்.

ப: உணவுவகையில் நிறைய மரக்கறி அதாவது மாக்கூர் கூடிய அளவு அருந்தல் அவசியம். கிரை வகைகள், பழவகைகள் நன்று. விசேடமாக பப்பாப் பழம், வாழைப்பழம், வில்வம் பழம் நன்மைபயக்கும். நேரத்துக்கு நேரம் வியாயாமங்களை அடக்காது பழக்கத்தில் கொண்டு வருவது அவசியம். அத்துடன், கடுக்காயின் மேற்றோலை எடுத்து அவித்துக் குடிக்கலாம். ஓடியல் மாக் கூழ் சிறந்த பலனைத் தரும்.

செ. ஜே. செல்வரத்தினம்,
கொழும்பு-15.

கே: நான் ஒரு பல்கலைக் கழக புகுமுக வகுப்பு மாணவன், எனக்கு எந்நேரமும் முகத்தில் எண்ணெ வடிவது போல் இருக்கின்றது முகம் கருமையாக இருக்கின்றது. அத்துடன் பற்களில் சிலவற்றில் தட்டைகள் உண்டு. முகம் பிரகாசமடைவதற்கு யாது செய்தல் வேண்டும்.

ப: சிலருக்கு சர்மத்தில் ஏற்படும் விகர்ப்பங்களின் காரணமாக இப்படியான தொந்தரவுகள் ஏற்படுகின்றன. இதற்கு காலை மாலை ஸ்நானம் செய்வது நன்று. கடலைமா-அல்லதுபாசிப் பயறு அரைத்துப் பூசிக் குளிக்கலாம். சனிக்கிழமைதோறும் எண்ணெ ஸ்நானம் சிறந்தது. தகுந்த அளவு தேக அப்பியாசமும் சிறந்த பயனை அளிக்கும்.
சபிதா-தம்பிராசா,
பலாங்கொடை.

கே: ஐயா! எனது உடம்பெல்லாம் மயிர்கள் முளைத்திருக்கின்றன. எப்படி நீக்கலாம்? வயது 16.

## உங்கள் நோய்

ப: இளவயதில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இப்படியான தொந்தரவு சிலருக்கு இருப்பது இயற்கையே. பச்சை மஞ்சளையோ அல்லது கஸ்தூரி மஞ்சளையோ அரைத்துத் தினசரி குளித்து வருதல் நல்ல பலனை அளிக்கும்.

பதிலளிப்பவர்:
**வைத்திய கலாநிதி**
**நா. கந்தையா**

எஸ். எம். மொகமட்,
வாழைச்சேனை.

கே: எனது வயது 20. உயரம் 5 அடி 1 அங்குலம். நிறை 95 இருத்தல்-நான் இன்னும் வளரமுடியுமா? அத்துடன்......இப்போ உணர்ந்து விட்டேன். அதனால் பெலவீனம்.

ப: சாதாரணமாக ஆண்கள் 16-18 வயதுக்குள் அவர்களின் வளர்ச்சி அதாவது உயரம் முற்றுப் பெறும். அதன்பின் எலும்புகள் வளருவதற்கு இடமில்லை. எனவே உமது வளர்ச்சி இதற்கு மேல் ஏற்பட முடியாது. அன்றியும் நீர் உம்மையோ-உமது உடலையோ மிகவும் கேவலமான நிலைக்கு கொண்டுவந்து விட்டீர். அதன்பேருகவும் வளர்ச்சி தடைப்படுவதோடு இளமையையும் இழந்துவிட்டீர்.

எனவே இதற்கு ஏற்றமுற வேண்டுமெனில் தகுந்த வைத்தியரின் உதவி வேண்டற்பாலது.-

கே. டானியல்
யாப்பாகுவ,
மாகோ.

கே: ஆண். வயது 27, மணமாகவில்லை, எனது தலைமுடி தினசரி உதிர்ந்துகொண்டே வருகின்றது. எவ்வளவோ முயன்றும் தடுக்க முடியவில்லை-வழுக்கை விழுமோ என்ற பயமாகவும் இருக்கின்றது.

ப: இதற்கு ஏற்கனவே சுதந்திரனில் பதில் கூறியுள்ளேன். அம்முறை மிக இலகுவான முறை. கஷ்டமாயிருந்தால் எனது நேரடி மேற்பார்வையின் கீழ் தயாரிக்கப்பட்ட 'கேசலோசனி' தைலத்தைப்பாவித்துவரின் சிறந்த குணத்தைக் கொடுக்கும்.

ஆண் பெண் இருபாலாருக்கும்

தனிமைக் குணம், பேய் தோஷம், ஈலும் புருக்கி நோய், வயிறு நெஞ்சு எரிவு, நச்சுத்தன்மையான சாப்பாடு வயிற்றிலிருத்தல், மெலிவடைதல், உடல் அவலெட்சணம், ஆகியவற்றை மர்ம வழியில் காலக் கிரமத்தில் குணப்படுத்திப் பார்ப்போர் பரவசமடையும் விதத்தில் உடலை மாற்றி விடுவேன். விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

வைத்தியாச்சாரி
பி. எம். திசாநாயக்க,
த. பெ. 1281,
கொழும்பு.

# தமிழை மறக்க . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழவேந்தன் தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது:—

'புத்தளம், பழந்தமிழ் மக்களின் வாழ்விடம் என்பதை புத்தளத்தில் காலத்திற்குக் காலம் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகள் சாட்சியம் கூறுகின்றன. இங்கு சிவராத்திரி விழா கொண்டாடப்படுவது பொருத்தமானதே,

'மணிவாசகப் பெருமான் தோன்றிய காலம் பற்றி பலவித கருத்து வேறுபாடுகள் இருட்பினும், அவர் தமிழ் நாட்டில் தோன்றித் தமிழராக வாழ்ந்து இன்பத் தமிழில் இறைவனைப் பாடி அன்பைப்பெருக்கிய அடிகள் என்பதில் யாருக்கும் ஐயமில்லை.,

திருவாசகமும் திருக்கோவையாரும், தமிழின் உருக்கத்திற்கு-இனிமைக்கு-இலக்கியச் செறிவுக்கு-உதாரணமாக ஒன்று திகழ்கின்றன.

தமிழை மறக்காத மணிவாசகர், திருவாசகத்தில் பலவிடங்களில் தமிழைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். அவரது தமிழ் உணர்ச்சி இன்றைய தமிழ் வாலிபர்களுக்கு அவசியம் தேவையானது'

திரு. சி. செல்வராசா அவர்கள் 'ஞானப்பால்உண்ட சம்பந்தர்' எனும் பொருள் பற்றியும், திரு. இரா. பத்மனுதன், 'சேக்கிழார் தந்த மாக்கதை' பற்றியும் உரை நிகழ்த்திஞர்கள்.

விழாவில் மாணவர்களின் சமயப் பேச்சுப் போட்டி, தேவாரப்போட்டிகள் இடம் பெற்றன. முடிவில், கொம்பனித்தெரு சைவ முன்னேற்றக் கழகத்தின் வில்லுப் பாட்டுடன் விழா நிறைவெய்தியது.



களம் பல கண்ட காளையும், தமிழ் இன விடுதலைப் போர் அணைத்திலும் பொலிசாரின் தாக்குதலுக்குள்ளாகித் தியாகத் தழும் பேற்ற தொண்டரும், தமிழரசுக் கட்சியின் நல்லூர்த் தொகுதிக் கிளைச் செயலாளரும், யாழ்ப்பாணம் பெரிய கடை பூகன்ஸ் தேனீர்க் கடை உரிமையாளருமாகிய திரு. த. வடிவநாதன் அவர்கள் செல்வி லீலாவதியை அண்மையில் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார்.


ரிஷி

நேத்திர சஞ்சீவி

தைலம்



இதனை தலைக்கு வைத்துவரின் தலைவலி, கண்வலி, காதுவலி, செவிடு, கண் பார்வை மட்டு, உச்சி, கண், கை, கால், திரேக எரிச்சல், காதடைப்பு, பீனிசம் முதலியவைகளைக் குணப்படுத்தி தலைமயிரைக் கறுத்த நிறத்தோடு நீண்டு அடர்த்தியாக வளரச் செய்யும்.

புட்டில் 1க்கு ரூ. 3-50

தபால் செலவு 1-10 சதம்

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு,

கொழும்பு-11.



சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




காரம், மணம்,குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைப்போருக்கு புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. தொழிலாளிகளும், திறமைசாலிகளும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பிடியையே புகைக்கிறார்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

யானை பீடி ஸ்பெஷல்

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:

யானை பீடி கம்பெனி,

62, மெசெஞ்சர் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி : 7651


# 'சர்வர் சுந்தரம்'

## இலவச சினிமாப் போட்டி

சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினர் திரைகளில் இலவசமாகப் படம் பார்ப்பதற்கு ஓர் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்வதற்கு எவ்விதமான கட்டணமும் செலுத்தப்பட வேண்டியதில்லை. சுதந்திரன் பத்திரிகை நிறுவனத்தினதும் சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினதும் ஊழியர்களையும் அவர்களுடைய நேரடி உறவினர்களையும் தவிர்ந்த ஏனையோர் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

சுதந்திரன் வாசகர்களுக்கான இப் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினரே பரிசுகள் வழங்க ஒப்புதல் அளித்துள்ளனர்.

### விதிகள்

1. ஒருவர் ஒரே உறையில் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு விடையுடனும் சினிமாஸ் லிமிட்டெட்டாரின் படங்களை திரையிடும்படமாளிகையில் படம்பார்த்த நுழைவுச்சீட்டின் அடிக்கட்டை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
2. கடித உறையில், கீழே தரப்பட்டிருக்கும் சுதந்திரன் முகவரியையே வெட்டி ஒட்டி அனுப்புதல் வேண்டும். அப்படி அனுப்பாத விடைகள் கவனிக்கப்படமாட்டா.
3. எல்லாக் கேள்விகளுக்கும் பதில் தரப்படாத விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
4. போட்டி விடயமாக சுதந்திரனுடனே சினிமாஸ் நிறுவனத்துடனே எவ்வித கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது.
5. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

### பரிசுகள்

முற்றிலும் சரியாக அனுப்பப்பட்ட விடைகளிலிருந்து தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரால் பரிசுக்குரிய விடைகள் பொறுக்கப்படும். முதலாவது எடுக்கப்படும் விடைக்குமுதல் பரிசும், ஏனைய பரிசுகள் முறைப்படியும் வழங்கப்படும்.

1 வது பரிசு—

**6 மேல் வகுப்பு டிக்கெட்டுகள்**

2 வது பரிசு—

**4 மேல்வகுப்பு டிக்கெட்டுகள்**

3 வது பரிசு—

**3 மேல்வகுப்பு டிக்கெட்டுகள்**

மற்றும்

**3 ஆறுதல் பரிசுகள் ஒவ்வொன்றும் 2 மேல் வகுப்பு டிக்கெட்டுகள் விதம் வழங்கப்படும்.**

## முடிவுத் திகதி 25-3-66.

பரிசு பெற்றோர் விபரங்கள் ஏப்ரல்முதல்வாரத்தில் வெளியாகும்.

கடித உறையில் வெட்டி ஒட்டப்படவேண்டிய முகவரி:

போட்டி ஆசிரியர்,
'சர்வர் சுந்தரம்'
சினிமாப் போட்டி,
மே. பா. சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு-12.

## போட்டிக்கான கேள்விகள்

கீழே ஐந்து கேள்விகள் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், அவற்றுக்குரிய விடைகளை புல்ஸ்காப் தாளில் எழுதி மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய நமக்கு அனுப்பி வைக்கவேண்டியதே.

1. முத்துராமன் 'சர்வர் சுந்தரம்' படத்தில் ஒரு கம்பெனியின் நிர்வாகியாக வருகிறாரல்லவா? அந்தக் கம்பெனியின் பெயர் என்ன?
2. சுந்தரத்தின் தாயாராக வரும் நடிகை யார்?
3. சர்வர் சுந்தரம் படத்தில் நாகேஷ் சினிமா நட்சத்திரமாக மாறிய பின்பு எத்தனை படப்பிடிப்பில் (Shooting) பங்கு பற்றுகிறார்?
4. கிருஷ்ணன்—பஞ்சு டைரக்ஷனில் ஒரு நகைச்சுவை நடிகரை கதாநாயகனாக வைத்து வெளிவந்த முதல் தமிழ்ப்படம் எது?
5. சர்வர் சுந்தரம் படத்தில் நட்சத்திர நடிகனான நாகேஷுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்படுகிறதல்லவா? அந்த வரவேற்பில் நாகேஷ் என்ன பேசுகிறார்? (விடை 50 சொல்லுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்).
6. சினிமாஸ் திரைகளுக்கு வரவிருக்கும் நாகேஷ்-எம். ஜி. ஆர். நடித்த மூன்று திரைப்படங்களைக் குறிப்பிடுக?

**கோப்பையிலே என் குடியிருப்பு! கோலமயில் என் துணையிருப்பு!**

# கவிதைகள் கூறும் கருத்து என்ன?

## கண்ணதாசன் விளக்கம்

"எனது சில கவிதைகளில் குறிப்பிட்ட ஒரு சுவை மட்டும் அதிகம் இருப்பதாக இரண்டொரு நண்பர்களே என்னிடம் கூறியிருக்கிறார்கள். நான் சில கவிதைகளை சிலேடையாக அமைத்து விடுகிறேன். அதில் சிலர் வெவ்வேறு சுவையைக் காண்கிறார்கள். அது அவரவர்களது மன வளர்ச்சியைப் பொறுத்ததே' இவ்வாறு கவிஞர் கண்ணதாசன் சமீபத்தில் கூறியிருக்கிறார்.

இன்று தமிழ்த் திரையுலகில் தன்னிகரற்று விளங்கும் ஒரே கவிஞர் கண்ணதாசன் என்பது யாவரும் அறிந்ததே. இவர் எழுதிய 1001 வது திரைப்பாடல், சமீபத்தில் 'அவன் பித்தனா' என்ற படத்துக்காக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கவிஞர் கண்ணதாசன் திரையுலகில் புகுந்த பின்புதான், திரைப் பாடல்களில் இலக்கியச் சுவை செறிந்த—தமிழின் இனிமை சொட்டும்—தித்திக்கும் பாடல்களைக் கேட்கும் நிலை தமிழ் சினிமா ரசிகர்களுக்குக் கிடைத்ததென்பதை எவரும் மறுக்க முடியாது.



### இரத்தத் திலகம்

கண்ணதாசன் மேலும் கூறியிருப்பதாவது:—

'இரத்தத் திலகம் படத்திலே, 'ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு ஒரு கோலமயில் என் துணை இருப்பு' என்ற எனது ஒரு பாடலை நானே திரையில் தோன்றி பாடியிருக்கிறேன். இந்தப் பாட்டில் வேறு சுவை இருப்பதாக சில நண்பர்களே என்னிடம் குறைப்பட்டார்கள். அந்தப் பாடலுக்கு நான் பின் வருமாறு பொருள் கூறினேன 'கோப்பையிலே என் குடியிருப்பு' என்றால், அந்தக் காலத்தில் (உமர்கய்யாம் காலத்தில்) கோப்பையிலே தான் எழுதும் மை வைப்பது வழக்கம். அதையே குறிப்பிட்டேன். 'கோலமயில் என் துணை இருப்பு' என்றால், 'மயிற்பீலி' கொண்டே அந்தக் காலத்தில் எழுதுவது வழக்கம்.அதையே அப்படிக் குறிப்பிட்டேன்.

இப்படி சிலேடையாக நான் எழுதும் சில பாடல்களுக்கு சிலர் வேறு அர்த்தம் கற்பித்தால் அதற்கு நான் பொறுப்பாளியா? இவ்வாறு கேட்டார் கவிஞர் கண்ணதாசன்.

### கிளறிக்கல் கிளாஸ்-3

கொழும்பு விமலா உதயணன் நாடக மன்றத்தாரால் தயானந்த குணவர்த்தனவின் புகழ் பெற்ற 'இபிக் கட்ட' என்ற சிங்கள நாடகத்தை தமிழில் 'கிளறிகல் கிளாஸ்-3' என்றபெயருடன் இம்மாதம் 19ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேற்றப்பட இருக்கிறது.

சனப்பிரதிநிதிகள் சபைச் சபாநாயகர் சேர் அல்பேட் பீரிஸ் தலைமை வகிக்கும் இந் நாடகத்தில், சிறிகாந்த், சியாமளா,யோகா, சண்முகநாதன், ராஜேஸ்வரன் ராஜலிங்கம், மற்றும் பலர் நடிப்பார்கள் எம். எம். மக்கின் நெறிப்படுத்தும் இந்நாடகத்தைத் திருமதி விமலா சொக்கநாதன் தயாரித்தளிக்கிறார்.

### வாழ்கபல்லாண்டு!

'என் தம்பி கணேசனைப் பாராட்டுவதிற்கு எனக்கு அதிக உரிமையுண்டு. திறமையால் முன்னுக்கு வந்தவன் தம்பி கணேசன்' அவனது நடிப்பு உலகில் எந்த நடிகனுக்கும் குறைந்ததல்ல; உலகின் புகழ் பெற்ற நடிகர்களின் நடிப்புக்களை யெல்லாம் அவனது நடிப்பில் காணலாம்; அவன் பல்லாண்டு வாழ்ந்து இன்னும், புகழையும், பெருமையையும் சம்பாதிக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்—எம். ஜீ. ஆர்.

# கல்லூரிப் படிப்பு எப்போது முடியும்

## தியாகுவின் கவலை

ரயிலில் முதல் வகுப்புப் பெட்டியில் உட்கார்ந்திருந்தாள் மீனு.

அப்பொழுது அவளைச் சந்திக்க வந்த தியாகு, 'உனக்காக ஒன்று கொண்டு வந்திருக்கிறேன். அதில் உனக்குப் பிடித்தமானது இருக்கிறது! என்ன என்று சொல்பார்க்கலாம்? என்று கேட்டான் அதற்கு அவள் புன் முறுவலுடன் 'எனக்குப் பிடித்தமானது இரண்டு. ஒன்று நீங்கள். மற்றொன்று மல்லிகைப்பூ' என்று கூறினாள்.

'அடடே' சரியாகச் சொல்லி விட்டாயே! என்று வியந்தான் தியாகு.

'நீங்கள் ஊருக்கு வர வில்லையா? என்று கேட்டாள் அந்த ஏந்திழையாள்

'உன் முந்தானையைப் பிடித்துக் கொண்டு ஊர் சுற்ற என்னாலே முடியாது. எனக்கு எஸ்டேட் வேலை ஏகப்பட்டது இருக்கு' என்று தோளைக் குலுக்கிய வாறே பதில் சொல்லிய தியாகு 'எப்படா கல்லூரிப் படிப்பு முடியும் னு இருக்கு' என்று பெருமூச்சு விட்டான்.

'ஏன்? என்று அவள் கேட்டவுடன் அவள் காதில் 'பீப் பீ......டும் டும் என்று முழங்கினான். அவளுக்கோ நாணம் முகத்தில் நடனமிட்டது.

—பத்மினி பிக்சர்சாரின் 'நாடோடி'க்காக நடந்த படப்பிடிப்பின் விபரம் இது

மீனுவாக புதுமுகம் பாரதியும் தியாகுவாக எம்.ஜி. ஆரும் நடித்தார்கள்.பி.ஆர். பந்துலு டைரக்ட்செய்தார். இப்படத்தின் கதை வசனத்தை ஆர். கே. சண்முகம் எழுதுகிறார்.



உன் காதலர் இப்படித்தான் உன்னைக் கட்டியணைப்பார்; கன்னத்தோடு கன்னம் சேர்ப்பார்; காதல் புரிவார்; என்று விஜயகுமாரியைக் கிண்டல் செய்கிறார் போலும் விஜயலட்சுமி. படம்: சினிமாஸ் திரைகளுக்கு வரவிருக்கும் 'காக்கும் கரங்கள்'

### எம். ஜி. ஆர். ரூபா 25,000 நன்கொடை

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். சிதம்பரம் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்துக்கு ரூபா 25,000 நன்கொடையாக அளித்துள்ளார்.

இந்தத் தொகையை அவர், சமீபத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற விழாவொன்றில் கையளித்தார்.

# எமது விமர்சனம்

தயாரிப்பு: அரங்கு நாடக மன்றம்
கதை: அ. . கந்தசாமி
இயக்குநர்: கா. சிவத்தம்பி எம். ஏ.

## 'மதமாற்றம்'

மத தத்துவங்களைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் ஒரு புதிய நோக்கு. நுணுகி ஆராய வேண்டிய நுண்ணிய கருத்துக்கள் மீது ஒரு மேச்சல். தத்துவங்கள் ஒழுங்கற்ற முறையில் முட்டி மோதி ஒரு குளறுபடியான நிலை.

அன்பின் ஆழம் என்ன? அதன் முழுமை யென்ன என்பதை உணர்ந்துகொள்ள முடியாத தவிப்பு. பாலுணர்வுக்கும் அன்புக்கும் அகல்வு காணவியலாமை. மன உழைச்சலற்ற உளப் போராட்டம். அன்பின் உயர்வு நெறியின் பிடியில் சிக்கிச் சீரழியும் எதார்த்த உண்மைக்குப் புறம்பான போக்கு. இத்தனை முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை ஒழுங்கற்ற முறையில் உலாவவிட்ட ஒரு கதையமைப்பே சென்ற திங்கள் பத்தொன்பதாம் நாளன்று அரங்கு நாடகமன்றத்தாரால் அரங்கேற்றப்பட்ட 'மத மாற்றம்' நாடகமாகும்.

மீனு என்ற சைவப் பெண் ஜோசப் என்ற கத்தோலிக்கரைக் காதலிக்கிறாள். சைவசித்தாந்தப் பற்று மிக்க மீனுவின் தந்தை சிவப்பிரகாச பிள்ளை குறுக்கிடுகிறார்.

இதையறிந்த ஜோசப் மதம் மாறுவதுடன், நண்பன் சுந்தரலிங்கம் மூலம் மீனுவை முறைப்படி மணம் முடிக்க ஒழுங்கு செய்கிறான். ஜோசப்பே தனது மாப்பிள்ளை பாலசுப்பிரமணியம் என்பதை உணராத மீனு வீட்டை விட்டு வெளியேறி பள்ளித் தோழி திரேசாவிடம் அடைக்கலம் புகுகிறாள். அங்கு மீனு கத்தோலிக்கப் பெண்ணாக மதம் மாறுகிறாள். மீண்டும் காதலர்கள் சந்திக்கிறார்கள். மதம் குறுக்கிடுகிறது. இது தான் நாடகத்தின் கதை.

மீனு. மீனுவின் தாய். மீனுவின் பள்ளித் தோழி. நாடகத்தின் மூன்று பெண் பாத்திரங்கள் மூன்றுக்குள் முழுசாக ஓரளவு திகழ்ந்தார் மீனுவின் தாய்; நடிப்பு என்றால், ஏதோ பள்ளித் தோழிகளுடன் வாய்ச் சண்டை போடுவது போன்ற ஒன்று. என்பது மீனுவின் எண்ணம். தோழி திரேசா...?

ஆண்கள்; பொதுவில் தங்கள் பொறுப்பை உணர்ந்திருந்தார்கள். ஜோசப்பின் நண்பனாக நடித்த சுந்தரலிங்கம் நாடகம் முழுவதிலும் உயர்ந்து நின்றார். சைவத் துறவியாக (சாமியார்) வந்த கனகரத்தினம் ஒரு காட்சியில் தோன்றினாலும் அப்பாத்திரத்திற்கு உயிரூட்டி நிலை பெறச் செய்துவிட்டார். ஜோசப்பாக நடித்த இளைஞரிடம் பாத்திரத்தின் தன்மை ஓரளவு பிரதிபலித்துள்ளது. சிவப்பிரகாசமாக நடித்தவரும் குறைவின்றி காரியத்தை முடித்துவிட்டார்.

கதையம்சத்தை ஒரு புறம் விட்டு மேடையை நோக்கினாலும் முழுமையில்லை. அது நெறிப்படுத்தியவரின் தவறு என்பது தெட்டெனத் தெளிவாகிறது.

நோக்கற்ற ஒன்றை நோக்குடன் நோக்கி, நோக்கின் நோக்கு நோக்கின்றிப் போன நோக்கை 'மத மாற்றம்' நோக்கியது.

—பூ.

### ராஜேந்திரன் மீண்டும் தலைவர்

தென் இந்திய நடிகர் சங்கத்தின் பொதுத் தேர்தல் சங்கப்பணி மனையில் நடைபெற்ற போது, இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ராஜேந்திரனுக்கு 382 வாக்குகளும் ராஜேந்திரனை எதிர்த்து போட்டியிட்ட காக்கா ராதா கிருஷ்ணனுக்கு 21 வாக்குகளும் கிடைத்தன.

துணைத்தலைவராக திரு. எஸ். டி. சுந்தரம் தெரிவு செய்யப்பட்டார். இப்பதவிக்கு போட்டியிட்ட ஜெமினிகணேசனுக்கு 80 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.



பொங்கி வரும் நீர் விழ்ச்சியின் அருகில் நின்று பூவுடலை வளைத்து ஆடும் அழகு நங்கை ஷிராணி குணத்திலக்க, சிங்களத் திரைவானில் தோன்றியுள்ள புதிய நட்சத்திரமாகும். இவர் இப்படி அழகு 'போஸ்' கொடுப்பது, இப்பொழுது 2வது வெற்றி வாரமாக சிலோன் எண்டெர்டெயின்மெண்ட்ஸ் திரைகளில் ஓடும் 'கொலம்ப ஹாதயோ' விலாகும்.

# தமிழரசாரின் கோரிக்கைக்கு முழு ஆதரவு கொடுக்க வேண்டும்

## அரசியலமைப்பு மாற்றம் பற்றி தினமணி ஏடு தலையங்கம்

இலங்கை ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கின்ற காரணத்தால் மனிதவுரிமைச் சாசனத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கக் கடமைப் பட்டுள்ளது. ஏற்கனவே இந்திய வம்சா வழியினர் விடயத்திலும் தமிழ் மொழி விடயத்திலும் இந்தக் கட்டுப் பாடுகள் மீறப்பட்டு விட்டன. இச்சூழ்நிலையில் சிறு பான்மையினருக்கு அரசியல் அமைப்பில் ஓரளவு பாதுகாப்புக் கொடுக்கும் பிரிவுகளையும் மாற்ற முற்படுவது கசப்பையும் பகைமையையும் தான் வளர்க்கும். இருஇனமக்களுக்குமிடையில் நல்லசூழ்நிலைநிலவ சகல கட்சிகளிலும் உள்ள நிதானபுத்தி படைத்தவர்கள் உழைக்க முன்வரவேண்டும். இச்சந்தர்ப்பத்தில் ஜீவாதார உரிமைகளை உறுதி செய்ய வேண்டுமென்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோரிக்கை நியாயமானது என்பதுடன் இந்த நீதியான கோரிக்கைக்கு சகலரும் ஆதரவு கொடுக்க வேண்டுமென சென்னையிலிருந்து வெளியாகும் தினமணி ஏடு தனது 23 ம் திகதிய முதற் தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அரசியலமைப்பு மாற்றம் பற்றி தினமணி ஏடு மேலும் அத்தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது

இலங்கை அரசியல் சட்டத்தைத் தாம் கோரும் வகையில் திருத்த வேண்டும் என்று திருமதி பண்டாரநாயகாவின் கட்சியும், அதனுடன் உறவாடுகின்ற இடதுசாரிக் கட்சிகளும் கிளர்ச்சி செய்து வருகின்றன. என்ன திருத்தங்கள் தேவை என்பதைப் பற்றி விரைவில் பரிசீலனை நடைபெறவிருக்கின்றது. இந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டு, இந்திய வம்சா வழியினரையும் இலங்கைத் தமிழர் எனப்படுவோரையுங் கூட, இரண்டாந்தரக் குடிகளாக்கி விடுவதற்கு எதிர்க் கட்சிகள் முயன்று வருகின்றன.

ஏற்கனவே இருந்து வருகின்ற அரசியல் சட்டத்தின் 29-வது ஷரத்து, மத இன அடிப் படையில் உள்ள சிறு பான்மையினரின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. பிறருக்கு இல்லாத எந்த நிர்ப்பந்தங்களோ, வில்லங்கங்களோ அவர்கள் விஷயத்தில் இருக்கலாகாது. பாரபட்சத் தன்மையுள்ள சட்டங்களை இயற்றலாகாது என்றுஇதில் தெளிவாகக் கூறப் பட்டுள்ளது.

இனி மைனாரிட்டிகளுக்கு இத்தகைய பாதுகாப்பு இல்லாமற் செய்து விட வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கோருகின்றன அந்த ரீதியில் திருத்தம் செய்வதற்கு இப்போதைய அரசியல் சட்டம் இடம் தரவில்லை; எனவே புதிய அரசியல் சட்டத்தையே தயாரிக்கலாம் என்கின்றனர் எதிர்க் கட்சியினர். இப்பாதுகாப்புகள் இல்லாத சட்டம் வருமாயின், அது பலவகை அநீதிகளை இழைப்பதாக இருக்கும். இந்த உரிமைகளுக்கு அளித்த உத்தரவாதம் என்பது சுதந்திரவாழ்வின் அடிப்படை என்று மதிக்கப் பெற வேண்டும்.

மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு அநீதியைஇழைக்க முற்பட்டால், அது நம்பிக்கைத் துரோகம் செய்வதாகும். தவிர இலங்கை ஐ. நா. வில் அங்கம் வகிக்கும் நாடு. மனிதவுரிமைச் சாஸனத்துக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய கடமை அதன் சர்காருக்கு உண்டு. ஏற்கனவே அங்கு இந்திய வம்சா வழியினர் விஷயத்திலும், தமிழ் மொழி விஷயத்திலும் இதை மீறிய காரியங்கள் நடைபெறுகின்றன என்ற புகார் இருந்து வருகிறது. இச்சூழ் நிலையில் அரசியல் சட்டம் தரும் பாதுகாப்பிலும் கை வைக்க முற்படுவது கசப்பையும், பகைமையையுந் தான் வளர்க்கும்.

இரு சமுதாயத்தினரும் நல்லிணக்கத்துடன் உழைக்கும் சூழ்நிலையில் தான் இலங்கைக்கு வாழ்வு உண்டு என்பதை அங்கு எல்லாக் கட்சிகளிலுமுள்ள நிதானஸ்தர்கள் மறக்கலாகாது.

புதிய சட்டம் வந்தாலும் சரி, அல்லது இப்போதைய சட்டத்தைத் திருத்தினாலும் சரி, இந்திய, அமெரிக்க சட்டங்களிற் போல, முழு அளவில் ஜீவாதார உரிமைகள் அதில் உறுதி செய்ய வேண்டும் என்ற பெடரல் கட்சியின் கோரிக்கை முழுஆதரவுக்கு உரித்தானது.

## உரிமை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வன் அவரின் உணர்வுகளை ஒரோர் சமயம் உணர்ந்திருக்கக் கூடுமோ என்னமோ? காலையில்உறக்கத்தில் இருந்தும் விழித்துக் கொண்டு நேற்றைய முந்தைய நினைவின் சுமைகளை உதறி மனம் மறந்திருக்கும் பாங்கில் நெஞ்சரங்கில் சதிராடும் உணர்வினை யாவது உணர்ந்திருக்கும் மனிதன் அவரைஉணர்ந்து கொள்ள முடியும். அது சாத்தியம்தான்.

ஒரு வருடத்திற்கு மேலதாய்நான் அவரைச் சந்தித்ததில்லை. அசிங்கமான காரியமொன்றைச் செய்யத் துடிக்கின்ற முனைப்போடு இதே சூழ்நிலையில் அவரை சந்திக்க முடியும் என்று நான் கனவிற்கூடக் கருதியதில்லை. மனம் நம்ப மறுக்கின்றவையும் மனம் வெறுக்கின்றவையுமே பல சமயங்களில் வாழ்வில் வந்து தேர்ந்து விடுகின்றன. இந்தச் சூழ்நிலையில் இந்த மனிதரின் சந்திப்பும் அது தான்.

என்னை உலுப்பிவிட்டு அவன் கைகளைச் சடுதியாய்ப் பற்றிப்பிடித்தேன்.

'கள்ளா.. ஊரை ஏமாற்றிறியே'?

'யார்கள்ளன்'?

'நீ......இந்தக் காவி வேஷம்'

'பொய்'

'எது பொய்'? நான் கைகளை நெருடி அறைய முயன்றேன்.

வேகமாய் அவன் சொன்ஞன்.

உனக்கென்ன. அவனிட்டை எடுப்பான்—நீ யார் கேக்க'?

என்ன?

'அவனிட்டை எடுப்பன்......உனக்கென்ன'?

ஸ்தம்பித்து நின்றேன். கைகள் தானய்ச் சோர்ந்தது எனக்குப் புரிந்தது அவனுக்குப் புரிந்ததோ என்னவோ? அவன் போய் விட்டான்.

சலங்கை ஒலி எழுந்து தெருவைத் தொட்டது.

## தமிழ் தொழிலாளர்களுக்கு....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சவாரி விடும் இத்தகையவர்களினல் தங்களுக்கு எவ்வித பிரயோசனமுமில்லை யென்பதை தொழிலாளர்கள் நன்ருக உணர வேண்டும்.'

இலங்கை பஸ் தொழிலாளர் கழகத்தின் நிர்வாகச் செயலாளர் வழக்குரைஞர் திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் கூறியதாவது:

'தொழிலாளர்களின் நண்பர்கள் என்றும் மார்க்சியவாதிகள் என்றும் கூறித்திரிந்தோர், தமிழ் பேசும் மக்கள், சிங்கள மக்கள் என்று இனவாதம் பேசினர்கள். இதுதான் மார்க்சியமா என்று கேட்கவிரும்புகிறேன். பல சந்தர்ப்பங்களில் இவர்களின் சுய ருபங்களைக் கண்டு விடடோம். இனியும் இவர்களை நம்பி ஏமாற நாம் தயார் இல்லை. நமக்கு என்று மொழிவழித் தொழிற் சங்கங்களை உருவாக்கி எம் உரிமைகளைப் பெற உழைப்போம்.'

ஆசிரியர் திரு. டொ. சை. க. வணசிங்க பேசுகையில் கூறியதாவது:

'சென்ற தேர்தலின் பின்னர் மட்டக்களப்புஇ.போ.ச. டிப்போவிலுள்ள ஊழியர்கள் பலர் மேல் அதிகாரிகளால் அரசியல் கண்ணோட்டத்தில் கணிக்கப்படுகின்றனர் இதனல், இந்தத் தொழிலாளர்களுக்கு இன்னல் பல ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும்'

மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை, திரு. சிவலிங்கம், ஜே. இராசநாயகம், வீ. பாலசிங்கம் ஆகியோர் பேசிய பின்னர், திரு. எஸ். அந்தோனிப் பிள்ளை நன்றியுரை கூறினர்.

பின் வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை, துணைத்தலைவர் திரு. எம். திவாகராசா, செயலாளர் ஐ. சிவலிங்கம், பொருளாளர் ஜனப் கே. நயினு ஏழுபேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## சடங்கு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

படுக்கையை அன்னலட்சுமி போட்டிருந்தாள்.

எல்லோரும் படுத்து விட்டார்கள். பின்னேர நித்திரையால், இப்ப நித்திரை சுறுக்கா வரமாட்டுது என்ற எண்ணம் ஊர்ந்து அவருடைய மனதை அலைக்கழிக்கின்றது. முற்றத்திலே நின்று உலாத்துகின்ருர். தூரத்திலே, ஆலவட்டங்கள் விரித்திருக்கும் பனங்கூடலுக்கு ஊடாக, இரு தினங்களில் பூரணக் கலையைப் பெற்று விடலாமென்ற களிப்புடன் சந்திரிகை தன மேனிப் பொலிவின் பாற்குடங்களைச் சரித்துச் சுகிக்கின்ருள். ஊர் சயன அன்னையின் தலாட்டிலே தூங்குகின்றது.

மாலினி பிறப்பதற்கு முன்னர், இருக்கிற லீவு முழுவதையும் எடுத்துக் கொண்டு, அடிக்கடி ஊருக்கு வந்து 'பட்சமாக' அன்னலட்சுமியுடன் கழித்த இரவுகள் மரகதப் பசுமையை இழக்காது இப்பொழுதும் அவருடைய நெஞ்சிலே குதியாட்டமிடுகின்றன...அறைக்குள்ளே அடைபட்டுக் கிடந்து, வியர்வையின் வெக்கையைத் தாங்க இயலாது என்ற உணர்வில், ஆனலும், சிறுநீர் உபவாதையைக் குறைக்கச் செல்வதாக மற்றவர்கள் நம்பவேண்டுமென்ற சாகசத்துடன், அன்னலட்சுமியுடன் வெளியேறிக் கிணற்றடிக்கு வருவார். செல்லப்பாக்கிய ஆச்சி அயர்ந்து தூங்குகின்ருள் என்பதைத் தெளிந்த பின்னர், துணி துவைக்கும் பெரிய கல்லிலே குந்தி, அன்னலட்சுமியின் வாலை உடலை அப்பியிருக்கும் குருத்துத் தசை பிழிந்து சிந்தும் அழகினை மாந்தும் வேட்கையுடன்,

'கலவிக் களியின்
மயக்கத்தால்
கலைபோய் அகலக்
கலை மதியின்
நிலவைத் துகிலென்
றெடுத்துடுக்கும்'

சோபிதத்தில் அவளுக்கு நிலவின் மங்கலொளியையே துகிலாகச் சாத்த, தன்னைத் தானே பார்க்க இயலாத வெட்கத்தின் மதாளிப்பில் அவள் விழியிதழ்கள் மூடியிருக்க, அவருடைய தோள்களிலே சாய்ந்து...நினைவுகள் உணர்ச்சிக் கயிறை முறுக்க, நேற்று நீகல் படமாளிகையில், 'நெயோன்' வெளிச்சத்தின் ஒளிச் சிதர்களை மட்டுமே துகிலென வரித்த குறுந்தசைக்குவட்டு மார் பழகிகளைப் பற்றிய நினைவுகள் குறுக்கிழையில் மின்னி மறைகின்றன.

செல்லப்பாக்கிய ஆச்சி வாழ்ந்து பெருகிய மனுஷி. இளம் பிள்ளைகளுடைய சேட்டைகளை அவள் அறிவாள், ஆனல், இப்பொழுது ...ஐந்தில் ஏதாவதொன்று திடீரென்று கண்விழித்து அம்மாவைத் தேட, அந்த அழுகுரலில் ஆச்சி எழும்பி ஏன் புள்ளை பொடிச்சி அழுகிருள் என்று குரல் கொடுக்க இணக்க நிலையிலிருந்து திடீரெனத் தன்னை விடுவித்துக் கொண்டு, அன்னலட்சுமி குற்ற உணர்வுடன் தலைகுனிவுடன் வந்து குழந்தையை அரவணைக்க...இவ்வளவு பிள்ளைகள் பிறந்த புறகு கொஞ்சம் கட்டுமட்டு வேண்டாமே?...பிள்ளைகளுக்காக எங்கடை இதுகளையும் கொஞ்சம் அடக்கவேணும்' என்று செல்லப்பாக்கிய ஆச்சி புறுபுறுத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் இப்படிப் பிடிபட்ட பிறகு அவள் 'அருக்காணி' காட்டுவதற்கு என்ன நியாயமிருக்க முடியுப்?......அந்தக் காலத்தில் அவர்களுக்கிடையில் இடம் பெறும் நீண்ட சரஸ சல்லாபநிகழ்ச்சிகள் குறைந்து விட்டன......மிகச் சுருங்கிய நேரத்தில், பரஸ்பரத் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒருவகை ஏற்பாடு. ஒருவருக்குமே திருப்தியில்லை என்றாலும், இதைப் பார்க்கிலும் திருப்திதரக்கூடிய வேறெவ்வித ஏற்பாடும் இருக்கவில்லை. எனவே, திருப்தியின்மையின் திருப்தியே பூரண திருப்தியாக அமைந்து விட்டது.

முற்றத்தில் நின்று உலாத்தியபடி மேலும் மேலும் யோசித்தால் விசர் தான் பிடிக்கும் என்ற எண்ணம் ஏற்படுகின்றது. தன்னுடைய அறைக்குத் திரும்புகின்ருர்.

ஓடுபயணஞ் செய்ய உதவியாக இருக்கும் அவருடைய 'கிற்பாக்'கிறகுள் எப்பொழுதும் இரண்டு ஆங்கிலப் புத்தகங்கள் இருக்கின்றன. அவற்றை எப்பொழுது 'ஃபேவ்' மெண்டில் வாங்கினர் என்பது அவருக்கே ஞாபகமில்லை. எதற்கும் கைகாவலாக அவற்றை வைத்திருக்கின்ருர். பயணம் சுவராஸ்யமாக அமையாது போனல், ஒன்றின் பக்கங்களிலே விழிகளைப் புதைத்து இயல்பான தனிமையுடன் ஒன்றிவிட அவை உதவியிருக்கின்றன. சில சமயம் நித்திரை வராது போனல் புத்தகங்களுள் ஒன்றை எடுத்து வாசிக்கத் தொடங்குவார். வாசிப்பில் கண்கள் களைப்புக் கொள்ள அவர் தானகவே துயின்று விடுவார். அந்தப் புத்தகங்களுள் ஒன்றைத் தானும் அவர் முழுசாக வாசித்து முடிக்கவில்லை; வாசித்து முடிக்க வேண்டுமென்ற சுவாரஸ்யம் இன்னமும் ஏற்படவில்லை.

தூக்கம் வராததினல், இப்பொழுது ஒரு புத்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்குகிருர். இன்று அந்தப் 'பாச்சா' பலிக்கவில்லை. நினைவுகள் ஒன்றுடன் ஒன்று உறவாட மறுத்தன. நேரம் நத்தையாக ஊர்ந்து எரிச்சல் உணர்வை ஏற்படுத்துகின்றது. புத்தகத்தால் விளக்கை அமித்துவிட்டுக் கண்களை மூடிக்கொள்ளுகிருர்.

தூக்கத்தை வாலாயப் படுத்த செந்தில்நாதன் எவ்வளவோ பிரயாசைப்பட்டது உண்மைதான். ஆனல், தூங்க வேண்டுமென்று அவர் அதிகம் விரும்ப விரும்ப, தசை உணர்ச்சிகள் என்னும் கிறுவன் குரங்கு தனிமையிலும் இருளிலும் அவருடைய மனத்தை அதிகம் அதிகமாக அலைக்கழிக்கின்றது.

அன்னலட்சுமி 'உசுப்பிற சிலமனை'யும் காணவில்லை. 'பீடா குடுத்த குறிப்பைக் கூட விளங்காமல தூங்கிருளோ?' மனம் அங்கலாய்க்கின்றது.

பொறுமையை இழந்த நிலையில் செந்தில்நாதன் தன்னுடைய அறைக் கதவைத் திறந்து கொண்டு மாலுக்குள் வருகின்ருர்.


வளரும்




முழு நீள அறிவியல் விசித்திரக் கதை

# மண்ணிற்கு மேலே . .

ஸ்டெலின் மீண்டும் மயக்கம் தெளிந்த பொழுது அவன் ஒரு வயல் வெளியிலே கிடத்தப் பட்டிருந்தான். சூரியனது கதிர்கள் தொடர்ந்து தம் வெப்பத்தைச் செலுத்திய காரணத்தினால் அவனது சட்டைகள் மடமடப்பாகச் சலவை செய்யப்பட்ட ஆடைகள் போன்று குத்திட்டு நின்றன. சட்டையிலே ஒட்டிக்கொண்டிருந்த மண்ணைத் தட்டி விட்டு எழுந்தான் ஸ்டெலின்; அவன் சுற்று முற்றும் பார்த்த பொழுது அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது. அவனது தந்தை அவனிற்கு அருகிலே மயக்க நிலையிலே கிடத்தப் பட்டிருந்தார். சில வேளை இறந்து விட்டாரோ என்ற எண்ணத்தினால் அவரது மூக்கிலே கையை வைத்துப் பார்த்தான், ஸ்டெலின்; சுவாசமிருந்தது. ஸ்டெலின் பெருமூச்சு விட்டான்.

'இவரை என்னுடனேயே கொண்டு வந்து கிடத்தி விட்டுப் போனவர்களும் அந்தப் பறக்கும் தட்டுப் பைசாசங்கள் தான்' என்று எண்ணிக் கொண்டான்; தந்தையைக் கொல்லாமல் உயிருடன் விட்டார்களே என்பது அவனுக்குப் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. தந்தையை அணுகி அவரைத் தட்டி எழுப்பினான்.

சாதாரணமாகத் தூக்க நிலையிலே இருந்துவிழிப்பவர் போல எழுந்தார், மோல்டன்; ஸ்டெலினை அருகிலே கண்டதும், 'நன்றி தம்பி! நல்ல சமயத்திலே எழுப்பி விட்டாய்! பிரயாணம் செய்வதற்கு வெகு தூரம் இருக்கிறது. ஆனால் காலமோ சிறிது தான் இருக்கிறது' என்று கூறினார்.

ஸ்டெலின் விழித்தான். 'இதென்ன எனக்கு நன்றி செலுத்துகிறீரே! மகன் [illegible]ந்தைக்குச் செய்வதற்கும் [illegible] சொல்வதா? அம்மா [illegible] போடும் போது [illegible]சொல்கிறேமா, இல் [illegible] என்று பல வாறாக [illegible]னமிட்டான், ஸ்டெ[illegible] 'என்ன தம்பி யோசிக்[illegible]ர்? இது யாருடைய வயல்? ஏன் இப்படி எரிந்து போய் இருக்கிறது' என்று கேட்டார், மோல்டன்.

ஸ்டெலின் சுற்று முற்றும் நோக்கினான். அந்த வயல் மோல்டனது வயல் தான். பறக்கும் தட்டில் இறங்கியவனின் எறிவெடிகுண்டினால் பஸ்பமாக்கப் பட்ட வயல் தான் அது. அதைக்கூட அறியாமல் பேசுகிறாரா மோல்டன்? ஸ்டெலின் திகைப்புடன், 'என்ன பேசுகிறீர்கள்?... இதற்கு முன்பு நீங்கள் இந்த வயலைப் பார்த்ததில்லையா? ஒன்றுமே அறியாதவர்கள் போலப் பேசுகிறீர்களே;' என்று மோல்டனிடம் கேட்டான்.

அதைக்கேட்ட மோல்டன் பன்மடங்கு திகைப்பு முகத்திலே தெரிய, 'என்ன தம்பி கூறுகிறாய்? எனக்கென்ன இந்த வயலைப்பற்றித் தெரியும்? நான், ஊர் ஊராகத் திரியும் நாடோடிக் கவிஞன், தம்பி!...என்னை நீ முன்னம் எங்காவது பார்த்திருக்கிறாயா?' என்று கேட்டார். ஸ்டெலின் மூளை சிதறுவது போலிருந்தது; 'இவர் எனது தந்தை இல்லையா? இவரது பேச்சு முற்றிலும் புதுவிதமாயிருக்கிறதே; என்னைப் பற்றி தெரியாதது போலல்லவா பேசுகிறார்! சில சமயம் பைத்தியம் பிடித்திருக்கலாம்; ஆனால் பைத்தியம் பிடித்தவர்கள் சுற்றத்தாரை மறப்பதில்லையே! சில சமயம் இவர்வேறுயாராவது ஆளாக இருக்கலாமோ? ஹிட்லரைப் போலப் பதின்மூன்று பேர் உலாவியதாகக் கூறப்படுகிறதே; சில சமயம் அது போல இவரும் வேறு யாராவது ஆளாக இருக்கலாமா? ஆனால் இவ்வளவு ஒற்றுமை இருக்க முடியுமா? சிந்தித்த ஸ்டெலினுக்கு ஒரு யோசனை தோன்றியது. ஜப்பானிய போரிலே ஈடுபட்ட பொழுது எதிரிகளின் குண்டொன்று அவரது கால் பாதத்திலே துளைத்துச்சென்றதால் அது உண்டாக்கிய அடையாளம் மாறாத வடுவாக அமைந்திருந்தது. இப்பொழுது மோல்டன் (?) நீளக்கால்சட்டை அணிந்திருந்ததனால் அவரது காலின் கீழ்ப்பாகம் மறைக்கப் பட்டிருந்தது. எனவே ஸ்டெலின் அவரை நோக்கி, 'புழுதி அதிகமாக இருக்கிறது! நீளக்கால்சட்டையின் கால்ப் பாகத்தை மடித்து விட்டுக் கொள்ளுங்கள்' என்றான்.

'நல்லது சொன்னாய்தம்பி!' என்றவாறே அவர் அதை உயர்த்தி மடித்துக் கொண்டார். இப்பொழுது காலிலே அந்த அடையாளம் குன்றின் மேல் விளக்குப் போலத் தெரிந்தது. அதைக் கண்டதும் ஸ்டெலினிற்கு இருந்த சிறிது சந்தேகமும் அறவே ஒழிந்து போயிற்று. சந்தேகமில்லை, அவர் மோல்டன் தான்! ஆனால் அவரது மனத்தை மனோதத்துவ முறை மூலம் அந்த மர்ம மனிதர்கள் கடந்த காலச் சம்பவத்தை மறக்கச்செய்து புதிய எண்ணங்களைப்புகுத்தி விட்டார்கள். இனியும் மனோதத்துவத்தையே கையாண்டு மீண்டும் மோல்டனைப் பழைய மனிதனாக்கி விடலாம். ஆனால் அந்த "மர்ம மனிதர்கள்" எந்த முறையைக் கையாண்டார்களோ அதே முறையை அறிந்து அதனையே திருப்பிக்கையாள வேண்டும். இல்லாவிட்டால் மோல்டன் புதிய 'நாடோடி' யாகவே இருப்பாரேயன்றிப் பழைய விவசாயியாக மாற மாட்டார். அவரது மனதை மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கிடையில் யாராவது ஏதாவது சொல்லி அவரைக் குழப்பினால் அவருடைய மனம் முழுவதும் குழம்பிப் பழைய நிலையை அடையாமலேயே போய் விடலாம். இது கல்வியறிவுடைய ஸ்டெலினுக்கு நிச்சயமாகத் தெளிவாக விளங்கிவிட்டது.

ஸ்டெலின் சோகத்துடன் மோல்டனை நோக்கி 'உங்களுக்கு மனைவி மக்கள் இல்லையா'? என்று கேட்டான்.

**அரியாலையூர் த. இந்திரலிங்கம்**

மோல்டனின் மன நிலையை அவன் அறிய வேண்டும் அல்லவா! 'எவருமே இல்லை! இப்பொழுது ஒரு வேலை கிடைத்தாலும் போதும்... அங்கேயே தங்கத் தயார்!' என்றார், மோல்டன். அவருடைய மனம் நன்றாக மாறி விட்டது. ஸ்டெலினின் மனம் ஒரு கணம் மகிழ்ந்தது. ஸ்டெலின், 'இந்த வயல் எங்களுடையதுதான்... திடீரென்று தீப்பற்றி எரிந்து விட்டது... இதனைத் திருத்தி மீண்டும் பயிர் விளைவிக்க வேண்டும்... நீங்கள்சம்மதித்தால் நீங்களே இந்த வயலுக்கு வேலையாளாக வரலாம்... எமது வீட்டிலேயே உணவும், உறையுளும்கிடைக்கும்' என்று கேட்டு விட்டுச் சம்மதிப்பாரா என்ற கேள்வி முகத்திலே தொங்க, மோல்டனை நோக்கினான். 'ஆஹா! அருமையான சூழ்நிலை... இங்கே இருந்தே ஆயிரம் கவிகள் பாடித் தள்ளி விடலாமே?' என்றார் மோல்டன். அவருடைய உள்ளம் மகிழ்ச்சியாற் துள்ளியது. 'அப்படியானால் நமது வீட்டிற்கு வாருங்கள்' என்று கூறி நடந்தான், ஸ்டெலின். மோல்டனைத் தமது வீட்டிலேயே வைத்திருந்தால், ஒரு மனோ தத்துவ நிபுணரின் மூலம் அவரது மனத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வர முடியும் என்ற எண்ணம் ஸ்டெலினின் உள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்டது.




# தமிழ் எங்கள் மொழி

—கே. என். ராஜா—

தமிழே எங்கள் மொழியாகும்—அது
தாய்க்குலம் தந்த மொழியாகும்
அமிழ்தம் அதனது சுவையாகும்—அது
அவனியி லழியா மொழியாகும்.

தமிழே எங்கள் மொழியாகும்—அது
தரணியி லுயர்ந்த மொழியாகும்
அமிழ்தே எங்கள் வழியாகும்—அது
அவனியிற் சிறந்த வழியாகும்.

தமிழே எங்கள் பேறுகும்—அது
தலத்தினில் உயர்ந்த பேறுகும்
அமிழ்தம் எங்கள் உணவாகும்—அது
அமரர் தந்த உணவாகும்.

# விக்டோறியா நீர் வீழ்ச்சி

—கியூபட், செலர்—

உலகின் பெரிய இயற்கை அதிசயங்களுள் ஒன்றாக ஸாம்பி ஆற்றிலுள்ள விக்டோறியா நீர்வீழ்ச்சி விளங்குகின்றது. ஸாம்பி நதியின் காரணமாக ஸம்பியா எனப்பெயர் பெற்று இன்று சுதந்திர முடிக்குட்பட்டு விளங்கும் றொடிசியா நாட்டிலுள்ள ஸாம்பி நதியிலும் பிரபல மடைந்திருக்கிறது அதிலுள்ள விக்டோறியா நீர்வீழ்ச்சி.

இந் நீர் வீழ்ச்சியை பிரிட்டிஸ் மதபிரசாரப்பிரயாணி டேவிட் லிவிங்ரன் 1852-ம் ஆண்டு மேமாதம் தொடக்கம் 1856-ஜூன் வரை நிகழ்த்திய கண்டு பிடிப்புப் பிரயாணத்தின் போது 1855-ம் ஆண்டு கண்டு பிடித்தார். இதற்கு விக்டோறியா மகாராணியின் நாமம் சூட்டப்பட்டது.

தென் ஆபிரிக்காவில் ஸாம்பி நதி ஓர் பெரிய நதியாக விளங்குகின்றது. 2000 மைல்கள் நீளமான இந் நதியில் 573,000 சதுர மைலிலுள்ள நீர் வந்து சேருகின்றது. நீர் வீழ்ச்சியிடத்தில் ஆறு ஒரு மைலுக்கு அகன்று இருக்கின்றது. நீர் வீழ்ச்சி இடம் மட்டத்திலிருந்து 2,850 மைல்களுக்கு உயர்ந்திருக்கின்றது. இந் நீர் வீழ்ச்சி 420 அடி உயரத்திலிருந்து ஓர் பிளவினுள் விழுகின்றது. இப்பிளவு ஒரு மைல் நீளமும் 80 யார் அகலமுமாகும். இங்கிருந்து நீர் 30 யார் நீளமும் 400 அடி ஆழமுமான கணவாயிலிருந்து தப்பி வளைந்த வடிவத்தில் செல்கின்றது.

## மிகப் பெரிய நாணயச் சாலை

அன்றாடம் நமக்கு வேண்டிய பொருட்களை வாங்க நாணயம் பயன்படுகிறது. தங்கம், வெள்ளி, நிக்கல், போன்ற உலோகங்களைப் பயன்படுத்தி நாணயங்களை அச்சடிக்கிறார்கள். உலகிலேயே பெரிய நாணயச் சாலை எது தெரியுமா?

லண்டனில் உள்ள இங்கிலாந்து அரசாங்கத்தின் நாணயச் சாலைதான் உலகிலேயே மிகப்பெரியது இங்கு 3-ம் நூற்றாண்டில் இருந்தே நாணயம் அச்சிடப்படுகிறது. 1870-ம் நூற்றாண்டில் இந்த சாலையை அரசாங்கம் எடுத்துக் கொண்டது. இங்கு 800 பேர் வேலை செய்கின்றார்கள். நிமிடத்தில் 100 நாணயம் தயாராகிறது வெளி நாடுகளுக்கு தேவையான நாணயங்களையும் அச்சிட்டு கொடுக்கின்றார்கள். சென்ற 1964-ல் மட்டும் ரூபா 100 கோடி மதிப்புள்ள நாணயங்கள் அச்சிடப்பட்டன.

—இரா. கைலைநாதன்.

## பெரிய பறவை

குருவி, மைனா, கிளி, மயில் போன்ற பறவைகளை நீங்கள் பார்த்து இருப்பீர்கள். சிறிய பறவை சிட்டு குருவிதான் என்றும் பெரிய பறவை மயில் என்றும் சொல்வீர்கள். ஆனால் உலகத்திலேயே பெரிய பறவை எது தெரியுமா உங்களுக்கு?

'ஆல்ப்பராஸ்' என்ற கடல் பறவைதான், அட்லாண்டிக் கடல் தவிர மற்ற எல்லாக் கடல்களிலும் இப்பறவை வசிக்கிறது. இதன் எடை 18 பவுண்டு! இறக்கையின் நீளம் சுமார் 13 அடி. மிக அதிக தூரம் பறக்கும் பறவையும் இதுதான்! கடலில் இடை விடாமல் பல நாட்கள் பறந்து சென்று கொண்டே இருக்கும். மிருகங்களைப் பிடித்து தின்னும். கடலில் நீந்துவதற்கேற்ப கால்களில் சவ்வு இருக்கும். முட்டையிடும் காலத்தில் மட்டுமே கடற்கரைக்கு வரும்!

—இரா. கைலைநாதன்.

## கடல் அலை மின்சாரம்

உலகில் எங்கே கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. என்று தெரியுமா உங்களுக்கு?

கொரியா, அலாஸ்கா, பண்டி விரிகுடா போன்ற இயற்கை விரிகுடாக்களில் கடல் அலையில் இருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இங்கு 50 அடி உயரத்திற்கு அலை உண்டாகும். அலைகள் அவ்வளவு உயரத்துக்கு வராத போது மின்சாரம் உண்டாவதில்லை. ஆகவே, அலை மோதும் போது, அந்நீரை உயரமான நீர்த் தேக்கங்களில் தேக்கிக் கொண்டு தேவைப்படும்போது தண்ணீரை சுழல் சக்கரங்கள் மூலம் தாழ்வாக உள்ள நீர் தேக்கங்களுக்கு பாச்சுவார்கள். அப்பொழுது மின் சக்தி உண்டாகிறது. இதை சேகரித்து, அடுப்பு, விளக்கு எரிக்கவும் ரெயில் வண்டி ஓட்டவும் பயன் படுத்துகின்றார்கள்.

—இரா. கைலைநாதன்.

அலைகடலென ஆர்ப்பரித்து எழும் ரசிகர்களின் அமோக பாராட்டு வெள்ளத்தில்

## ஆனந்தமாக மிதக்கும் 3வது இன்பகரமான வாரம்!

ஜெஸீமா [கிராண்பாஸ்] — ராணி [யாழ்ப்பாணம்] — ராஜேஸ்வரா [மட்டக்களப்பு] — ஆனந்தா [கம்பளை] — ஜோதி [தருமபுரம்]

கையினில் சக்தி வேலெடுங்கள்! தமிழ்க் கலையிலுள்ள களைபெடுக்கப் புறப்படுங்கள்!

பார்த்தவர்கள் வாயார மட்டுமல்ல—நெஞ்சாரப் புகழ்கின்றனர்! இதுவரை இத்தகைய கதையம்சமும் நடிப்புச் சிறப்பும் ஒருங்கே அமைந்த தமிழ்ப் படம் வந்ததில்லை என்பது அவர்களின் ஏகோபித்த தீர்ப்பு!



இது தாய்மாரும், தங்கையரும், தந்தையரும், தம்பியரும், சிறுவரும், பெரியாரும், தமிழரும் அல்லாதாரும் பார்த்துப் பயன் பெறக்கூடிய தலைசிறந்தவோர் தமிழ்த் திரைப் படம் என்று ஆயிரம் தடவை அடித்துக் கூறுவோம்!

டி. எஸ். பாலையா—ஏ. வி. எம். ராஜன—வி. எஸ். ராகவன்—வி. கே. ராமசாமி—அஞ்சலிதேவி—வசந்தி பி. ஏ.—ஜி. சகுந்தலா—நிர்மலா—கே. கண்ணன்

# என்ன தான் முடிவு

இசை: ஆர். சுதர்சனம்

பாடல்கள்: கொத்தமங்கலம் சுப்பு, மாயவநாதன்

பின்னணி: டி. எம். சௌந்தரராஜன்—சீர்காழி கோவிந்தராஜன்—பி. சுசிலா—எல். ஆர். ஈஸ்வரி

படம் பார்க்கும் ரசிகர்கு ஒரு தயவான வேண்டுகோள்! இறுதி முடிவை யாருக்கும் சொல்லாதீர்கள்! படத்தின் உயிர் நாடியே அந்த முடிவு தான்!

---

## மார்ச் 11ம் திகதி வெள்ளி முதல்



செல்லமகால் (கொழும்பு)

நெல்சன் (திருகோணமலை) — இம்பீரியல் (மட்டக்களப்பு)

ரீகல் (கண்டி) — ரீகல் (நுவரெலியா) — ரீகல் (கம்பளை)

ஆகிய திரைகளில்

சிவாஜி கணேசன், தேவிகா, நாகேஷ், பாலாஜி, மணிமாலா, ஜி. சகுந்தலா, வி. கே. ராமசாமி

நடித்த

# அன்புக் கரங்கள்

## கடைசி வாரம்

செல்லமகால் (கொழும்பு)

எம். ஜி. ஆர், ஜெயலலிதா, நாகேஷ் நம்பியார், விஜயலட்சுமி

நடித்த

# ஆயிரத்தில் ஒருவன்

## கடைசி வாரம்

கெபிட்டல் (கொட்டாஞ்சேனை)

ஜெமினி கணேசன்—தேவிகா முத்துராமன்—பாலையா

நடித்த

# வாழ்க்கைப் பட்டு

---

## குதூகலமான 3வது வாரம்!

கிங்ஸ்லி [கொழும்பு] — பிளாஸா [வெள்ளவத்தை] — நவா [தம்பனித்தெரு]

வெலிங்டன் [யாழ்ப்பாணம்] — விஜயா [மட்டக்களப்பு] — ஸ்ரீகிருஷ்ணா [திருகோணமலை]

விஜிதா [அட்டன்] — மொடேன் [பண்டாரவளை]




இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1966-ம் வருடம் மார்ச் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.